தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கரும்பு விலை: டன்னுக்கு ரூ.3500 ஆக நிர்ணயிக்க வேண்டும்

தமிழக அரசு அறிவித்துள்ள கரும்பு கொள்முதல் விலை ஏமாற்றமளிக்கிறது. டன்னுக்கு ரூ.3500 என்றாவது நிர்ணயிக்க வேண்டும் என பாமக நிறுவனர் ராமதாஸ் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை:

கரும்புக்கு நியாயமான விலை வழங்கப்பட வேண்டும் என்று விவசாயிகள் கோரிவந்த நிலையில், அரசு அறிவித்துள்ள விலை மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது.

கரும்புக்கான நியாய மற்றும் ஆதாய விலையை மத்திய அரசுதான் நிர்ணயிக்கிறது. அதன்படி மத்திய அரசின் சார்பில் ஒரு டன் கரும்புக்கு ரூ.2,100 என அறிவிக்கப்பட்டது. அத்துடன் மாநில அரசின் பரிந்துரை விலையாக ரூ.550 மட்டும் சேர்த்து வழங்கும்படி ஆணையிட்டுள்ளது.

எனவே கரும்புக்கு டன் ரூ.2,650-க்குக் கொள்முதல் செய்யப்படும் என்றும், கரும்பு விவசாயிகள் மகிழ்ச்சி அடைவர் என்றும் ஜெயலலிதா கூறியுள்ளார்.

கடந்த ஆண்டுகளை விட குறைவு: உண்மையில் கொள்முதல் விலையைக் கடந்த ஆண்டுகளைவிட இந்த ஆண்டு ஜெயலலிதா குறைத்து வழங்கியுள்ளார்.

கடந்த இரு ஆண்டுகளாக ஒரு டன் கரும்புக்கு மாநில அரசின் பரிந்துரை விலையாக ரூ.650 அறிவிக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது ரூ.550-ஆக குறைத்திருப்பதன் மூலம், ஆலை அதிபர்களுக்கு சாதகமாகச் செயல்பட்டு, விவசாயிகளுக்கு மிகப்பெரிய துரோகத்தை தமிழக அரசு செய்துள்ளது.

எனவே,விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு கரும்புக்கான கொள்முதல் விலையை டன்னுக்கு குறைந்தது ரூ.3,500-ஆக நிர்ணயிக்க தமிழக அரசு முன்வர வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

### ரூ. 17.91 லட்சத்தில் விவசாய கருவிகள்

காஞ்சிபுரத்தில் ரூ. 17.91 லட்சம் மதிப்பீட்டிலான விவசாயக் கருவிகள் ரூ. 6 லட்சம் மானியத்தில் அமைச்சர் டி.கே.எம். சின்னையா ஞாயிற்றுக்கிழமை வழங்கினார்.

காஞ்சிபுரம் மாவட்ட வேளாண்மை பொறியியல் துறை சார்பில், காஞ்சிபுரம் கோட்டத்தில் விவசாய பெருமக்களுக்கு மானிய விலையில் விவசாயக் கருவிகளை வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2013 - 2014-ஆம் நிதியாண்டில் 5 உழுவை இயந்திரம், 1 நெல் நடவு இயந்திரம், 4 தெளிப்பான் உள்பட 11 விவசாயக் கருவிகள் ரூ. 6 லட்சம் மானியத்தில் ரூ.17.91 லட்சம் மதிப்பில் ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டது.

அமைச்சர் டி.கே.எம். சின்னையா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விவசாயக் கருவிகளை விவசாய பெருமக்களுக்கு வழங்கினார். நிகழ்ச்சியில், காஞ்சிபுரம் சட்டப்பேரவை உறுப்பினர் வி. சோமசுந்தரம், உதவி செயற் பொறியாளர் ரங்கநாதன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### கரும்பு கொள்முதல் விலை உயர்வு ஏமாற்றம்: விவசாயிகள் கருத்து

கரும்பு கொள்முதல் விலையை உயர்த்தி உத்தரவிட்டுள்ள தமிழக அரசின் உத்தரவு ஏமாற்றம் அளிப்பதாக காஞ்சிபுரம் அனைத்து விவசாயிகள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

2013-2014-ஆம் ஆண்டுக்கான கரும்பு கொள்முதல் விலையை டன் ஒன்றுக்கு மத்திய அரசு ரூ.2,100-ஆக நிர்ணயம் செய்தது.

இப்போது மத்திய அரசு அறிவித்த விலையைக் காட்டிலும், 2013-2014-ஆம் ஆண்டுக்கான மாநில அரசின் பரிந்துரை விலையாக டன் ஒன்றுக்கு போக்குவரத்துச் செலவு ரூ. 100 உள்பட ரூ. 550 உயர்த்தி டன் ஒன்றுக்கு ரூ. 2,650-ஆக தமிழக அரசு சனிக்கிழமை உத்தரவிட்டுள்ளது. இதற்கு காஞ்சிபுரம்

மாவட்ட விவசாயிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இது குறித்து காஞ்சிபுரம் மாவட்ட அனைத்து பயிர் விவசாயிகள் சங்கச் செயலரும், மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை உற்பத்தியாளர்கள் சங்க துணைச் செயலருமான குருமூர்த்தி கூறியது: கடந்த 2011 சட்டப்பேரவைத் தேர்தலின்போது, ஆட்சிக்கு வந்தால் கரும்பு கொள்முதல் விலையை டன் ஒன்றுக்கு ரூ. 3 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்று அதிமுக தனது தேர்தல் அறிக்கையில் அறிவித்தது.

அப்போது நடந்த தேர்தலில் வெற்றி பெற்ற அதிமுக அரசு தனது தேர்தல் அறிக்கையில் கூறியது போல கரும்பு கொள்முதல் விலையை உயர்த்த நடவடிக்கை எடுக்கவில்லை.  மாறாக 2011-2012-ஆம் நிதியாண்டில் கரும்பு டன்னுக்கு ரூ. 2,100 நிர்ணயம் செய்தது.

2012 - 2013-ஆம் நிதியாண்டில் 2,350-ஆக நிர்ணயம் செய்தது. இப்போது ரூ. 2,650-ஆக உயர்த்தியுள்ளதாக அறிவித்துள்ளது. ஆக, அதிமுக தலைமையிலான ஆட்சி அமைக்கப்பட்டு இரண்டரை ஆண்டுகள் முடிவடைந்துள்ள நிலையிலும் கூட தனது தேர்தல் அறிக்கையை நிறைவேற்ற முன்வராதது ஏமாற்றத்தையே அளிக்கிறது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 15 ஆயிரம் ஹெக்டேர் நிலத்தில் 5 ஆயிரம் விவசாயிகள் கரும்பு விவசாயம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

## நிலக்கடலை சாகுபடி: விவசாயிகளுக்கு பயிற்சி

நிலக்கடலை சாகுபடியில் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து, பண்ணைப் பள்ளி மூலம் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

திண்டுக்கல் வட்டம், லட்சுமணம்பட்டியில் அட்மா திட்டத்தின் கீழ், நிலக்கடலை பயிர் சாகுபடி குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் மதுரை வேளாண்மைக் கல்லூரி உழவியல் துறை பேராசிரியர் ஜெ.சுந்தர் சிங் ராஜபாண்டியன், தொழில்நுட்பங்கள் குறித்து சிறப்புரை நிகழ்த்தினார்.

பண்ணைப் பள்ளி திட்டம் குறித்து வேளாண்மைத் துறை துணை இயக்குநர் உழவர் பயிற்சி மையம் (பொறுப்பு) கி.செல்வராஜ் தெரிவித்தது: நிலக்கடலைப்

பயிரில் விதைப்பு முதல் அறுவடை வரை 6 கட்ட பயிற்சி வழங்கப்படும். தரமான விதை தேர்வு, விதை செய் நேர்த்தி, பயிர் பாதுகாப்புக்கு தேவையான மருந்துகளை பரிந்துரைத்தல் உள்ளிட்ட ஆலோசனைகளும் வழங்கப்படும். கூடுதல் மகசூல் பெற, ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் உரத்தினை 2 ஆவது களை எடுப்பின்போது பயன்படுத்த வேண்டும். இதன்மூலம் விவசாயிகளுக்கு ஏற்படும் பொருளாதார சேதங்களை தவிர்க்கலாம் என்றார்.

இந்த பயிற்சி முகாமில் பங்கேற்ற 25 விவசாயிகளுக்கும், கையேடு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் திண்டுக்கல் வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் அருள் அரசு, அலுவலர்கள் சின்னச்சாமி, கிருஷ்ணகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**பால் கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ.30 வழங்க வலியுறுத்தல்**

ஆவினுக்கு கொள்முதல் செய்யப்படும் பசும்பாலுக்கு லிட்டருக்கு ரூ.30 என உயர்த்தி வழங்க வேண்டும் என கோவை மாவட்ட பால் உற்பத்தியாளர் நலச் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக முதல்வர் ஜெயலலிதாவுக்கு, சங்கத்தின் காப்பாளர் எஸ்.ஆர்.ராஜகோபால் ஞாயிற்றுக்கிழமை எழுதியுள்ள கடித விவரம்:

கோவை மற்றும் திருப்பூர் மாவட்டத்தைச் சார்ந்த சுமார் 25,000-க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர்கள், சுமார் 650-க்கும் மேற்பட்ட கிராம பால் கூட்டுறவு சங்கங்களின் மூலம் கோவை மாவட்ட ஆவினுக்கு பால் வழங்கி வருகின்றனர். வழக்கமாக மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் பால் வரத்து குறையும். ஆனால், இந்த ஆண்டு ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சியினால் பசுந்தீவனம் மற்றும் உலர் தீவனம் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அத்துடன் கலப்புத் தீவன விலையும் மிகவும் அதிகரித்து உள்ளது. இதனால் பால் உற்பத்தி கடுமையாக குறைந்துள்ளது. மாவட்ட ஆவினுக்கு கடந்த ஆண்டு இதே காலத்தில் தினமும் 2.70 லட்சம் லிட்டர் வரத்து இருந்த நிலை மாறி, தற்போது 2.20 லட்சம் லிட்டராக குறைந்துவிட்டது.

தற்போது நிலவி வரும் தீவன விலை உயர்வு, பணியாளர்களின் சம்பளம், கறவை மாடுகளின் விலை, மருத்துவச் செலவு ஆகியவற்றை கணக்கிட்டால், 4.2 சதவீத கொழுப்புச் சத்து, 8.3 சதவீத இதர சத்துகள் உள்ள ஒரு லிட்டர் பசும்பாலுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் விலை ரூ.19.40 எந்தவிதத்திலும் போதாது.

கேரள அரசின் மில்மா கூட்டுறவு பால் சங்கங்களில் லிட்டருக்கு ரூ.27.85 வழங்கி வருகிறார்கள். தமிழகத்தில் உள்ள சில தனியார் நிறுவனங்கள் சமீபத்தில் விற்பனை விலையை உயர்த்தியதுடன், பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டருக்கு ரூ.24 வரை கொடுத்து கொள்முதல் செய்கிறார்கள்.

எனவே, ஆவினுக்கு கொள்முதல் செய்யப்படும் பசும்பாலுக்கு லிட்டருக்கு ரூ.30, எருமைப் பாலுக்கு லிட்டருக்கு ரூ.35 வழங்க வேண்டும்.

பால் கொள்முதல் விலையை உடனடியாக உயர்த்தி வழங்க அரசு ஆணையிட வேண்டும். இதுதொடர்பாக பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்கத்தின் நிர்வாகிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

மேலும் கிடாரி கன்று வளர்ப்பு மானியம், கிராம கூட்டுறவு சங்க ஊழியர்களின் ஊதிய நிர்ணயம், ஆவினுக்குப் பால் வழங்கும் அனைத்து கறவை மாடுகளுக்கும் இலவச காப்பீட்டுத் திட்டம் போன்ற பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என தெரிவித்துள்ளார்.

**அவிநாசியில் பனை, தென்னை தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்**

தமிழ்நாடு பனை, தென்னை தொழிலாளர்கள் சங்கம், தமிழ்நாடு விவசாயிகள் கூட்டமைப்பினர் அவிநாசி புதிய பேருந்து நிலையத்தில் சனிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் .

இந்த ஆர்ப்பாட்டத்தில், கள் இறக்குவது தொடர்பாக நீதிபதி சிவசுப்பிரமணியத்தின் அறிக்கையை வெளியிட வேண்டும். சட்டப்பேரவைத் தேர்தலில் கள் சம்பந்தமாக அறிவித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தில், பனை, தென்னை தொழிலாளர்கள் சங்க மாநிலத் தலைவர் முருகன் தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் சென்னியப்பன், பாரதிய கிஷான் சங்க மாவட்டத் தலைவர் வேலுசாமி, மாநில துணைத் தலைவர் மணி, மாநில அமைப்பாளர் இல.கதிரேசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இதில் 10 பெண்கள் உள்பட 70-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்

**வேளாண் இயந்திரங்களை இயக்க விவசாயிகளுக்கு இலவசப் பயிற்சி**

திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் அளிக்கப்படும் நவீன வேளாண் இயந்திரங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் தொடர்பான ஒரு வாரகால இலவசப் பயிற்சியில் பங்கேற்று பயன்பெறுமாறு விவசாயிகளுக்கு அதிகாரிகள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இப்பயிற்சி முகாமில் 20 விவசாயிகளுக்கு ஒரு வார கால சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும்.

பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு மதிய உணவு, போக்குவரத்துச் செலவு வழங்கப்படும்.

18 முதல் 40 வயது வரையுள்ள கிராமப்புற இளைஞர்கள், விவசாயிகள் இப்பயிற்சியில் கலந்து கொள்ளலாம்.

மொத்தம் 5 ஒரு வார காலப் பயிற்சிகள் அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை, ஆரணி வேளாண் பொறியியல் பிரிவு உப கோட்டங்கள் சார்பில் நடத்தப்படும் இப்பயிற்சியில் அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொள்ளலாம்.

திருவண்ணாமலை, போளூர், செங்கம், தண்டராம்பட்டு, கலசப்பாக்கம் வட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் திருவண்ணாமலை, வேங்கிக்கால், குறிஞ்சி நகர், பசுவண்ணன் நகர், நெ.413-ல் உள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தையும், ஆரணி, வந்தவாசி, செய்யாறு வட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் ஆரணி சைதாப்பேட்டை, கார்த்திகேயன் சாலை, நெ.67-ல் உள்ள

வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தையும் அணுகி இம் மாதம் 31-ம் தேதிக்குள் விண்ணப்பித்து பயன்பெறலாம் என்று வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**ரூ.50 லட்சத்தில் கூடுதல் வேளாண் கிடங்கு: எம்எல்ஏ தகவல்**

செங்கம் அருகே பெரியகுளம் கிராமத்தில் ரூ. 50 லட்சத்தில் கூடுதல் வேளாண்மைக் கிடங்கு அமைக்கப்படும் என எம்எல்ஏ அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி கூறினார்.

செங்கத்தை அடுத்த புதுப்பாளையம் ஒன்றியம் மேல்படூர் ஊராட்சிக்கு உள்பட்ட பெரியகுளம் கிராமத்தில் தமிழக அரசின் விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், பேன் வழங்கும் நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திருவண்ணாமலை மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் எம்.எஸ்.நைனாக்கண்ணு தலைமை வகித்தார். மாவட்ட வணிகவரித்துறை ஆலோசனைக் குழு உறுப்பினர் டி.சுந்தரமூர்த்தி, புதுப்பாளையம் பேரூராட்சி தலைவர் சித்ரா கார்த்திகேயன், வட்டார வளர்ச்சி அலுவலர் லட்சுமி நரசிம்மன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி மன்றத் தலைவர் சங்கீதா வரவேற்றார்.

கலசப்பாக்கம் தொகுதி எம்எல்ஏ அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி கலந்துகொண்டு 571 குடும்பங்களுக்கு அரசின் விலையில்லா பொருள்களை வழங்கிப் பேசியதாவது: ஊராட்சி ஒன்றிய பொதுநிதியில் இருந்து ரூ.18 லட்சம் செலவில் பல்வேறு திட்டப்பணிகள் செய்யப்பட்டுள்ளது. பெரியகுளம் பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று பெரியகுளம் கிராமத்தில் ரூ.50 லட்சம் செலவில் கூடுதல் வேளாண்மை கிடங்கு கட்டப்படும் என்றார்.

உடன் வட்டாட்சியர் பெ.ராஜலட்சுமி, துரிஞ்சாவரம் ஒன்றியக் குழுத் தலைவர் கோவிந்தராஜ், தலைவர்களின் கூட்டமைப்பு பொருளாளர் பழனிராஜ், இளைஞர் பாசறை இணைச் செயலாளர் சக்தி, புதுப்பாளையம் பேரூராட்சி துணைத் தலைவர் குமார் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

**வயல்களில் வேளாண் இணை இயக்குநர் ஆய்வு**

திருவண்ணாமலை அருகே வயல்களில், மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் நா.பன்னீர்செல்வம் ஆய்வு மேற்கொண்டார்.

திருவண்ணாமலையை அடுத்த வேங்கிக்கால் கிராமத்தில் உள்ள விவசாயி எ.எ.குப்புசாமி 11 ஏக்கரில் பயிரிட்டுள்ள திருந்திய நெல் சாகுபடி முறையிலான வெள்ளைப் பொன்னி நெற்பயிரையும், கணந்தம்பூண்டி கிராமத்தில் விவசாயி ந.பாண்டுரங்கனின் வயலில் 5 ஏக்கரில் பயிரிட்டுள்ள ஏ.டீ.டி-45 ரக நெற்பயிரையும் வேளாண்மை இமை இயக்குநர் நா.பன்னீர்செல்வம் அண்மையில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், கணந்தம்பூண்டி கிராமத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சரவணன் என்பவரது நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள துவரையைப் பார்வையிட்ட இணை இயக்குநர், அதிக மகசூல் எடுப்பதற்கான அறிவுரைகளை விவசாயிக்கு வழங்கினார். இதேபோல நெற்பயிரில் கூடுதல் மகசூல் எடுக்க மேலுரம் இட வேண்டும். முறையாகப் பராமரிக்க வேண்டும் என்றும் விவசாயிகளுக்கு இணை இயக்குநர் அறிவுரை வழங்கினார்.

ஆய்வின்போது, வேளாண்மை உதவி இயக்குநர் இரா.பெரியசாமி, உதவி வேளாண்மை அலுவலர்கள் சிவக்குமார், விஸ்வநாதன், கௌஸ்ஜான் ஆகியோர் உடனிருந்தனர்.

**வேளாண் இயந்திரங்களை இயக்க விவசாயிகளுக்கு இலவசப் பயிற்சி**

திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் அளிக்கப்படும் நவீன வேளாண் இயந்திரங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல் தொடர்பான ஒரு வாரகால இலவசப் பயிற்சியில் பங்கேற்று பயன்பெறுமாறு விவசாயிகளுக்கு அதிகாரிகள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இப்பயிற்சி முகாமில் 20 விவசாயிகளுக்கு ஒரு வார கால சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும்.

பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு மதிய உணவு, போக்குவரத்துச் செலவு வழங்கப்படும்.

18 முதல் 40 வயது வரையுள்ள கிராமப்புற இளைஞர்கள், விவசாயிகள் இப்பயிற்சியில் கலந்து கொள்ளலாம்.

மொத்தம் 5 ஒரு வார காலப் பயிற்சிகள் அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை, ஆரணி வேளாண் பொறியியல் பிரிவு உப கோட்டங்கள் சார்பில் நடத்தப்படும் இப்பயிற்சியில் அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொள்ளலாம்.

திருவண்ணாமலை, போளூர், செங்கம், தண்டராம்பட்டு, கலசப்பாக்கம் வட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் திருவண்ணாமலை, வேங்கிக்கால், குறிஞ்சி நகர், பசுவண்ணன் நகர், நெ.413-ல் உள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தையும், ஆரணி, வந்தவாசி, செய்யாறு வட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் ஆரணி சைதாப்பேட்டை, கார்த்திகேயன் சாலை, நெ.67-ல் உள்ள வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தையும் அணுகி இம் மாதம் 31-ம் தேதிக்குள் விண்ணப்பித்து பயன்பெறலாம் என்று வேளாண்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## கரும்பு கொள்முதல் விலை உயர்வு ஏமாற்றம் அளிக்கிறது

கரும்பு கொள்முதல் விலையை உயர்த்தியுள்ள தமிழக அரசின் அறிவிப்பு ஏமாற்றம் அளிப்பதாக தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் எஸ்.எ.சின்னசாமி தெரிவித்தார். இதுகுறித்து ஞாயிற்றுக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை:

கரும்புக்கு டன்னுக்கு ரூ. 2,650-ஆக உயர்த்தி முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். இது  நடப்பு ஆண்டுக்கு மத்திய அரசு உயர்த்தியுள்ள விலையைவிட குறைவு. உற்பத்தி செலவு, வறட்சியால் கரும்பு விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த அறிவிப்பு ஏமாற்றம் அளிக்கிறது.

கர்நாடக அரசு சர்க்கரை ஆலைகள் அளிக்கும் விலையோடு டன்னுக்கு ரூ. 150-ம், உத்தர பிரதேசத்தில் டன்னுக்கு ரூ. 200-ம் வழங்கப்படுகிறது. எனவே, தமிழக அரசு உயர்த்தியுள்ள கரும்புக்கான கொள்முதல் விலையை மறு பரிசீலனை செய்து, கரும்பு கொள்முதல் வரி, செஸ் ஆகியவற்றை கரும்பு விலையோடு சேர்த்து வழங்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாஜக வரவேற்பு

கரும்பு டன்னுக்கு ரூ.550 அளிக்கப்பட்டதற்கு பாஜக விவசாய அணி மாவட்டச் செயலர் குழந்தை ரவி வரவேற்பு தெரிவித்துள்ளார்.

### தருமபுரி ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் பங்கேற்க முடிவு

கோரிக்கைகளை வலியுறுத்தி, வருகிற 23-ஆம் தேதி தருமபுரியில் நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டத்தில் திரளாகப் பங்கேற்பது என, விவசாயிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

தமிழக விவசாயிகள் சங்க தருமபுரி மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் அலுவலகத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. மாவட்டத் தலைவர் பி.ஆர்.செங்கோடன் தலைமை வகித்தார். செயலாளர் கே.சக்திவேல், பொருளாளர் யு.பழனி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநிலத் துணைத் தலைவர் கே.எஸ்.ஆறுமுகம் சிறப்புரையாற்றினார்.

விவசாயிகள் போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஓய்வூதியம் அளிக்க வேண்டும். கோரிக்கைகளை வலியுறுத்தி திங்கள்கிழமை (டிச.23) தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டத்தில் திரளாக பங்கேற்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட இளைஞரணிச் செயலாளர் எஸ்.எம்.சேட்டு வரவேற்றார். ஆசிரியர் ஜே.சேட்டு நன்றி கூறினார்.

### தருமபுரி ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் பங்கேற்க முடிவு

கோரிக்கைகளை வலியுறுத்தி, வருகிற 23-ஆம் தேதி தருமபுரியில் நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டத்தில் திரளாகப் பங்கேற்பது என, விவசாயிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

தமிழக விவசாயிகள் சங்க தருமபுரி மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் அலுவலகத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. மாவட்டத் தலைவர் பி.ஆர்.செங்கோடன் தலைமை வகித்தார். செயலாளர் கே.சக்திவேல், பொருளாளர் யு.பழனி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநிலத் துணைத் தலைவர் கே.எஸ்.ஆறுமுகம் சிறப்புரையாற்றினார்.

விவசாயிகள் போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஓய்வூதியம் அளிக்க வேண்டும். கோரிக்கைகளை வலியுறுத்தி திங்கள்கிழமை (டிச.23) தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டத்தில் திரளாக பங்கேற்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட இளைஞரணிச் செயலாளர் எஸ்.எம்.சேட்டு வரவேற்றார். ஆசிரியர் ஜே.சேட்டு நன்றி கூறினார்.

### கரும்பு கொள்முதல் விலை உயர்வு ஏமாற்றம் அளிக்கிறது

கரும்பு கொள்முதல் விலையை உயர்த்தியுள்ள தமிழக அரசின் அறிவிப்பு ஏமாற்றம் அளிப்பதாக தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் எஸ்.எ.சின்னசாமி தெரிவித்தார். இதுகுறித்து ஞாயிற்றுக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை:

கரும்புக்கு டன்னுக்கு ரூ. 2,650-ஆக உயர்த்தி முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். இது  நடப்பு ஆண்டுக்கு மத்திய அரசு உயர்த்தியுள்ள விலையைவிட குறைவு. உற்பத்தி செலவு, வறட்சியால் கரும்பு விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த அறிவிப்பு ஏமாற்றம் அளிக்கிறது.

கர்நாடக அரசு சர்க்கரை ஆலைகள் அளிக்கும் விலையோடு டன்னுக்கு ரூ. 150-ம், உத்தர பிரதேசத்தில் டன்னுக்கு ரூ. 200-ம் வழங்கப்படுகிறது. எனவே, தமிழக அரசு

உயர்த்தியுள்ள கரும்புக்கான கொள்முதல் விலையை மறு பரிசீலனை செய்து, கரும்பு கொள்முதல் வரி, செஸ் ஆகியவற்றை கரும்பு விலையோடு சேர்த்து வழங்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாஜக வரவேற்பு

கரும்பு டன்னுக்கு ரூ.550 அளிக்கப்பட்டதற்கு பாஜக விவசாய அணி மாவட்டச் செயலர் குழந்தை ரவி வரவேற்பு தெரிவித்துள்ளார்.

### ஆடு வளர்ப்பு பயிற்சிக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு

இளைஞர்களுக்கான ஆடு வளர்ப்பு பயிற்சிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக, இந்தியன் வங்கியின் சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனஇயக்குநர் கே.விஜயகுமார் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் சனிக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மத்திய அரசின் ஊரக வளர்ச்சித் துறையின் வழிகாட்டுதலின்படி, தமிழக அரசுடன் இணைந்து இந்தியன் வங்கியின் சார்பில், தொழில் முனைவோருக்கான ஆடு வளர்ப்பு பயிற்சி வகுப்புகள் கிருஷ்ணகிரி அணை அருகே அமைந்துள்ள பயிற்சி நிறுவனத்தில் வரும் 26-ஆம் தேதி தொடங்க உள்ளது.

தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்த சுயதொழில் தொடங்க ஆர்வமுள்ளவர்கள் பயிற்சியில் பங்கு பெறலாம். சுய உதவிக் குழுக்கள், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு பயிற்சியில் சேர முன்னுரிமை வழங்கப்படும்.

பயிற்சியை முழுமையாக நிறைவு செய்பவர்களுக்கு சான்றிதழுடன் தொழில் தொடங்குவதற்கான ஆலோசனை உள்ளிட்டவை தொடர்ந்து 2 ஆண்டுகளுக்கு இலவசமாக வழங்கப்படும்.

பயிற்சியில் சேர ஆர்வம் உள்ளவர்கள் தங்களது பெயர், முகவரி, தொடர்பு கொள்வதற்கான செல்போன் அல்லது தொலைபேசி எண் ஆகிய விவரங்களை வெள்ளைத் தாளிலோ அல்லது அஞ்சல் அட்டையிலோ எழுதி அனுப்பலாம்.

மேலும், தங்களது விவரங்களை 9442247921 என்ற செல்போன் எண்ணுக்கு குறுஞ்செய்தியாகவும் அனுப்பலாம்.

மேலும், விவரங்களுக்கு 04343-240500 என்ற தொலைபேசி எண்ணின் மூலமாகவோ அல்லது ண்ய்க்ள்ங்ற்ண்ந்ழ்ண்ள்ட்ய்ஹஞ்ண்ழ்ண்ஹ்ஹட்ர்ர்.ஸ்ரீர்ம் என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

## கரும்புக்கான விலை : அரசின் அறிவிப்பு ஏமாற்றம் அளிக்கிறது விவசாய சங்கப் பிரதிநிதிகள்

கரும்பு டன்னுக்கு விலை நிர்ணயம் செய்து தமிழக அரசு சனிக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு ஏமாற்றமளிக்கிறது என்று கருத்து தெரிவித்தனர் விவசாய சங்கப்பிரதிநிதிகள்.

2013-14-ம் ஆண்டிற்கான கரும்பு பருவத்திற்கு நியாயமான மற்றும் ஆதாய விலையாக டன் ஒன்றுக்கு ரூ. 2,100 விலையை நிர்ணயம் செய்து மத்திய அரசு உத்தரவிட்டிருந்த நிலையில், மாநில அரசு போக்குவரத்துச் செலவு ரூ.100 உள்பட பரிந்துரை விலையாக ரூ.550 உயர்த்தி உத்தரவிட்டார் தமிழக முதல்வர் ஜெயலலிதா.

இந்த அறிவி0ப்பின்படி கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ.2650 கிடைக்கும் என்றும் முதல்வர் தெரிவித்துள்ளார்.

ஆனால் முதல்வரின் இந்த அறிவிப்பு தங்களுக்கு பெருத்த ஏமாற்றத்தை அளித்துள்ளதாக விவசாய சங்க பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநிலச் செயலர் ராஜா சிதம்பரம்:

கரும்பு உற்பத்தி செய்வதற்கான செலவு, இதர பொருள்களின் விலை 2 மடங்கு உயர்வால் கரும்பு சாகுபடியை விவசாயிகள் மேற்கொள்ள முடியாத நிலை உள்ள நிலையில், டன்னுக்கு ரூ.3500 விலை கிடைக்கும் என எதிர்பார்த்தோம். ஆனால் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை.

சென்ற ஆண்டில் தமிழக அரசின் பரிந்துரை விலையை போக்குவரத்து செலவு உள்பட 650 உயர்த்தி வழங்கிய முதல்வர், இந்தாண்டு ஏமாற்றத்தை அளித்திருக்கிறார். எனவே மத்திய, மாநில அரசுகள் இணைந்து கரும்புக்கான விலையை உயர்த்தி வழங்க வேண்டும்.

காங்கிரஸ் கட்சியின் விவசாயப் பிரிவு மாநிலத் துணைத் தலைவர் புலியூர் ஏ. நாகராஜன்:

விவசாயிகள் கோரியிருந்தவாறு கரும்பு டன்னுக்கு ரூ.3000 விலை என்று அறிவித்திருக்கலாம். அரசின் அறிவிப்பு ஏமாற்றம் அளிக்கிறது. கரும்புவிவசாயிகளின் நலன்கருதி அரசு விலையை உயர்த்தி வழங்க வேண்டும் என்றார்.

தெற்கு, வடக்கு அய்யன் வாய்க்கால் பாசனதாரர்கள் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் என். வீரசேகரன் :

போதிய விலை கிடைக்காமல் தமிழகத்தில் கரும்பு சாகுபடி குறைந்து வருவதால்

இதனைச் சார்ந்துள்ள அனைத்துத் தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர். பலர் வேலையிழக்கும் சூழல் உள்ளது.

இந்த நிலையில், தமிழக அரசின் கரும்பு விலை அறிவிப்பு விவசாயிகளுக்கு பெருத்த ஏமாற்றத்தை தந்துள்ளது. உடனடியாக மத்திய, மாநில அரசுகள் கலந்து பேசி கரும்புக்கான விலையை உயர்த்தி அறிவிக்க வேண்டும் என்றார்.

தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் செயலர் சுவாமிமலை சுந்தர விமலநாதன்:

விவசாயிகளுக்கு விலையை அதிகப்படுத்தியதாகக் கூறுவது அர்த்தமில்லை. அதற்குப் பதிலாக ஏமாற்றம்தான் மிஞ்சியுள்ளது. கர்நாடகத்தில் வயல்வெளி விலையே ரூ. 2650 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வெட்டுக்கூலி, தூக்குக்கூலி, வண்டி வாடகை ஆகியவற்றை ஆலை நிர்வாகமே ஏற்றுக் கொள்கிறது.இதனால் விவசாயிகளுக்கு கூடுதலாக ரூ.650 கிடைக்கும். மொத்தத்தில் கரும்பு டன்னுக்கு

ரூ.3300 விலை கர்நாடகத்தில் கிடைக்கிறது. உத்தரப்பிரதேச மாநிலத்தில் டன்னுக்கு ரூ.2800 தருகிறது. ஆனால் அதற்கே அங்கு போராட்டம் நடத்தப்படுகிறது.

தமிழக அரசு அறிவித்த கரும்பு விலையை மறுபரிசீலனை செய்ய வேண்டும். 3 ஆண்டுகளாகக் கூட்டப்படாமல் உள்ள முத்தரப்புக் கூட்டத்தை கூட்ட வேண்டும்.

**விவசாயிகளை கடனற்றவர்களாக அறிவிக்க வலியுறுத்தல்**

இந்திய விவசாயிகள் அனைவரையும் கடனற்றவர்களாக அறிவிக்க வேண்டும் என காங்கிரஸ் விவசாய பிரிவு மாநிலத் துணைத் தலைவர் புலியூர் நாகராஜன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அகில இந்திய காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்திக்கு அவர் அனுப்பியுள்ள கடிதம்:

கடந்த 2008 ஆம் ஆண்டு கடன் நிவாரண சட்டம் கொண்டு வரப்பட்டு, 80 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால், அப்போது 5 ஏக்கருக்கு மேல் உள்ள விவசாயிகளுக்கு இந்தத் தள்ளுபடி கிடைக்கவில்லை. வெறும் வட்டிச் சலுகை மட்டுமே வழங்கப்பட்டது.

ஆனால், இந்தியாவில் 70 சதவிகிதம் பேர் 5 ஏக்கருக்கு மேல் உள்ள விவசாயிகள். விவசாய விளை பொருள்களுக்கான உரிய விலை கிடைக்கவில்லை. எனவே, நெல்லுக்கு குறைந்தபட்ச ஆதார விலையாக குவிண்டாலுக்கு ரூ. 2500 என்றும், கரும்புக்கு டன்னுக்கு ரூ. 4 ஆயிரம் என்றும் நிர்ணயம் செய்ய வேண்டும்.

நாட்டிலுள்ள அனைத்து விவசாயிகளையும் கடனற்றவர்கள் என்று அறிவிக்கும் வகையில், அனைத்து வகையான விவசாயக் கடன்களையும் ரத்து செய்ய வேண்டும். கடனுக்காக டிராக்டர் உள்ளிட்டவற்றை வங்கிகள் ஜப்தி செய்வதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

## விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வலியுறுத்தல்

புதுக்கோட்டை மாவட்டத்தில் பருவமழை பொய்த்துவிட்டதால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வலியுறுத்தியுள்ளது.

புதுக்கோட்டையில் அந்தக் கட்சியின் மாவட்டச் செயலர் தெ. கலைமுரசு தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிர்வாகக் குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், கருப்பின மக்களின் விடுதலைக்காகப் போராடிய நெல்சன் மண்டேலா மறைவுக்கு இரங்கல் தெரிவிப்பது. புதுகை நகராட்சிக்கு சிறப்பு நிதியாக வழங்கப்பட்ட சுமார் ரூ. 100 கோடியை செலவழித்தது குறித்த வெள்ளை அறிக்கை வெளியிட நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். புதுகை அரசு தலைமை மருத்துவமனை, ராணியார் மகப்பேறு மருத்துவமனையில் நீடிக்கும் மருத்துவர் பற்றாக்குறை, சுகாதார சீர்கேட்டை போக்க மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும். அரசு நிர்ணயித்துள்ள கட்டணத்தைவிட கூடுதல் கட்டணம் வசூலிக்கும் கேபிள் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில், மாநில அமைப்புச் செயலர் பெ. ஆற்றலரசு, நிர்வாகிகள் கு. அறச்செல்வம், உஞ்சையரசன், விடுதலைக்கனல் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## காரைக்காலில் நெல் கொள்முதல் செய்ய நடவடிக்கை இல்லை

காரைக்காலில் உற்பத்தி செய்யப்படும் 15 ஆயிரம் டன் நெல்லை கொள்முதல் செய்ய புதுச்சேரி அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று காங்கிரஸ் கட்சி புகார் தெரிவித்துள்ளது.

காரைக்கால் மாவட்டத்தில் சம்பா, தாளடி பயிர்கள் அறுவடையை எதிர்நோக்கி காத்திருக்கின்றன.

பொங்கலுக்கு முன்பே, மாவட்டத்தில் பயிரிடப்பட்டிருக்கும் நெல் அறுவடையாக வாய்ப்பிருப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

ஆனால், உற்பத்தி செய்த நெல்லை கொள்முதல் செய்ய புதுவை அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லையென விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து முன்னாள் வேளாண் அமைச்சரும், புதுவை மாநில காங்கிரஸ் கட்சி துணைத் தலைவருமான ஆர். கமலக்கண்ணன் ஞாயிற்றுக்கிழமை கூறியது:

காரைக்கால் மாவட்டத்தில் 5 ஆயிரம் ஹெக்டேரில் சம்பா, தாளடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தேவையான எந்த உதவியையும் புதுச்சேரி அரசு செய்யவில்லை.

தற்போது காரைக்காலில் 15 ஆயிரம் டன் நெல் உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதை கொள்முதல் செய்ய அரசு நிர்வாகம் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை. புதுச்சேரியில் வைத்திலிங்கம் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சி, நெல் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுத்தது. ஆனால், அடுத்து வந்த ரங்கசாமி அரசு அதற்கான நடவடிக்கையை எடுக்கவில்லை. மத்திய அரசுடன் பேசி, எப்.சி.ஐ. மூலம் நெல் கொள்முதல் செய்ய விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், மார்க்கெட்டிங் சொசைட்டி, விற்பனைக் குழு சார்பிலும் கொள்முதல் செய்யவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

### நெல் குவிண்டாலுக்கு ரூ.2,636: விவசாயிகள் சங்கம் கோரிக்கை

தேசிய விவசாய ஆணையம் பரிந்துரையின் படி விலைவாசி உயர்விற்கு ஏற்ப நெல் குவிண்டாலுக்கு ரூ.2,636 வழங்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கொள்ளிடம் கீழணை பாசன விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

காட்டுமன்னார்கோயிலில் கொள்ளிடம் கீழணை பாசன விவசாயிகள் சங்க ஆலோசனைக் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்திற்கு கீழணை பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் பி.விநாயகமூர்த்தி தலைமை வகித்தார். நிர்வாகிகள் எம்.அன்பழகன், ஆர்.மணிவண்ணன், ஏவிஆர்.பழனிராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். பி.லட்சுமிகாந்தன், எம்.நஜிமுதின், எம்.பாரதி, சம்பந்தம், மாயா, எம்.ஆர்.பாலு உள்ளிட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

கீழணை பழுதடைந்து உள்ளதால், ம.ஆதனூர், மேல்குமாரமங்கலம் இடையே பாசனத்திற்கு வேண்டிய நீர் தேக்குகின்ற வரையில் கதவணை கட்ட வேண்டும். ம.புளியங்குடி, சித்தமல்லி, நளன்புத்தூர், மாதிரிவேலூர் இடையே கதவணையும், கடல்நீர் உள்புகாமல் இருக்க படுக்கை அணை கட்டவும் தமிழக அரசு உத்தரவிட வேண்டும்.

கொள்ளிடத்தில் மணல் அள்ளப்பட்டதால்,கடல் நீர் 25 கி.மீ. தூரத்துக்கு உள்புகுந்து கரையோர கிராமங்கள் குடி நீரும், ஆழ்துளை கிணறுகளிலும் உவர் நீராக மாறிவிட்டது. எனவே கொள்ளிடத்தில் மேல்பருத்திகுடி, சி.அரசூர், ஆழங்காத்தான், ஓமாம்புலியூர், கஞ்சங்கொல்லை ஆகிய இடங்களில் மணல் குவாரிகள் அமைப்பதை கைவிட வேண்டும். வீராணம் ஏரியை தூர்வாரும் பணியைத் தொடங்க அரசு அனுமதி வழங்க வேண்டும்.

டெல்டா மாவட்டங்கள் பாசனம் மற்றும் வடிகால் வாய்க்கால்களை தூர்வாரி அகலப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### நெல் குவிண்டாலுக்கு ரூ.2,636: விவசாயிகள் சங்கம் கோரிக்கை

தேசிய விவசாய ஆணையம் பரிந்துரையின் படி விலைவாசி உயர்விற்கு ஏற்ப நெல் குவிண்டாலுக்கு ரூ.2,636 வழங்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கொள்ளிடம் கீழணை பாசன விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

காட்டுமன்னார்கோயிலில் கொள்ளிடம் கீழணை பாசன விவசாயிகள் சங்க ஆலோசனைக் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்திற்கு கீழணை பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் பி.விநாயகமூர்த்தி தலைமை வகித்தார். நிர்வாகிகள் எம்.அன்பழகன், ஆர்.மணிவண்ணன், ஏவிஆர்.பழனிராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர். பி.லட்சுமிகாந்தன், எம்.நஜிமுதின், எம்.பாரதி, சம்பந்தம், மாயா, எம்.ஆர்.பாலு உள்ளிட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

கீழணை பழுதடைந்து உள்ளதால், ம.ஆதனூர், மேல்குமாரமங்கலம் இடையே பாசனத்திற்கு வேண்டிய  நீர் தேக்குகின்ற வரையில் கதவணை கட்ட வேண்டும். ம.புளியங்குடி, சித்தமல்லி, நளன்புத்தூர், மாதிரிவேலூர் இடையே கதவணையும், கடல்நீர் உள்புகாமல் இருக்க படுக்கை அணை கட்டவும் தமிழக அரசு உத்தரவிட வேண்டும்.

கொள்ளிடத்தில் மணல் அள்ளப்பட்டதால்,கடல் நீர் 25 கி.மீ. தூரத்துக்கு உள்புகுந்து கரையோர கிராமங்கள் குடி நீரும், ஆழ்துளை கிணறுகளிலும் உவர் நீராக மாறிவிட்டது. எனவே கொள்ளிடத்தில் மேல்பருத்திகுடி, சி.அரசூர், ஆழங்காத்தான், ஓமாம்புலியூர், கஞ்சங்கொல்லை ஆகிய இடங்களில் மணல் குவாரிகள் அமைப்பதை கைவிட வேண்டும்.  வீராணம் ஏரியை தூர்வாரும் பணியைத் தொடங்க அரசு அனுமதி வழங்க வேண்டும்.

டெல்டா மாவட்டங்கள் பாசனம் மற்றும் வடிகால் வாய்க்கால்களை தூர்வாரி அகலப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**"குறைவான பரிந்துரை விலையால் கரும்பு சாகுபடி மேலும் குறையும்**

கரும்பின் பரிந்துரை விலை குறைவாக உள்ளதால், நடப்பாண்டில் கரும்பு சாகுபடி பரப்பளவு மேலும் குறையும் என, இந்திய விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்திய விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு பொதுச் செயலர் ஆர்.விருத்தகிரி தெரிவித்ததாவது:

மின்வெட்டு, அதிக கூலி, உரம், பூச்சி மருந்துகளின் விலை உயர்வு, மின்கட்டண உயர்வு போன்றவற்றால் கரும்புக்கான உற்பத்தி செலவு அதிகரித்து உள்ளது.

எனவே கரும்புக்கான நியாயமான கட்டுப்படியாகும் விலையை டன்னுக்கு ரூ.3,500 ஆக, மத்திய அரசு உயர்த்தித் தர வேண்டும் என்று கோரி புதுதில்லியில் கடந்த வாரம் ஆர்ப்பாட்டம் நடத்தினோம்.

கடந்த ஆண்டு மத்திய அரசு, கரும்புக்கான நியாயமான கட்டுப்படியாகும் விலையை டன்னுக்கு ரூ.1,700-ஆகவும், மாநில அரசு டன்னுக்கு ரூ.650-ஆகவும் நிர்ணயித்து இருந்தது, இதனால் கடந்த அரவை பருவத்தில் கரும்புக்கான கொள்முதல் விலை டன்னுக்கு ரூ.2,300 ஆக இருந்தது.

இந்த ஆண்டுக்கான அரவைப் பருவம் அக்டோபர் மாதம் தொடங்கியது. இந்த பருவத்துக்கான கொள்முதல் விலையை டன்னுக்கு ரூ.2,100 ஆக உயர்த்தி மத்திய அரசு அறிவித்து விட்டது. ஆனால் அரவை பருவம் தொடங்கி 2 மாதங்களுக்குப் பின், கரும்புக்கான பரிந்துரை விலையை டன்னுக்கு ரூ.550 ஆக தமிழக அரசு சனிக்கிழமை அறிவித்துள்ளது. இந்த பரிந்துரை விலை கடந்த அரவை பருவத்தை விட 100 ரூபாய் குறைவாகும். இது ஏற்புடையதல்ல, இதன் பாதிப்பு வரும் மக்களவைத் தேர்தலில் தெரியும். தமிழக அரசு கரும்புக்கான பரிந்துரை விலையைக் குறைத்துள்ளதால், கரும்பு விவசாயிகள் மாற்றுப்பயிருக்கு தாவும் நிலை அதிகரிக்கும். கடந்த 3 ஆண்டுகளாகவே தமிழகத்தில் கரும்பு சாகுபடி பரப்பு குறைந்து வருவதால், சர்க்கரை உற்பத்தியும் குறைந்து வருகிறது. கடந்த அரவை பருவத்தில் தமிழகத்தில் உள்ள 44 சர்க்கரை ஆலைகளிலும் 210 லட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை உற்பத்தியானது. ஆனால் இந்த அரவை பருவத்தில் 150 லட்ச டன் தான் உற்பத்தியாகும் என்றார் ஆர்.விருத்தகிரி.

### மேலூர் ஒருபோக சாகுபடிக்கு இன்று தண்ணீர் திறப்பு

மேலூரில் 5 மணிநேரம் நடைபெற்ற சாலைமறியலைத் தொடர்ந்து கைதுசெய்யப்பட்ட விவசாயிகள் சங்கத்தினருடன் வருவாய்த்துறை அதிகாரிகள் மற்றும் ஊரகமாவட்ட காவல் கண்காணிப்பாளரும் தொடர்ந்து நடத்திய பேச்சுவார்த்தை காரணமாக போராட்டங்களை விவசாயிகள் கைவிட்டனர்.

பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் ராஜேஸ் மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகளும் கூறியதை விவசாயிகள் நிராகரித்தனர்.

இந்நிலையில், யாரிடமும் அவர்கள் எதுவும் கூறாமல் சென்றுவிட்டனர். இதையடுத்து, மறியலில் ஈடுபட்டவர்கள் கைதுசெய்யப்பட்டனர். விவசாயிகள் விடுவிக்கப்பட்ட பின்னர், அடுத்தகட்ட போராட்டத்தை தீவிரப்படுத்துவது தொடர்பாக ஆலோசனை செய்துகொண்டிருந்தனர். இந்நிலையில், மாவட்ட வருவாய்த்துறையினர் மாவட்ட எஸ்பி ஆகியோர் தொடர்ந்து விவசாயிகளிடம் பேசினர். திங்கள்கிழமை வைகை அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் உறுதிகூறியதையடுத்து, விவசாயிகள் போராட்டத்தை கைவிடுவதாக அறிவித்தனர். மேலும் மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகளுக்கும், காவல்துறை அதிகாரிகளுக்கும் தங்கள் நன்றியைத் தெரிவித்தனர்.

## கொடைக்கானலில் கடுமையான பனிப் பொழிவு

கொடைக்கானலில் கடுமையான பனிப் பொழிவு நிலவி வருவதால் நீரோடைகளில் வரத்து குறைந்துள்ளது. குளிரால் இயல்பு வாழ்க்கை சற்று பாதிப்பு அடைந்துள்ளது. கொடைக்கானலில் டிசம்பர் மாதத்தில் பனிப் பொழிவு நிலவுவது வழக்கம். இந்தாண்டும் வழக்கத்திற்கு மாறாக கூடுதலாக பனிப் பொழிவு நிலவி வருகிறது. காலை 8 மணி முதல் நல்ல வெயில் அடிக்கிறது. மாலை 5 மணி முதல் பனி தொடங்குகிறது. இரவு முதல் மறுநாள் காலை 8 மணி வரை பனிப் பொழிவு இருக்கிறது. ஏரிச்சாலை, பூங்கா பகுதி, வட்டக்கானல், அப்சர்வேட்டரி ஆகிய பகுதிகளில் உள்ள புல்வெளிகளில் பனி படர்ந்துள்ளது. பனியின் தாக்கம் அதிகரித்துள்ளதால் பிரையண்ட் பூங்காவில் பூக்கள் கருகியுள்ளன.

சீசனுக்காக நடவு செய்யப்பட்டுள்ள நர்சரி நிழல் வலை அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது. நீரோடைப் பகுதிகளான வெள்ளிநீர் வீழ்ச்சி, பியர்சோழா அருவி, வட்டக்கானல் அருவி, செண்பகா அருவி ஆகியவற்றில் தண்ணீர் வெகுவாக குறைந்துள்ளது. பனியில் நீர்ப்பனி, வரப்பனி, மூடுபனி என வகைகள் உள்ளன. தற்போது வரப்பனியின் தாக்கம் அதிகரித்திருப்பதால் இயல்பு வாழ்க்கை சற்று பாதிப்படைந்துள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கறிக்கோழி விலை 70 ரூபாயாக நிர்ணயம்

மூன்று மாத பின்னடைவுக்குப் பின், கறிக்கோழி விலை, தற்போது, 70 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், பண்ணையாளர்கள் மகிழ்ச்சியடைந்து உள்ளனர். பல்லடம் கறிக்கோழி ஒருங்கிணைப்பு கமிட்டியின் கட்டுப்பாட்டில், கோவை, ஈரோடு, நாமக்கல், கிருஷ்ணகிரி, ராமநாதபுரம், தூத்துக்குடி, பல்லடம், நாகர்கோவில் போன்ற மாவட்டங்கள் உள்ளன. இங்கு, 70 லட்சம் கறிக்கோழிகள் வளர்க்கப்பட்டு, மாதம் தோறும், ஐந்து கோடி கிலோ அளவுக்கு உற்பத்தி செய்யப்படுகிறது.அவை, தமிழகத்திற்கு மட்டுமின்றி, வெளிமாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் நேரடியாகவும், பதப்படுத்தப்பட்டும், வினியோகம் செய்யப்படுகின்றன. கடந்த, மூன்று மாதங்களாக, வீழ்ச்சியை கண்டு வந்த கறிக்கோழி விலை, தற்போது அதிகரிக்கத் துவங்கியுள்ளது.

மேலும், வட மாநிலங்களில் கடுங்குளிர், கிறிஸ்துமஸ், ஆங்கில புத்தாண்டு ஆகியவற்றாலும், நுகர்வு அதிகரித்து, விலை கூடியுள்ளது. செப்டம்பர், 30ம் தேதி, கறிக்கோழி கொள்முதல் விலை, 45 ரூபாயாக குறைந்தது. அதன்பின், டிசம்பர், 9ம் தேதி, 51 ரூபாயாக உயர்ந்தது. நேற்று கொள்முதல் விலையை, 70 ரூபாயாக, பல்லடம் கறிக்கோழி ஒருங்கிணைப்பு கமிட்டி நிர்ணயம் செய்தது. மூன்று மாதத்துக்கு பின், கறிக்கோழியின் விலை கிலோ, 70 ரூபாயை தொட்டுள்ளதால், பண்ணையாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## 'மாப்பிள்ளை சம்பா' நெல் சாகுபடிசாதிக்கும் ராமநாதபுரம் விவசாயி

ராமநாதபுரம்:'மாப்பிள்ளை சம்பா' நெல் சாகுபடி செய்து, விவசாயி ஒருவர், சாதனை படைத்து வருகிறார்.

வறட்சியை தாங்கி விளையும், மாப்பிள்ளை சம்பா ரக நெல், 7 அடி உயரம் வளரும். இந்த ரக அரிசியில், அதிகளவு மாவு சத்து உள்ளது; இந்த அரிசி சோறு, எளிதில் கெட்டுப்போகாது.

ஏக்கருக்கு, 40 முதல் 50 மூட்டைகள் வரை, மகசூல் கிடைக்கும் இந்த நெல் ரகத்தை, ராமநாதபுரம் அருகே சின்ன அக்கிரமேசி கிராம விவசாயி கிருஷ்ணன், 62, சாகுபடி செய்துள்ளார்.

அவர் கூறியதாவது:

இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் அறிவுரைப்படி, 4 மாதங்களுக்கு முன், ஒரு ஏக்கரில், மாப்பிள்ளை சம்பா நெல் சாகுபடி செய்தேன். அவ்வப்போது பெய்யும் மழையில், தற்போது ஆறரை அடி உயரம் வரை, வளர்ந்து, நெல் மணிகள் கொத்து கொத்தாக விளைந்து உள்ளன.

பூச்சி தாக்குதல் இல்லை; உரமிடும் செலவு கிடையாது. மற்ற பயிர்கள் எல்லாம், மழை இன்றி வாடும் நிலையில், இந்த ரகம் பச்சை பசேல் என, வளர்ந்துள்ளது. தைப்பொங்கலையொட்டி, அறுவடை செய்யவுள்ளேன்; பழமையான இந்த நெல் ரகத்திற்கு, தற்போது மவுசு இருப்பதால், விரும்பி சாகுபடி செய்தேன்.இவ்வாறு, அவர் கூறினார்.

## வைகை அணை:நீர் திறக்க தமிழக அரசு உத்தரவு

தேனி:வைகை அணையில் இருந்து நீர் திறந்து விட தமிழக அரசு இன்று உத்தரவிட்டுள்ளது. அதன்படி இன்று முதல் 3 நாட்களுக்கு 1,800க.அடி., நீர் திறந்து விடப்படுகிறது.

]உற்பத்தியும் இல்லை : விலையும் இல்லைபனங்கிழங்குகளையும் விட்டு வைக்கவில்லை வறட்சி ஈரோட்டிலிருந்து பனங்கொட்டைகள் வந்தும் "நோ யூஸ்'

ஸ்ரீவில்லிபுத்தூர்:ஈரோட்டிலிருந்து பனங்கொட்டைகள் வரவழைத்தும், வறட்சி, வனவிலங்குகளால் உற்பத்தி குறைந்தும், பனங்கிழங்கிற்கு போதிய விலை கிடைக்காததால், விருதுநகர் மாவட்ட விவசாயிகள், பெரும் சிரமத்தில் உள்ளனர். பொங்கல் பண்டிகையில் முக்கிய பங்கு வகிப்பது பனங்கிழங்கு, விருதுநகர் மாவட்டத்தில், ஸ்ரீவில்லிபுத்தூர் திருவண்ணாமலை, மம்சாபுரம், ராஜபாளையம், சேத்தூர், தளவாய் புரம், முகவூர் உட்பட பகுதிகளில்,அதிகம் பயிர் செய்யப்படுகிறது. இப்பகுதிகளில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான பனை மரங்கள் உள்ளன. இந்த பனை மரங்களை நம்பி, ஆயிரகணக்கான விவசாயிகள் வாழ்கின்றனர்.

ஸ்ரீவில்லிபுத்தூர் திருவண்ணாமலை பகுதியில், செங்கல் சூளைகளுக்கு மண் எடுப்பதற்காக, தோண்டப்பட்ட பள்ளங்களால், நூற்றுக்கும் மேற்பட்ட பனை மரங்கள், வேரோடு சாய்ந்து அழிந்து விட்டன. மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக, மழை சரி வர பெய்யாதாதல், பனை மரங்களிலிருந்து கிடைக்கும் பதனீரும், நொங்கு போன்றவைகளும் குறைவாக கிடைத்தன. இதனால், பனங்கிழங்கு விவசாயத்திற்கு போதிய பனங்கொட்டைகள் கிடைக்காத நிலையில், ஈரோடு மாவட்டத்திலிருந்து பனங்கொட்டை ஒன்றுக்கு 1 ரூபாய் 20 காசு வீதம் வாங்கி வந்து, கடந்த ஜூலையில்,விவசாயம் செய்ய துவங்கினர்.

ஆனால், தொடர்ந்து மழை பெய்யாததால், கிணறுகளில் தண்ணீரும் இல்லாததால், பனங்கிழங்கை காப்பாற்ற, டேங்கரில் தண்ணீரை விலைக்கு வாங்கி, விவசாயம் செய்தனர். பனங்கிழங்கு விளைந்து தற்போது பலன் கிடைக்கும் நேரத்தில், காட்டு பன்றிகள் தொல்லையால், விளைந்த பனங்கிழங்குகளும் நாசமாயின. இதையும் மீறி விளைவித்த பனங்கிழங்குகளுக்கு போதிய விலை கிடைக்கவில்லை.இதன் காரணமாக, செலவுக்கேற்ற லாபம் கிடைக்காமல், விவசாயிகள் மிகுந்த பாதிப்படைந்துள்ளனர்.

ஸ்ரீவில்லிபுத்தூரை சேர்ந்த விவசாயி கோவிந்தராஜ்,"" பனங்கிழங்கு விவசாயத்தில், கடந்த பல ஆண்டுகளாக ஈடுபட்டு வருகிறேன். வறட்சி, காட்டு பன்றிகள் தொல்லையால், இத்தொழிலில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை, நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன், ஸ்ரீவில்லிபுத்தூர் திருவண்ணாமலை பகுதிகளில் மட்டும், 20லட்சம் பனங்கொட்டைகள் விதைக்கப்படும். ஆனால், தற்போதய சூழ்நிலையில், 7 லட்சம் பனங்கொட்டைகள் விதைக்கப்பட்டுள்ளது.

மழையும் இல்லாததால், ஒரு டேங்கர் தண்ணீருக்கு 800 ரூபாய் வரை கொடுக்க வேண்டியதுள் ளது. இவ்வளவு செலவு செய்தும், போதிய லாபம் கிடைக்காத நிலை உள்ளது ," என்றார்.

பெருமாள்பட்டியை சேர்ந்த முத்துக்குமார்: ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து விளையும் பனங்கிழங்குகள், சாத்தூர், கோவில்பட்டி உட்பட பல இடங்களுக்கும் கொண்டு செல்லப் படுகிறது. கடந்தாண்டு 25 முதல் ரக பனங்கிழங்கு கொண்ட கட்டு ஒன்றுக்கு, 90 ரூபாயும், இரண்டாவது ரகத்திற்கு 40 ரூபாயும் விற்பனை செய்தோம். தற்போது முதல் ரகத்திற்கு 110 ரூபாயும், இரண்டாவது ரகத்திற்கு 60 ரூபாயும் விற்பனை செய்கிறோம். தற்போதய விவசாய செலவுகளுக்கு, இந்த தொகை போதாது. ஆனால் கூடுதல் விலை விற்றால், மக்கள் வாங்குவதற்கு தயங்குகின்றனர். வேறு வழியின்றி, மிக குறைவான லாபத்தில் விற்பனை செய்ய வேண்டியதுள்ளது," என்றார்.

## கரும்புக்கு ரூ.2,650 கொள்முதல் விலை நிர்ணயம் தமிழக அரசு அறிவிப்பால் விவசாயிகள் கடும் அதிருப்தி

சென்னை:'கரும்பு விவசாயிகளுக்கு, டன் ஒன்றுக்கு, 2,650 ரூபாய், கொள்முதல் விலை வழங்கப்படும்' என, முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார். 'இது போதுமானதாக இல்லை' என, விவசாயிகள் போர்க்கொடி துாக்கி உள்ளனர். மாநில அரசு, கடந்த ஆண்டைவிட, 100 ரூபாய், குறைவாக வழங்குவது விவசாயிகளுக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

மத்திய அரசு நிர்ணயம்

தமிழகத்தில், 8.65 ஏக்கரில், கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும், கரும்புக்கு, நியாயமான மற்றும் ஆதாய விலையை, மத்திய அரசு உயர்த்தும் போதெல்லாம், கரும்பு விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு, மாநில பரிந்துரை விலை, தொடர்ந்து வழங்கப்படுகிறது. 2011-12ல், கரும்புக்கு ஆதாய விலையாக, ஒரு டன்னுக்கு, 1,450 ரூபாயை, மத்திய அரசு நிர்ணயம் செய்தது. அப்போது, போக்குவரத்து செலவு, 100 ரூபாய் உட்பட, மாநில அரசின் பரிந்துரை விலையை, 650 ரூபாய் உயர்த்தி, 2,100 ரூபாய் வழங்கப்பட்டது.

முதல்வர் உத்தரவு

கடந்த ஆண்டு, மத்திய அரசு, 1,700 ரூபாய் வழங்கியது; அத்துடன், 650 ரூபாய் சேர்த்து, 2,350 ரூபாய் வழங்கப்பட்டது.

நடப்பு ஆண்டிற்கு, மத்திய அரசு, ஒரு டன்னுக்கு, 2,100 ரூபாய் நிர்ணயம் செய்துள்ளது. அத்துடன், 550 ரூபாய் சேர்த்து, 2,650 ரூபாய் வழங்க, முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டு உள்ளார்.

விவசாயிகள் எதிர்ப்பு

இதற்கு, விவசாயிகளிடம் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இதுகுறித்து, விவசாயிகள் சங்க நிர்வாகிகள் கூறியதாவது:

'வெட்டுக்கூலி, வாகன வாடகை இல்லாமல், டன்னுக்கு, 3,500 ரூபாய் வழங்க வேண்டும்' என, கேட்டோம். ஒரு டன் கரும்புக்கு, வெட்டுக்கூலி, 500 ரூபாய். சர்க்கரை ஆலை நியமிக்கும், கரும்பு அலுவலருக்கு, 1,000 ரூபாய் கமிஷன் கொடுக்கிறோம்.

கரும்பு ஏற்றிச்செல்லும், லாரி டிரைவர் மற்றும் கிளீனருக்கு, 500 ரூபாய் பேட்டா கொடுக்கிறோம். இதனால், கரும்பு சாகுபடியில், பெரிதாக லாபம் கிடைப்பதில்லை.

அரசு அறிவித்துள்ள, விலை உயர்வை ஏற்றுக் கொள்ள முடியாது. விவசாயிகள்,

அதிகாரிகள், கரும்பு ஆலை அதிகாரிகள் பங்கேற்கும், முத்தரப்பு கூட்டத்தை கூட்டாமல், கொள்முதல் விலையை நிர்ணயம் செய்துள்ளனர்.

இது விவசாயிகளை வஞ்சிக்கும் செயல். இதை மறுபரிசீலனை செய்ய வலியுறுத்தி, அனைத்து சங்கங்களும் இணைந்து, விரைவில், மிகப் பெரிய போராட்டம் நடத்துவோம். இவ்வாறு, அவர்கள் கூறினர்.

மறு பரிசீலனை?

தமிழகம் மற்றும் புதுச்சேரி, தனியார் சர்க்கரை ஆலை கரும்பு விவசாய சங்கத் தலைவர், கார்மாங்குடி வெங்கடேசன்

கூறியதாவது:

நாங்கள், வயல் விலையாக, 3,500 ரூபாய் கேட்ட நிலையில், கடந்த ஆண்டை விடக் கூடுதலாக, 300 ரூபாய்

மட்டுமே வழங்குகின்றனர். அ.தி.மு.க., தேர்தல் அறிக்கையில் தெரிவித்த, 2,500 ரூபாய் மட்டுமின்றி, கூடுதலாக, 50 ரூபாய் வழங்குவதாக கூறுகின்றனர்.

தேர்தல் அறிக்கை வெளியிட்ட, 2011ல் இருந்த நிலைமை வேறு. இப்போது எட்டு முறை, டீசல் விலை உயர்த்தப்பட்டு உள்ளது. டிராக்டர் வாடகை, உரம், ஆட்கள் கூலி செலவும் கூடிவிட்டது. எனவே, விலை உயர்வை, முதல்வர் ஜெயலலிதா மறு பரிசீலனை செய்ய வேண்டும். இவ்வாறு, அவர் கூறினார். ஏமாற்றி விட்டது

இந்திய விவசாயிகள் கூட்டமைப்பின் பொதுச் செயலர், விருதகிரி

கூறியதாவது: கடந்த ஆண்டு, ஒரு டன் கரும்புக்கு, மத்திய அரசு நிர்ணயித்த விலையை விட, கூடுதலாக, 650 ரூபாயை மாநில அரசு வழங்கியது. இந்த ஆண்டு, 550 ரூபாய் வழங்கியுள்ளனர். கரும்பு கொள்முதல் விலையை, எதிர்பார்த்த அளவிற்கு, அரசு உயர்த்தவில்லை. சர்க்கரை ஆலை நிர்வாகங்களின் நெருக்கடிக்கு பணிந்து, விவசாயிகளை அரசு ஏமாற்றி விட்டது. இவ்விஷயத்தில், அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து, விரைவில் ஆலோசனை நடத்த உள்ளோம். இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

தண்ணீர் திறக்கக்கோரி 4 மணி நேரம் மறியல் :விவசாயிகளால் ஸ்தம்பித்தது மேலூர்

மேலூர் : மதுரை மேலூர் பகுதியில் கருகி வரும் நெற்பயிருக்கு, வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்ககோரி, விவசாயிகள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். நேற்று நான்குவழிச்சாலையில், 4 மணி நேரம் மறியலில் ஈடுபட்டனர். மேலூர் பகுதிகள், பாசனத்திற்கு பெரியாறு அணை நீரை மட்டுமே நம்பி உள்ளன; அணையின் நீர் இருப்பை பொறுத்து, விவசாய பணி நடக்கும். கடந்த ஆண்டுகளில் சரிவர விவசாயம் நடக்காத நிலையில், இந்த ஆண்டு, விவசாயப் பணி துவங்கியது. ஆனால், பருவமழை பொய்த்ததால், அணையின் நீர்மட்டம் குறைந்து, மேலூர் பகுதிக்கு வரும் தண்ணீர் நின்றது. இதனால், ஏக்கருக்கு, 25 ஆயிரம் ரூபாய் வரை, செலவு செய்த விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். இன்னும் இரு முறை (8 நாட்கள்) தண்ணீர் திறந்தால், அனைத்து பயிர்களையும் காப்பாற்றி விடலாம் என்ற நிலை உள்ளது.
குடிநீர் தேவைக்காக மட்டுமே, அணையில் நீர் இருப்பதாக கூறி, தண்ணீர் திறக்க அதிகாரிகள் மறுத்து விட்டனர். நேற்று முன்தினம், விவசாயிகளின் ஆலேசானை கூட்டமும், அதைதொடர்ந்து கவன ஈர்ப்பு ஊர்வலமும் நடந்தது.
நேற்று, மேலூர், சுற்றுப்பகுதியில் அனைத்து கடைகளும், விவசாயிகளுக்கு ஆதரவாக அடைக்கப்பட்டன; பொதுப்பணித்துறை அலுவலகம் முன் கூடிய 5000 விவசாயிகள், சங்கத் தலைவர் முருகன் தலைமையில் ஊர்வலமாக கிளம்பினர். இரண்டு கி.மீ., ஊர்வலமாக சென்று, நான்கு வழிச்சாலையில், மதியம் 12.30 மணி முதல் 4.30 மணி வரை மறியலில் ஈடுபட்டனர்; போக்குவரத்து மாற்றிவிடப்பட்டது. ஆர்.டி.ஓ., ஆறுமுக நயினார், தாசில்தார் குமார் பேச்சு நடத்தினர்; பின், பாலகிருஷ்ணன் எஸ்.பி., பேச்சு நடத்தியும், முடிவு எட்டுவதில் இழுபறி நீடித்தது. இதைதொடர்ந்து, விவசாயிகள் கைது செய்யப்பட்டனர்.மூன்று நாட்கள் மட்டும் தண்ணீர் திறக்க ஒப்புக்கொண்டதாக, அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கடலை எண்ணெய் விலை உயர்வு



விருதுநகர்:விருதுநகர் சந்தையில், கடலை எண்ணெய் விலை உயர்ந்தது. பாமாயில், பருப்பு விலை குறைந்துள்ளது.எண்ணெய் சந்தையில், கடலை எண்ணெய் (15 கிலோ டின்) கடந்த வாரத்தை விட, 100 ரூபாய் உயர்ந்து, தற்போது, 1,350 ஆக உள்ளது. சன்பிளவர் எண்ணெய், 1,200, நல்லெண்ணெய், 2,900 ரூபாய் என்ற அளவில் மாற்றமின்றி இருந்தன.பாமாயில், கடந்த வாரத்தை விட, டின்னுக்கு, 100 ரூபாய் குறைந்து, 995 ஆக உள்ளது. 80 கிலோ நிலக்கடலை பருப்பு, 3,900 ரூபாய்க்கும், 100 கிலோ கடலை புண்ணாக்கு, 3,300 ரூபாய்க்கும் விற்பனையாகிறது. 100 கிலோ சர்க்கரை மூட்டை, 3,015 ரூபாய்க்கும், 90 கிலோ மைதா, 3,090 ரூபாய்க்கும், 90 கிலோ ரவை, 3,375 ரூபாய்க்கும், 55 கிலோ பொரிகடலை, 2,520 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. 100 கிலோ பர்மா உளுந்தில், பொடி வகை, 4,350 ரூபாய்க்கும், பருவட்டு வகை, 4,550 ரூபாய்க்கும், நாட்டு உளுந்து, 5,300 ரூபாய்க்கும் விற்கப்படுகின்றன. 100 கிலோ உளுத்தம் பருப்பில், பர்மா பொடி வகை, 5,300 ரூபாய்க்கும், பருவட்டு வகை, 5,700 ரூபாய்க்கும், நாட்டு வகை, 6,800 ரூபாய்க்கும் விற்கப்படுகின்றன.

100 கிலோ துவரம் பருப்பில், நாட்டுவகை, 6,700 ரூபாய்க்கும், இரண்டாம் வகை 5,900 ரூபாய்க்கும், பொடி வகை, 5,500 ரூபாய்க்கும் விற்கப்படுகின்றன. இவை, மூட்டைக்கு சராசரியாக, 100 முதல் 150 ரூபாய் வரை குறைந்துள்ளது.100 கிலோ முதல் ரக பாசிப் பருப்பு 8,200 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம், 8,000 ரூபாய்க்கும் விற்பனையாகின்றன. 100 கிலோ ஆந்திரா, குண்டூர் வற்றல் 8,000 முதல் 8,100 ரூபாயாக உள்ளது. நாட்டுவற்றல் வரத்து இல்லை.

## பட்டு நூலிழை விலை உயர்வால் கோரா பட்டு சேலை நெசவாளர்கள் பாதிப்பு



கோபி:கோரா பட்டு நூலிழை விலை தொடர்ந்து அதிகரித்து வருவதால், ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த, 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பட்டு புடவை உற்பத்தியாளர்கள், கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஈரோடு மாவட்டம்:ஈரோடு மாவட்டம் நம்பியூர், அந்தியூர், சத்தியமங்கலம், டி.ஜி.புதுார், வாணிப்புத்துார், சாவக்காட்டுபாளையம் பகுதியில், 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட கோரா பட்டு நெசவாளர்கள் உள்ளனர்.கோரா பட்டு சேலை உற்பத்தியில், டிசைனர், பாவு நெய்பவர்கள், வண்ணம் தீட்டுபவர்கள், நெசவாளர்கள் என, 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உள்ளனர்.தினமும், லட்சக்கணக்கான ரூபாய் மதிப்பிற்கான, சேலைகள் உற்பத்தி செய்யப்பட்டு, தமிழகம் மட்டுமின்றி வட மாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இறக்குமதி வரி:நடப்பு நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டில், பட்டு நூலிழைக்கான இறக்குமதி வரி, 5 சதவீதத்தில் இருந்து, 15 சதவீதமாக உயர்த்தப்பட்டது.வரி உயர்வுக்குப்பின், பட்டு நூலிழை விலை, பல மடங்கு உயரத் துவங்கி உள்ளதால், பட்டு சேலை உற்பத்தியாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.பட்டு நூலிழை இறக்குமதி வரி உயர்வை திரும்பப் பெற வேண்டும் என, தமிழகம் முழுவதும், கோரா பட்டு நெசவாளர்கள், ஒரு வார காலம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.கோரா பட்டு உற்பத்தியாளர்கள் சங்க பிரதிநிதி கோவிந்தராஜ் கூறியதாவது:இறக்குமதி வரி உயர்வால், 2,000 ரூபாயாக இருந்த, ஒரு கிலோ பட்டு நூலிழை விலை, 4,500 ரூபாயாக உயர்ந்துள்ளது.

விலைவாசி:விலைவாசி உயர்வுடன், பட்டு நூலிழை விலை உயர்வும் நெசவாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. இறக்குமதி வரி உயர்வால், பல லட்சம் கைத்தறி நெசவாளர்கள், தொழிலாளர்களின் குடும்பத்தினர், தயாரிப்பாளர்கள், வியாபாரிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. பட்டு நூலிழைக்கான இறக்குமதி வரியை, திரும்பப் பெற வேண்டும்.இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

**வரத்து அதிகரிப்பால் மிளகு விலை சரிவு**

திருவனந்தபுரம்:உள்நாட்டு சந்தையில், மிளகு வரத்து அதிகரிப்பால், அதன் விலை சரிவடைந்துள்ளது. கடந்த நவம்பரில், இதுவரை காணாத அளவில், ஒரு கிலோ மிளகு, 525 – 530 ரூபாயாக உயர்ந்தது.

சந்தை:இந்நிலையில், இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணையம் (எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ.,), அதன் கையிருப்பில் இருந்து, 400 டன் மிளகை, சந்தைக்கு அனுப்பிஉள்ளது.அதே சமயம், உள்நாட்டில், மிளகிற்கான தேவையும் குறைந்து உள்ளது. இதனால், ஒரு கிலோ மிளகு விலை, 490 – 500 ரூபாய் என்ற அளவில் குறைந்துள்ளது.கடந்த ஆண்டு, கலப்பட மிளகு அதிக அளவில் சந்தையில் புழங்குவது தெரியவந்தது.

க்ஷஇதையடுத்து, எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ., எடுத்த அதிரடி நடவடிக்கையால், 6,800 டன் மிளகு பறிமுதல் செய்யப்பட்டது.அவற்றில், கலப்படம் செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்த ஆய்வு நடைபெற்று வருகிறது. இந்த கையிருப்பில் இருந்து, கலப்படம் இல்லை என்ற சான்று பெற்ற, 400 டன் மிளகு, மீண்டும் சந்தைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, சந்தையில் மிளகு வரத்து அதிகரித்துள்ளது. இது மேலும் அதிகரித்து, விலை குறையும் என்ற எதிர்பார்ப்பில் வியாபாரிகள் உள்ளனர். அதனால், மிளகிற்கான தேவை குறைந்துள்ளது.அதே சமயம், ஓலியோரெசின் நிறுவனங்கள், சந்தையை எதிர்பார்க்காமல், விவசாயிகளிடம் நேரடியாக, ஒரு கிலோ, 560 – 570 ரூபாய் என்ற விலையில், மிளகை கொள்முதல் செய்து வருவதாக, இத்துறை சார்ந்தவர்கள் தெரிவித்தனர்.சர்வதேச சந்தையில், நடப்பாண்டு, மிளகு சப்ளை குறையும் என்ற மதிப்பீடு காரணமாக, மேற்கண்ட

நிறுவனங்கள், விவசாயிகளிடம் நேரடி யாக மிளகை கொள்முதல் செய்து வருவதாக, அவர்கள் மேலும் கூறினர்.சென்ற ஆண்டை விட, நடப்பாண்டு, சர்வதேச மிளகு உற்பத்தி, 10,258 டன் குறைந்து, 3,27,090 டன்னில் இருந்து, 3,16,832 டன்னாக சரிவடையும் என, சர்வதேச மிளகு கூட்டமைப்பு (ஐ.பி.சி.,) மதிப்பிட்டுள்ளது.

கையிருப்பு:கடந்த, 2011ம் ஆண்டு, உலக அளவில், 3,17,750 டன் மிளகு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.இந்தியாவின் மிளகு உற்பத்தி, வரும், 2014ம் ஆண்டு, 13 ஆயிரம் டன் குறைந்து, 45 ஆயிரம் டன்னாக வீழ்ச்சி காணும் என, ஐ.பி.சி., கணித்துள்ளது.இது, நடப்பாண்டிலும், 45 ஆயிரம் டன்னாகவே இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இத்துடன், கடந்த ஆண்டின், 9,760 டன் கையிருப்பையும் சேர்த்து, மொத்தம், 54,760 டன் மிளகு, வரத்தாகும் என, எதிர்பார்க்கப்படுகிறது.தொடர் மழை, பூச்சித் தாக்குதல் உள்ளிட்டவை காரணமாக, உள்நாட்டில் மிளகு உற்பத்தி குறைந்து உள்ளது.மிளகு உற்பத்தியில், வியட்னாம் முதலிடத்திலும், இந்தியா இரண்டாவது இடத்திலும் உள்ளன.

**ரபி பருவ பயிர் சாகுபடி பரப்பு 6 சதவீதம் அதிகரிப்பு**



புதுடில்லி:ரபி பருவ பயிர் சாகுபடி பரப்பளவு, டிசம்பர் 20ம் தேதி வரையிலுமான காலத்தில், 6 சதவீதம் அதிகரித்துள்ளது என, மத்திய வேளாண் அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

பருவ மழை:நாட்டின் பல மாநிலங்களில், பருவமழை நன்கு இருந்ததை அடுத்து, விவசாயிகள், கோதுமை, நெல், கொண்டைக் கடலை, கடுகு உள்ளிட்டவற்றின் சாகுபடியை அதிகளவில் மேற்கொண்டதையடுத்து, ரபி பருவ ஒட்டு மொத்த சாகுபடி பரப்பளவு சிறப்பான அளவில் வளர்ச்சி கண்டுள்ளது.குறிப்பாக, மதிப்பீட்டு காலத்தில், கோதுமை பயிரிடும் பரப்பளவு, 273.97 லட்சம்

ஹெக்டேராக உயர்ந்துள்ளது.
இது, கடந்த ஆண்டின் இதே காலத்தில், 253.20 லட்சம் ஹெக்டேராக இருந்தது.மத்திய பிரதேசம் (11.11 லட்சம் ஹெக்டேர்), உத்தரபிரதேசம் (5.24 லட்சம் ஹெக்டேர்) குஜராத் (3.63 லட்சம் ஹெக்டேர்) மற்றும் பீகார் (0.97 லட்சம் ஹெக்டேர்) உள்ளிட்ட மாநிலங் களில், கோதுமை பயிரிடும் பரப்பளவு குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துள்ளது.
ராஜஸ்தான்:இதே நிலை தொடரும் பட்சத்தில், நடப்பாண்டில், கோதுமை பயிரிடும் பரப்பளவு, கடந்தாண்டு அளவை ( 298.3 லட்சம் ஹெக்டேர்) தாண்டும் என, எதிர்பார்க்கப்படுகிறது.கோதுமை மட்டுமின்றி, கடுகு பயிரிடும் பரப்பளவும், 63.65 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 67.53 லட்சம் ஹெக்டேராக சிறப்பான அளவில் அதிகரித்து உள்ளது.குறிப்பாக, கணக்கீட்டு காலத்தில், ராஜஸ்தானில் கடுகு பயிரிடும் பரப்பளவு, 29.73 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துஉள்ளது. இது, கடந்தாண்டின் இதே காலத்தில், 27.32 லட்சம் ஹெக்டேராக மட்டுமே இருந்தது. அதேசமயம், உத்தர பிரதேசத்தில், கடுகு பயிரிடும் பரப்பளவு, 10.49 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 10.37 லட்சம் ஹெக்டேராக சற்று குறைந்துள்ளது.ரபி பருவ முக்கிய பயிரான, கொண்டைக்கடலை பயிரிடும் பரப்பளவு, மதிப்பீட்டு காலத்தில், 86.92 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளது. இது, கடந்தாண்டின் இதே காலத்தில், 83.05 லட்சம் ஹெக்டேராக குறைந்து காணப்பட்டது.உள்நாட்டில், நெல் பயிரிடும் பரப்பளவும், 1.74 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 2.14 லட்சம் ஹெக்டேராக வளர்ச்சி கண்டுள்ளது.
மகாராஷ்டிரா:மேலும், பருப்பு வகைகள் பயிரிடும் பரப்பளவும், 83.05 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 86.92 லட்சம் ஹெக்டேராக சிறப்பாக உயர்ந்துள்ளது. குறிப்பாக, மகாராஷ்டிரா (2.16 லட்சம் ஹெக்டேர்), மத்தியபிரதேசம் (2 லட்சம் ஹெக்டேர்) மற்றும் ராஜஸ்தான் (1.45 லட்சம் ஹெக்டேர்) உள்ளிட்ட மாநிலங்களில், விவசாயிகள் பருப்பு வகைகளை அதிகளவில் பயிரிட்டுள்ளனர்.இதே போன்று மக்காச் சோளம் பயிரிடும் பரப்பளவும், 9.59 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 11.11 லட்சம் ஹெக்டேராக வளர்ச்சி கண்டுள்ளது. குறிப்பாக, பீகார் (1.17 லட்சம் ஹெக்டேர்), மகாராஷ்டிரா (71 ஆயிரம் ஹெக்டேர்)

மற்றும் தமிழகம் (34,200 ஹெக்டேர்) ஆகிய மாநிலங்களில், இதன் பயிரிடும் பரப்பு சிறப்பாக உயர்ந்துள்ளது.

பல்வேறு தானியங்கள் பயிரிடும் பரப்பளவு உயர்ந்துள்ள நிலையில், கம்பு பயிரிடும் பரப்பளவு, 37.54 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 35.30 லட்சம் ஹெக்டேராக சரிவடைந்து உள்ளது. இதற்கு, மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் இதன் சாகுபடி பரப்பு குறைந்து போனதே முக்கிய காரணமாகும் என, வேளாண் அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது.

சூரியகாந்தி:கம்பு மட்டுமின்றி, நிலக்கடலை பயிரிடும் பரப்பளவும், மதிப்பீட்டு காலத்தில், 3.67 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 3.44 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது. மேலும், சூரியகாந்தி பயிரிடும் பரப்பளவும், 4.13 லட்சம் ஹெக்டேரிலிருந்து, 3.23 லட்சம் ஹெக்டேராக சரிவடைந்துள்ளது என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வரத்து குறைவு: மீன் விலை "விர்!' ஆயிரம் ரூபாயை தொட்டது வஞ்சிரம்**

கோவை : மீனவர்கள் வேலை நிறுத்தம், கிறிஸ்துமஸ் பண்டிகை உள்ளிட்டவற்றால் வரத்து குறைவானதால், மீன் விலை கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளது. வஞ்சிரம் மீன் கிலோ ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை ஆனது. தமிழகத்தின் பல்வேறு தொழில் களில் மீன்பிடி தொழிலும் முக்கிய இடம் வகித்து வருகிறது. தினமும் பல ஆயிரம் டன் மீன்கள், உணவு உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக பிடிக்கப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தூத்துக்குடி, நாகப்பட்டினம், ராமேஸ்வரம், கன்னியாகுமரி உள்ளிட்ட இடங்களில் இருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் மீன், விற்பனைக்காக அனுப்பப்பட்டு வருகிறது.

தமிழக மீனவர்கள் அண்டை நாட்டு கடற்படையினரால், கைது செய்யப்படுவதை கண்டித்து பல்வேறு கடலோர மாவட்டங்களில் மீனவர்கள் வேலை நிறுத்தம் செய்து வருவதால், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் மீன் வரத்து குறைந்துள்ளது. இதனால், விலையும் கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளது. மாவட்ட மீன் விற்பனையாளர்கள் சங்க உறுப்பினர் அப்பாஸ் கூறியதாவது:

கோவையில் உக்கடத்தில் மொத்தம் மற்றும் சில்லரைக்கு இரு விற்பனை மையங்கள் உள்ளன. இவை தவிர பல்வேறு பகுதிகளிலும், சில்லரை விற்பனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. கோவைக்கு தூத்துக்குடி, நாகை, ராமேஸ்வரம், கன்னியாகுமரி, மண்டபம், சென்னை, ஆந்திரா, கேரளா உள்ளிட்ட பகுதிகளிலிருந்து, 450 டன்னுக்கும் அதிகமான மீன்கள் கொண்டு வரப்படுகின்றன. தற்போது கிறிஸ்மஸ் பண்டிகைக்கான நோன்பு துவங்கியுள்ளதால், பெரும்பாலான மீனவர்கள் கடலுக்கு செல்வதில்லை. இதனால், மீன்பிடி தொழில் குறைந்துள்ளது. மேலும், தமிழக கடல் எல்லைப் பகுதியில் மீன்கள் இல்லாததால், அவை கிடைக்கும் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்கின்றனர். இவ்வாறு செல்லும் போது, இலங்கை உள்ளிட்ட அண்டை நாட்டு கடல் எல்லைப்பகுதிக்குள் சென்றதாக கைது செய்யப் படுகின்றனர். இதனால், மீனவர்கள் வேலை நிறுத்தம் உள்ளிட்ட போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

கிறிஸ்துமஸ் பண்டிகை,

மீனவர்கள் போராட்டத்தால் கேரளா மற்றும் ராமேஸ்வரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து வழக்கமாக வரும் மீன் அளவு குறைந்துள்ளது. இதனால், கடந்த சில நாட்களாக மீன் விலை

கணிசமாக உயர்ந்துள்ளது. கடந்த வாரம் ரூ.600 முதல் 700 வரை விற்கப்பட்ட வஞ்சிரம் மீன், தற்போது ரூ.900 முதல் ரூ.1000 வரை விற்பனை ஆகிறது. இதேபோல் பல்வேறு வகை மீன்களின் விலையும் உயர்ந்துள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

· தமிழக மீனவர்கள் அண்டை நாட்டு கடற்படையினரால், கைது செய்யப்படுவதை கண்டித்து பல்வேறு கடலோர மாவட்டங்களில் மீனவர்கள் வேலை நிறுத்தம் செய்து வருவதால், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் மீன் வரத்து குறைந்துள்ளது. இதனால், விலையும் கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளது.

**பன்னீர் கரும்பு அமோக விளைச்சல் வெளிமாநில வியாபாரிகள் படையெடுப்பு**

நடுவீரப்பட்டு ;நடுவீரப்பட்டு பகுதியில் பன்னீர் கரும்பு நல்ல விளைச்சலால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள் ளனர்.பண்ருட்டி அடுத்த பத்திரக்கோட்டை, சத்திரம், மதன கோபாலபுரம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் 100 ஏக்கர் பரப்பளவில் பன்னீர் கரும்புகளை விவசாயிகள் மிகவும் ஆர்வத்துடன் ஒவ்வொரு ஆண்டும் பயிரிட்டு வருகின்றனர்.கடந்த இரண்டு ஆண்டுகளாக கரும்பு சரியான விளைச்சல் இல்லாததால் விவசாயிகள் கடும் அவதியடைந்து வந்தனர். இந்த ஆண்டு கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியாக விட்டு விட்டு மழை பெய்ததால் கரும்பு நல்ல விளைச்சல் உள்ளது.தற்போது கரும்புகள் வளர்ந்து நல்ல விளைச்சலால் விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.இந்த ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு குஜராத், ஆந்திரா மாநில வியாபாரிகள் பத்திரக்கோட்டை பகுதிகளில் முகாமிட்டு கரும்புகளை விலைக்கு வாங்கி வெட்டி லாரிகளில் ஏற்றி செல்கின்றனர்.தற்போது 20 கரும்புகள் உள்ள ஒரு கட்டு 230 முதல் 250 ரூபாய்வரை விற்பனையாகிறது. பொங்கல் வரை இதே விலை நீடிக்கும் என்று விவசாயிகள் கூறுகின்றனர். விளைந்துள்ள கரும்புகள் அனைத்தும் பொங்கல் பண்டிகைக்கு விற்று விட்டால் விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள்.

வேளாண் அலுவலகத்தில் 'ஆன் - லைன் பில்லிங்'

படப்பை : காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள, வட்டார வேளாண் மையங்களில், 'ஆன் - லைன் பில்லிங்' வரும் மார்ச் மாதம் முதல், அறிமுகப்படுத்தப் பட உள்ளது. வேளாண் மையங்களில் இனி, ஆன் - லைன் பில்லிங் மூலம் ரசீது வழங்கப்படும். இதற்காக, மாவட்டத்தில் உள்ள வட்டார வேளாண் அலுவலக கிடங்கு மேலாளர்களுக்கு, கடந்த வாரம் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த முறை தமிழகத்தில் உள்ள அனைத்து வட்டார வேளாண் மையங்களுடன், ஆன் - லைனில் இணைக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நடைமுறை, அடுத்த ஆண்டு மார்ச் மாதம் முதல்

துவங்கப்படும் என, கூறப்படுகிறது.

அரசு தோட்டக்கலை பண்ணையில் செடிகள் பதியம் போடும் பணி தீவிரம்

காஞ்சிபுரம் : விச்சந்தாங்கல் அரசு தோட்டக்கலைப் பண்ணையில், பழ வகை மற்றும் பூச்செடிகள் உற்பத்தி செய்யும் பணியில், தற்காலிக ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

காஞ்சிபுரம் அடுத்துள்ளது விச்சந்தாங்கல் கிராமம். இங்கு, 57 ஏக்கர் பரப்பளவில், அரசு தோட்டக்கலைப் பண்ணை இயங்கி வருகிறது.

மா, தேக்கு, புங்கன், நாவல், தைலம் உள்ளிட்ட மரக்கன்றுகளும், கொய்யா, சப்போட்டா, மாதுளை ஆகிய பழ வகை கன்றுகளும், ரோஜா, மல்லி, ஜாதி மல்லி என, பூச்செடிகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

விவசாயிகள், பொதுமக்கள் என, அனைத்து தரப்பு மக்களும், மேற்கண்ட செடிகளை, மானிய விலையில் வாங்கிச் செல்கின்றனர்.

2014ம் ஆண்டிற்கான மரக்கன்றுகள், பூச்செடிகள், பழவகை கன்றுகளை பதியம் போட்டு, உற்பத்தி செய்யும் பணி துவங்கப்பட்டுள்ளது.

இதற்கான பாலித்தீன் கவர்களில் உரம் கலந்த, சத்து மண் அடைக்கும் பணிகளில், தற்காலிக ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுகுறித்து, விச்சந்தாங்கல் அரசு தோட்டக்கலை பண்ணையின் உதவி அலுவலர் ராஜகிரி கூறியதாவது: "2014ம் ஆண்டிற்கு தேவையான செடிகள் உற்பத்தி செய்யும் பணிகள் நடந்து வருகின்றன. இதன் முதற்கட்டமாக உரம் கலந்த சத்து மண் பாலித்தீன் கவர்களில் அடைக்கப்படுகிறது. இதில், பதியம் போடும் செடிகள், அடுத்த மாத கடைசி வாரத்தில் தயாராகிவிடும். திருமண விழாக்களில், தாம்பூலத்திற்கு பதிலாக, பூச்செடி மற்றும் மரக்கன்றுகளை வழங்கும் நடைமுறை இருந்து வருவதால், செடிகளின் விற்பனையும் அதிகரித்து வருகிறது.

இவ்வாறு, அவர் கூறினார்.

**பண்ணை குட்டைகள் நிரம்பினநிலத்தடி நீர் உயர்வால் மகிழ்ச்சி**

தியாகதுருகம்: "மடி' புயல் கொடுத்த மழையால் தியாகதுருகம் ஒன்றியத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பண்ணை குட்டைகள் நிரம்பியுள்ளன.மழை நீரை சேமித்து நீரில் உறியச் செய்து நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தும் வகையில் கிராம ஊராட்சிகளில் பண்ணை குட்டைகள் அமைக்க அரசு உத்தரவிட்டது. தியாகதுருகம் ஒன்றியத்தில் உள்ள 40 ஊராட்சிகளிலும் புதிதாக அரசு மற்றும் தனியார் இடங்களில் 100 க்கும்மேற்பட்ட பண்ணை குட்டைகள் அமைக்கப்பட்டன.இதனை சுற்றி பெய்யும் மழை நீர் குட்டையில் வந்தும் நிரம்பும்படி வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடந்த வாரம் "மடி' புயல் காரணமாக தியாகதுருகம் ஒன்றியத்தில் கனமழை பெய்தது. சில ஏரிகள் நிரம்பின. பல ஊர்களில் முக்கால் பங்கு அளவு ஏரி, குளங்களுக்கு தண்ணீர் கிடைத்தது.ஒவ்வொரு ஊராட்சிகளிலும் அமைத்த பண்ணை குட்டைகள் நிரம்பியுள்ளன. மழை நீர் வீணாகாமல் குட்டையில் தேங்கி நிற்பதால் இப்பகுதி நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. இது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**கருவிகள் மூலம் நவீன வேளாண்மைவிவசாயிகளுக்கு பயிற்சிகள் துவக்கம்**

விழுப்புரம்:விழுப்புரம் மாவட்டத்தில் வேளாண் பொறியியல் துறை மூலம் விவசாயிகளுக்கு நவீன வேளாண் கருவிகள் குறித்த பயிற்சியளிக்கும் திட்டம் செயல்படுத்தப் படுகிறது.வேளாண் பொறியியல் துறை மூலம் நடைபெறும் இப்பயிற்சியில் தலா 20 விவசாயிகள் பங்கேற்க வேண்டும். ஒவ்வொரு பயிற்சியும் 26 ஆயிரம் ரூபாய் செலவில் நடக்கிறது. இதில் பங்கேற்கும் விவசாயிகளுக்கு ஊக்கதொகை, எழுது பொருள், மதிய உணவு மற்றும் இயந்திரங்களை இயக்கும் பயிற்சிக்கு செல்லும் போக்குவரத்து செலவும் வழங்கப்படுகிறது.இதில், 18 வயது முதல் 40 வயதிற்குட்பட்ட ஊரக வேலைவாய்ப்பற்ற படித்த விவசாயிகள் பங்கேற்கலாம். கடந்த ஆண்டுகளில் வேளாண் பொறியியல் துறை மூலம்

வேளாண் கருவிகள் மானியத்தில் பெற்ற விவசாயிகளுக்கு, முன்னுரிமை அளிக்கப்படுகிறது.புன்செய் நிலங்களில் வேளாண் பணிகள் மேற்கொள்ளும் இயந்திரங்கள் தேர்வு செய்தல், இயக்குதல் மற்றும் பராமரித்தல், நவீன வேளாண் கருவிகள் தேர்வு செய்தல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் மற்றும் பாதுகாப்பாக இயக்குதல் ஆகிய பயிற்சி அளிக்கப்படுகிறது.நெல் விதை விதைப்பு, நாற்று நடவு இயந்திரம், நெல் அறுவடை இயந்திரம் ஆகியவற்றின் பராமரிப்பு மற்றும் இயக்கம், கரும்பு சாகுபடி மற்றும் அறுவடைக்கு பயன்படுத்தும் இயந்திரங்கள் பற்றிய பயிற்சியும் அளிக்கப்படுகிறது.இதில் பங்கேற்க விருப்பமுள்ள விழுப்புரம் மற்றும் வானூர் வட்ட விவசாயிகள் விழுப்புரம் உதவி செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல்), வழுதரெட்டி, பெரியார் தெரு, விழுப்புரம் என்ற முகவரியில் உள்ள அலுவலகத்தை அணுக வேண்டும்.அதே போல், திண்டிவனம், செஞ்சி விவசாயிகள் உதவி செயற்பொறியாளர், 56-பி, நான்காவது குறுக்கு வீதி, திண்டிவனம், ஜெயபுரம் அலுவலகம் மற்றும் திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை விவசாயிகள் உதவி செயற்பொறியாளர், 45/72, பெரியார் தெரு, என்.ஜி. ஜி.ஓ. நகர், திருக்கோவிலூர் அலுவலகத்தை அணுக வேண்டும்.கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் மற்றும் சின்னசேலம் விவசாயிகள் உதவி செயற்பொறியாளர், 37/1, பள்ளிக்கூட வீதி, ஏமப்பேர், கள்ளக்குறிச்சி ஆகிய அலுவலகங்களை வரும் ஜனவரி 10ம் தேதிக்குள் அணுகி விண்ணப்பிக்கவேண்டும்.இத்தகவலை விழுப்புரம் வேளாண் செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார்.

**சொட்டு நீர் பாசன செயல் விளக்க முகாம்**

விழுப்புரம்: விழுப்புரம் அடுத்த மாம்பழப்பட்டில், முண்டியம்பாக்கம் ராஜஸ்ரீ சுகர்ஸ் நிறுவனம் சார்பில் கரும்பு விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசனம் அமைப்பது குறித்து செயல் விளக்க முகாம் நடந்தது.ஆலையின் துணை மேலாளர் அவினாசிலிங்கம் தலைமை தாங்கி, கரும்பு சாகுபடி மற்றும் சொட்டு நீர்பாசனம் குறித்த கையேட்டை விவசாயிகளுக்கு வழங்கினார். சாலிடாரிடாட் தொண்டு நிறுவன நிர்வாகி நவீன்குமார், நீடித்த நிலையான கரும்பு சாகுபடி குறித்து பேசினார். ஆலையின் விரிவாக்க அலுவலர் பாலமுருகன், சொட்டு நீர் பாசனத்தில்

உர நிர்வாகம் குறித்து பயிற்சி அளித்தார். ஜான்டீர் சொட்டு நீர்ப்பாசன கம்பெனி சார்பில் செயல் விளக்கம் காண்பிக்கப்பட்டது.

சொட்டு நீர் பாசனத்தினால் ஏற்படும் நன்மைகள், பராமரிப்பு முறைகள், அகலப்பார் நடவு முறை மற்றும் கரும்பில் ஊடுபயிர் போன்றவை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. ஆலையின் களப்பணியாளர்கள் ரமேஷ், தேவதாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**சர்க்கரை ஆலையில் விவசாயிகளுக்கு பயிற்சி**

செஞ்சி: செம்மேடு ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையில் நவீன தொழில் நுட்பத்தில் கரும்பு சாகுபடி குறித்து பயிற்சி முகாம் நடந்தது.

செம்மேடு ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையில் நவீன தொழில் நுட்பத்தில் கரும்பு சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு மூன்று நாள் பயிற்சி நடந்தது. உப தலைவர் ரமேஷ் முகாமை துவக்கி வைத்தார். கரும்பு துணை பொது மேலாளர் விஜயகுமார், விரிவாக்க துணை பொது மேலாளர் லட்சுமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆராய்ச்சி மேலாளர் சீனுவாசன், அபிவிருத்தி மேலாளர் வெங்கடேசபெருமாள், இணை மேலாளர் ஜெயபால், ராஜேஷ் கண்ணன் ஆகியோர் பயிற்சி அளித்தனர். விவசாய பயிற்சி அலுவலர் வித்யா நன்றி கூறினார்.

இதில் சொட்டு நீர் பாசன முறையில் நீடித்த நிலையான கரும்பு சாகுபடி திட்டம், செதில் பரு நடவு, உயிர் உரங்கள் உபயோகித்தல், மண்ணின் தன்மை, பூச்சி மற்றும் நோய் கட்டுப்படுத்தும் முறை, ஆழ உழுதல், பசுமை குடில் அமைத்தல் குறித்து விளக்கினர்.

கரும்பு அறுவடை இயந்திர செயல் விளக்கம் அளித்தனர். முகாமில் 27 விவசாயிகள், கரும்பு அலுவலர்கள், விரிவாக்க அலுவலர்கள் கலந்து கொண்டனர். விவசாயி களுக்கு பயிற்சி சான்றிதழ் வழங்கினர்.

**கோமாரி நோய்: விவசாயிகள் கவலை**

வானூர்: வானூர் பகுதியில் கோமாரி நோய் தாக்கி ஏழு மாடுகள் மற்றும் இரண்டு கன்று குட்டிகள் இறந்ததால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

வானூர் ஒன்றியம் கிளியனூர் அடுத்த கொஞ்சிமங்கலம் கிராமத்தில் கடந்த ஒரு மாதமாக ஆடு மாடுகள் வாய், கால் கோமாரி நோயால் பாதித்தன. இதில் ராஜி, குப்புசாமி, ஆறுமுகம், மாசிலாமணி, மணி, மஞ்சினி, சிவா ஆகியோரின் கறவை மற்றும் காளை மாடுகள் இறந்தன. கிராமத்தில் இது வரை ஏழு கறவை மற்றும் காளை மாடுகளும், இரண்டு கன்று குட்டிகள் இறந்ததால் பொது மக்கள் மத்தியில் பீதி ஏற்பட்டுள்ளது. மேலும் சில மாடுகளுக்கு நோய் தாக்கியுள்ளதால் இறப்பு அதிகரிக்கும் நிலையில் உள்ளது. இது விவசாயிகள் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

கொஞ்சிமங்கலம் கிராமத்தில் கால்நடை மருத்துவ முகாம் நடத்த கிளியனூர் கால்நடை மருத்துவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். கோமாரி நோயால் இறந்த மாடுகளுக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

**சொட்டுநீர் பாசனத்துக்கு மாறுவதால் விவசாய மின் நுகர்வு அதிகரிப்பு**

மேட்டூர்: தமிழகத்தில், சொட்டு நீர் பாசன பரப்பு அதிகரிப்பதால், அதற்கேற்ப விவசாய இணைப்புகளுக்கான மின்தேவையும் அதிகரிக்கிறது. இதனால், தமிழகத்தின் மின்நுகர்வு மேலும், அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

தமிழகத்தில், தற்போது விவசாய இணைப்பு, 20 லட்சம், குடிசைகளுக்கு, 10 லட்சம், தொழிற்சாலைகளுக்கு, 3.5 லட்சம், வீடுகளுக்கு, 1.80 கோடி என மொத்தம் இரண்டு கோடிக்கு மேல் மின்நுகர்வோர் உள்ளனர். மொத்த மின் வினியோகத்தில், 20 சதவீதத்துக்கு மேல், விவசாயத்துக்கு இலவசமாக வழங்கப்படுகிறது.

கடந்த, 2009ல், 9,500 மெகாவாட் ஆக இருந்த தமிழகத்தின் உச்சபட்ச மின்தேவை, நடப்பாண்டு, 12,000 மெகாவாட் ஆக அதிகரித்துள்ளது. டெல்டா மாவட்ட விவசாய பணிகளுக்கு கூடுதல் நேரம் மின்சாரம் வழங்குவதால், கடந்த சில நாட்களாக, தமிழகத்தின் மின்நுகர்வு படிப்படியாக அதிகரித்து வருகிறது.

கடந்த, 9ம் தேதி, 11,340 மெகாவாட் ஆக இருந்த தமிழகத்தின் மின்நுகர்வு, 11ம் தேதி, 11,700 மெகாவாட், 18ம் தேதி, 11,870 மெகாவாட், 19ம் தேதி, 11,970 மெகாவாட் அதிகரித்தது. நேற்று முன்தினம், மின்நுகர்வு அதிகபட்சமாக, 12,230 மெகாவாட் ஆக உயர்ந்தது.

தமிழகத்தில், சொட்டுநீர் பாசன பரப்பு அதிகரிப்பதால், அதற்கேற்ப விவசாயத்துக்கான மின் தேவை அதிகரிக்கிறது, என மின்கழக அதிகாரிகள் கூறுகின்றனர்.

இது குறித்து அவர்கள் கூறியதாவது:

தமிழகத்தில், கடந்த சில ஆண்டுகளாக, உணவு உற்பத்தியை பெருக்க, சொட்டு நீர் பாசனத்துக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. சொட்டுநீர் பாசனத்துக்கு, அரசு மானியம் வழங்குவதால், குறுகிய காலத்தில், தமிழகத்தில் பல லட்சம் விவசாயிகள் சொட்டுநீர் பாசனத்துக்கு மாறியுள்ளனர்.

ஒரு கிணற்றில், 10 அடி உயரம் இருக்கும் தண்ணீரை, ஐந்து ஹெச்.பி., பம்ப்செட் மோட்டார் மூலம், அரை மணிநேரத்துக்குள் வெளியேற்றி விடலாம்.

அதே தண்ணீர் சொட்டு நீர் பாசனத்தில், நான்கு முதல், ஆறு மணி நேரம் மின்சாரம் பயன்படுத்தி, மோட்டார் இயக்கப்படுகிறது. தமிழகத்தின் மின் தேவை மளமளவென அதிகரிப்பதற்கு, சொட்டுநீர் பாசன பரப்பு அதிகரிப்பும் ஒரு காரணம். சொட்டுநீர் பாசனம் மேலும் அதிகரிக்கும் பட்சத்தில், மின் நுகர்வும் கிடுகிடுவென அதிகரிக்கும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

**அணைக்கு நீர் வரத்து சரிவு 60 அடியாக குறைந்த பவானிசாகர் நீர்மட்டம்**

சத்தியமங்கலம்: பவானிசாகர் அணைக்கு, தண்ணீர் வரத்து தொடர்ந்து குறைந்து வருவதால், அணையின் நீர்மட்டம், 60.52 அடியாக குறைந்தது.

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் அடுத்துள்ளது பவானிசாகர் அணையின் மொத்த நீர் கொள்ளளவு, 32 டி.எம்.சி., இந்த அணையின் மூலம் வெளியேறும் தண்ணீரில், கீழ்பவானி வாய்க்கால் மூலம் 2.07 லட்சம் ஏக்கர் பாசனப்பரப்பும், பவானி ஆற்றின் மூலம் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் காலிங்கராயன் பாசனப்பகுதியை சேர்ந்த, 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களும், பாசன வசதி

பெறுகிறது.

கடந்த, ஜூலை மாதத்துக்கு முன், அணையின் நீர்பிடிப்பு பகுதியான நீலகிரி மலைப்பகுதியில் மழை பெய்யாத காரணத்தால், அணைக்கு வரும் தண்ணீர் அளவு குறைந்தது. இதனால், அணையின் நீர்மட்டம், 29 அடிக்கு சென்றது. இதனால், ஈரோடு மாவட்டத்தில் குடிநீர் மற்றும் பாசன வசதிகள் பாதிக்கப்பட்டது.

தென்மேற்கு பருவமழை தொடங்கி, நன்றாக பெய்ததால், பவானி ஆறு மற்றும் மோயாறுகளில் தண்ணீர் வந்தது. இதனால் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வேகமாக உயர தொடங்கியது.

இதனால் கடந்த ஆகஸ்ட் மாதம், 23ம் தேதி அணையின் நீர்மட்டம், 85 அடியாக உயர்ந்தது. இதனால், அணையில் இருந்து, கீழ்பவானி வாய்க்காலில் பாசனத்துக்காக, ஒற்றைப்படை மதகு பகுதிக்கு, தண்ணீர் திறக்கப்பட்டது.

இந்நிலையில், அணையின் நீர்பிடிப்பு பகுதியான, நீலகிரி மலைப்பகுதியில், போதிய மழையில்லாத காரணத்தால், அணைக்கு வரும் தண்ணீர் அளவு சரிந்தது. இதனால், அணையின் நீர்மட்டம், வேகமாக குறைய தொடங்கியது.

நேற்று மாலை, 3 மணிக்கு பவானிசாகர் அணையின் நீர்மட்டம், 60.52 அடியாக இருந்தது. அணையில் இருந்து, பவானி ஆற்றில் வினாடிக்கு, 400 கனஅடி தண்ணீரும், கீழ்பவானி வாய்க்காலில் பாசனத்துக்காக வினாடிக்கு, 2,000 கனஅடி தண்ணீரும் திறந்துவிடப்பட்டது.

அணைக்கு வினாடிக்கு, 205 கனஅடி தண்ணீர் மட்டுமே வருகிறது. கீழ்பவானி அணையில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்பட்டு, நான்கு மாதங்களானதால் அணையின் நீர்மட்டம், 25 அடிவரை குறைந்துள்ளது. **மஞ்சள் இருப்பு வைக்கும் காலம் 365 நாளாக உயர்த்தியதால் மகிழ்ச்சி**

கோபிசெட்டிபாளையம்: ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில், மஞ்சள் இருப்பு வைக்கும் காலத்தை, 365 நாட்களாக உயர்த்தி, தமிழக அரசு உத்தரவிட்டுள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தமிழகத்தில், வேளாண்மை துறையில், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் விற்பனை குழுக்களுக்கு உட்பட்ட, ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில், வேளாண் விற்பனை பொருட்களான மஞ்சள், நெல், சர்க்கரை, எள்,

மக்காசோளம், கம்பு, கேழ்வரகு, சோளம் உள்ளிட்ட விளை பொருட்கள் இருப்பு வைக்கின்றனர். இவற்றை, விலை வீழ்ச்சி காலங்களில், 180 நாட்கள் இருப்பு வைத்து, விலை உயரும் காலங்களில் விற்பனை செய்கின்றனர். இருப்பு வைக்கும் காலங்களில், 7 சதவீதம் முதல், 10 சதவீத்தில், பொருளீட்டு கடனாக விவசாயிகள் பெற்று பயனடைந்து வருகின்றனர்.

ஈரோடு மாவட்டத்தில், மஞ்சள் பிரதான பயிராக உள்ளது. பொருளீட்டு கடன் பெறுவதாலும், மஞ்சள் இருப்பு வைக்கும், 180 நாட்களில் இருந்து, 365 நாட்களாக உயர்த்த வேண்டும், என இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கமும், ஈரோடு மாவட்ட உழவர் விவாத குழு, விவசாய அமைப்பு சார்பில், தமிழக அரசு கோரிக்கை வைக்கப்பட்டது. கோரிக்கையை ஏற்ற தமிழக அரசு, இருப்பு வைக்கும் காலத்தை, 365 நாட்களாக உயர்த்தி உள்ளதால், விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அகில இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்க தலைவர் தெய்வசிகாமணி கூறியதாவது: வேளாண் வணிக இயக்குனரின் கருத்துருவை ஏற்று, ஆய்வு செய்த தமிழக அரசு, தமிழ்நாடு வேளாண் விளை பொருள் வாணிப விதிகள் விதி எண் 39(3) மற்றும் 39(4) ஆகியவற்றை திருத்தம் செய்து, மஞ்சள் விளை பொருளின் விரலி மற்றும் குண்டு மஞ்சள் வகைகளை ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில், இருப்பு வைக்கும் கால அளவை, 180 நாட்களில் இருந்து, 365 நாட்களாக உயர்த்தி, அரசு ஆணை வெளியிட்டுள்ளது. மஞ்சள் விவசாயிகள், அனைவருக்கும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. மஞ்சள் விவசாயிகள் கோரிக்கையை ஏற்று, இருப்பு வைக்கும் கால அளவை உயர்த்தியமைக்கு, இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கம் மற்றும் ஈரோடு மாவட்ட உழவர் விவாதக்குழு அமைப்புகளின் சார்பில் முதல்வர், வேளாண் துறை அமைச்சர், வேளாண் வணிக இயக்குனர் விற்பனை மற்றும் வணிக துறையினர் அனைவருக்கும் நன்றி தெரிவித்து கொள்கிறோம். இந்த வாய்ப்பை, அனைத்து மஞ்சள் விவசாயிகளும் பயன்படுத்தமாறு, வேண்டுகோள் விடுக்கிறோம். இருப்பு வைத்து பொருளீட்டு கடன் பெற்று, விலை உயரும் போது, மஞ்சளை விற்பனை செய்து பயனடையுமாறு, கேட்டுக்கொண்டார்.

**ரூ.90 லட்சம் மதிப்பில் கொப்பரை தேங்காய் ஏலம்**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த, ஏலத்தில், 90 லட்சம் ரூபாய்க்கு, கொப்பரை தேங்காய்கள் ஏலம் போனது. பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரம் தோறும் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் கொப்பரை தேங்காய் ஏலம் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த ஏலத்துக்கு, பெருந்துறை மற்றும் சுற்றுப்புறப்பகுதியில் இருந்து விவசாயிகள், 2,607 மூட்டைகளில், 1.25 லட்சம் கிலோ கொப்பரை தேங்காய்களை, கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல் தரம் கொப்பரை தேங்காய், குறைந்த பட்ச விலையாக, கிலோ, ஒன்று, 71.55 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக, 73.85 ரூபாய்க்கும் விற்பனையானது. 2ம் தரம் கொப்பரை தேங்காய் குறைந்த பட்ச விலையாக கிலோ ஒன்று, 40.15 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக, 68.40 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம், 90 லட்சம் ரூபாய்க்கு தேங்காய்கள் ஏலம் மூலம் விற்பனையானது.

**புது நெல் கொள்முதல் நிலையம் திறக்க...மெத்தனம்! அறுவடை துவக்கியதால் கடும் அதிருப்தி**

தஞ்சாவூர்: டெல்டாவில் சம்பா அறுவடை துவங்கியும், தேவைக்கேற்ப நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறப்பதில் அதிகாரிகள் மெத்தனம் காட்டுவதால், தனியாருக்கு விற்று நஷ்டத்தை சந்திக்க நேரிடுகிறது. அதனால், புதிய நிலையங்களை உடனே திறக்க அந்தந்த மாவட்ட கலெக்டர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, விவசாயிகள் கோரியுள்ளனர்.

டெல்டாவில் காவிரி நீரை நம்பியே நெல் சாகுபடி நடக்கிறது. வயலில் அறுவடையான நெல் மூட்டையை நேரடியாக விவசாயிகளிடம் பெற, அரசு சார்பில் நேரடி கொள்முதல் நிலையம் இயங்குகிறது. அறுவடை காலத்தில் தேவைக்கேற்ப நெல் கொள்முதல் நிலையங்களை கலெக்டர் உத்தரவு பெற்று, நுகர்பொருள் வாணிபக்கழக அதிகாரிகள் அவ்வப்போது திறப்பது வழக்கம். இதன்படி தற்போது, நெல் கொள்முதல் நிலையங்கள் தஞ்சையில், 155ம், திருவாரூரில், 252ம், நாகையில், 65ம் இயங்குகிறது. இது போதாது, புதிதாக

திறக்க வேண்டும் என, விவசாயிகள் கோரியுள்ளனர்.

தஞ்சை, நாகை, திருவாரூர் உள்பட டெல்டாவில் சம்பா அறுவடையை மும்முரமாக விவசாயிகள் துவக்கியுள்ளனர். ஆனால் போதுமான கொள்முதல் நிலையம் இல்லை. இதனால், நஷ்டத்தை சந்திக்க நேரிடுகிறது. குக்கிராமங்களில் கொள்முதல்நிலையம் திறப்பதில் அதிகாரிகள் மெத்தனம் காட்டுகின்றனர் என, டெல்டா விவசாயிகள் குற்றம்சாட்டுகின்றனர்.

இதுகுறித்து தஞ்சை சூரக்கோட்டை விவசாயி முருகானந்தம் கூறியதாவது: தற்போது சம்பா பயிர், 3 ஏக்கர், தாளடி பயிர், 2 ஏக்கர் போட்டுள்ளேன். சூரக்கோட்டையில் பலரும் சம்பா அறுவடையை துவக்கியுள்ளனர். நெல் மூட்டைகளை கொள்முதல் செய்ய, விவசாயிகள் வசதிக்காக, சூரக்கோட்டையில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் இயங்கி வந்தது. இங்கு கடந்த குறுவை அறுவடைக்காக திறந்த கொள்முதல் நிலையம், 2 மாதமாக மூடிக்கிடக்கிறது. அதனால் விவசாயிகள் தனியார் வியாபாரிகளிடம் நெல்லை விற்கிறோம். மக்கள் விரும்பி சாப்பிடுவதால், சன்ன ரகத்தை வியாபாரிகள் வாங்கி கொள்வர். மோட்டா ரகத்தை வாங்க மாட்டார்கள். அதனால் மோட்டார் ரக நெல்லை கொள்முதல் நிலையத்தில் தான் விற்க வேண்டும். சன்ன ரகம் நெல் மூட்டை (60 கிலோ கொண்டது), 830 ரூபாய்க்கும், மோட்டா ரகம், 790 ரூபாய்க்கும் அரசு கொள்முதல் நிலையத்தில் விற்கிறோம்.

இதுவே தற்போது வெளியில், சன்ன ரகத்தை ஒரு மூட்டை ( 60 கிலோ கொண்டது), 950 ரூபாய்க்கு வியாபாரிகள் வாங்குகின்றனர். மோட்டா ரகத்தை, 750 ரூபாய்க்கு தனியார் வியாபாரிகள் அடிமாட்டு விலைக்கு கேட்கின்றனர். சன்ன ரகத்துக்கு ரேட் தனியார் அதிகம் தந்தாலும், அறுவடை அதிகரித்தால், ரேட்டை வியாபாரிகள் குறைத்து விடுவர்.

அதனால் எப்படி பார்த்தாலும் விவசாயிக்கு தான் பாதிப்பு. கொள்முதல் நிலையத்தில் நெல் போட்டால், ரொக்கமாக கையில் வாங்கி கொள்ளலாம். அதனால் தேவையை அறிந்து கொள்முதல் நிலையம் அரசு திறக்க வேண்டும். மெயின்ரோட்டில் மட்டும் திறந்து, அதிகாரிகள் கணக்கு காட்டுகின்றனர். குக்கிராமத்தில் நிலையம் திறந்தால் தான் விவசாயிக்கு போக்குவரத்து செலவு

குறையும், பயன் இருக்கும். இவ்விஷயத்தில் கலெக்டர் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

இதுகுறித்து தஞ்சை, திருவாரூர், நாகை மண்டல நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மேலாளர்கள் முகமது பாதுஷா, அழகிரிசாமி, ராதாகிருஷ்ணன் ஆகியோர் கூறுகையில், ""தற்போது இயங்கி வரும் கொள்முதல் நிலையங்களின் எண்ணிக்கையை, சம்பா அறுவடையையொட்டி, அந்தந்த பகுதி தேவைக்கேற்ப உயர்த்தவும், புதிதாக திறக்கவும் கலெக்டர் உத்தரவு பெற்று நடவடிக்கை எடுக்கப்படும்," என்றனர்.

**தாய்ப்பால் போன்றது மண்புழு உரம்**

இயற்கையாக கிடைக்க கூடிய குளத்துமண், சாணம், இலை தழைகள், புண்ணாக்கு வகைகள் இதிலிருந்து மக்க வைத்து பெறப்படும் பயனுள்ள உரங்கள் மண்புழு உரங்கள். விவசாயிகள் மண் புழு உரத்தை 60 சதவீதத்திற்கு மேல் பயன்படுத்தும் போது, மண்ணின் நச்சுத்தன்மை குறைந்து, ஆரோக்கியமான உணவுப்பொருட்கள் கிடைக்கும். ஏனெனில் மண்புழு உரம் தாய்ப்பால் போன்றது.

மண்புழு உரத்தில் கடைசி வரை மக்கிய இயற்கை உரம் உள்ளது. என்.பி.கே., அளவுகள் மிகவும் அதிகம். நுண்ணூட்ட சத்துக்கள் மிகவும் அதிகம். நுண்ணுயிர்களின் அளவு அதிகம். வளர்ச்சி ஊக்கிகள் ஏராளம். களைகளின் விதைகள் முற்றிலும் இல்லை. தீமை செய்யும் நுண்ணுயிர்கள் அறவே இல்லை. விளைபொருட்களின் தரத்தை அதிகப்படுத்தும். விளைபொருட்களின் கடினத்தன்மையும் அதிகப்படுத்தும்.

இதனை பயன்படுத்துவதால் விளைநிலம் உயிர்பெறுகிறது. நிலத்தில் பயிர்களுக்கு நன்மை தரும் நுண்ணுயிர்கள் கோடிக்கணக்கில் பெருகுகிறது. பயிர்கள் தாமதம் இன்றி நல்ல வளர்ச்சி பெறுகிறது. பிரதான வேர்கள் மற்றும் சல்லி வேர்களின் எண்ணிக்கை அதிகமாகிறது. பூ, பிஞ்சு உதிர்வு மிகவும் குறைகிறது. விளைபொருட்களின் எடை அதிகரிக்கிறது. காய், கனிகளின் சுவை அதிகரிக்கிறது. விளைபொருட்கள் அறுவடைக்கு பின்னர் அதிக நாட்கள் கெடாமல் பாதுகாக்கப்படுகிறது.

மேலும் தகவலுக்கு பாலசுப்பிரமணி -94430 36781.

**விவசாயத்துறையும் தேனி மாவட்டமும்**

தேனி மாவட்டம் 3242.3 சதுர கி.மீ., பரப்பளவு கொண்டது. கிழக்கில் மதுரை மாவட்டம், வடக்கில் திண்டுக்கல் மாவட்டம், தெற்கில் விருதுநகர் மாவட்டம், மேற்கில் கேரள மாநிலத்தினை எல்லைகளாக கொண்டுள்ளது. மொத்த நிலப்பரப்பு 2,88, 923 ஹெக்டேர். 1,20,112 விவசாயிகள், 1,28, 336 எக்டேர் பரப்பில் விவசாயம் செய்து வருகின்றனர். 67 சதவீதம் மக்கள் கிராமங்களில் உள்ளனர். மாவட்டத்தின் அதிகபட்ச வெப்பநிலை 38.5 டிகிரி செல்சியஸ்.

குறைந்தபட்ச வெப்பநிலை 26.3 டிகிரி செல்சியஸ். சராசரி மழையளவு 826.8 மி.மீ., ஆற்றுப்பாசன பகுதியில் நெல், பயறு வகைகள், கிணறு பாசனம், குளத்துப்பாசனத்தில் நெல், கரும்பு, பருத்தி, காய்கறிகள், மக்காச்சோளம், பயறு வகைகள் சாகுபடி செய்யப்படுகிறது. மானாவாரியில் சிறுதானியங்கள், எண்ணெய் வித்துப்பயிர்கள் பயறு வகை பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது.

அரசு தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் பெரியகுளத்திலும், தனியார் விவசாய கல்லூரி குள்ளப்புரத்திலும் அமைந்துள்ளது. பெரியகுளத்தில் அரசு தோட்டக்கலை பண்ணை அமைந்துள்ளது. தமிழ்நாடு விவசாய பல்கலை., விவசாய ஆராய்ச்சி நிலையம் வைகை அணை கோவில்பட்டியில் அமைந்துள்ளது. அரசு விதைப்பண்ணை கீழக்கூடலூரிலும், தென்னை நாற்றுப்பண்ணை வைகை அணை கோவில்பட்டியிலும், தென்னை ஒட்டுப்பண்ணை போடியிலும் அமைந்துள்ளது.

மாவட்டத்தில் நெல் இயல்பாக 18 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்படும். சிறு

தானியங்கள் 36 ஆயிரத்து 700 ஹெக்டேரிலும், பயறு வகைகள் 14 ஆயிரத்து 430 ஹெக்டேரிலும், எண்ணெய் வித்து பயிர்கள் 2800 ஹெக்டேரிலும், கரும்பு 6000 ஹெக்டேரிலும், பருத்தி 1900 ஹெக்டேரிலும் சாகுபடி செய்யப்படுகிறது.

**"வாடை' காற்று அள்ளித்தரும் "சூடை'**

அழகன்குளம் : பாக் ஜலசந்தி கடலில் வீசும் "வாடை' காற்றுக்கு "சூடை' சீசன் (நவம்பர் முதல் மார்ச் வரை) துவங்கியுள்ளது. இந்த சீசனில் மட்டும் "ருசி' மிகுந்த இந்த மீன் பாடு, அழகன்குளத்தில் இதுவரை இல்லாத அளவிற்கு, நேற்று அதிகம் கிடைத்தது.

போலியோவால் பாதம் ஊனமுற்ற இப்பகுதி மீனவர் இருளாண்டி கூறுகையில், ""இன்று ரூ.5000த்திற்கும் மேல் பாடு கிடைத்தது," என்றார். ராமநாதபுரம் மார்க்கெட்டில் கிலோ ரூ.30க்கு விற்கப்பட்டது.

**பனை வெல்ல பயிற்சி முகாம்**

காளையார்கோவில் : காளையார்கோவிலில், பனைவெல்ல உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில்,பனைவெல்லம் மற்றும் பனை ஓலை மூலம் அழகுசாதன பொருட்கள் தயாரிப்பு குறித்த பயிற்சி முகாம் நடந்தது.

ராமநாதபுரம், சிவகங்கை மாவட்ட பனைவெல்ல விற்பனை சம்மேளன தலைவர் சேதுபாலசிங்கம் தலைமை வகித்தார். சிவகங்கை பனை வெல்ல கூட்டுறவு சங்க தலைவர்கள் கூட்டமைப்பின் தலைவர் கஸ்பார் முன்னிலை வகித்தார். துணை தலைவர் முத்துக்குமார் வரவேற்றார்.

மாவட்ட சிறுதொழில் சங்க செயலாளர் கண்ணப்பன் துவக்கி வைத்தார். வேம்பார் மாரியம்மன் குழுவினர் பயிற்சி அளித்தனர்.

சம்மேளன இயக்குநர் கலைவாணி, கூட்டுறவு சங்க தலைவர்கள் சதீஷ்குமார், முத்துக்குமார், பழனிக்குமார் பங்கேற்றனர்.

**வேகமாக பரவிவரும் கோமாரி நோயை தடுக்க தேவை நடவடிக்கை : நிவாரணத்தொகை வழங்கவும் வலியுறுத்தல்**

காரியாபட்டி : காரியாபட்டி பகுதியில், கோமாரி நோய் தாக்கி, இதுவரை, 15க்கும் மேற்பட்ட மாடுகள் பலியாகியுள்ளன. இதனால், கால்நடைவளர்ப்போர் பீதியடைந்துள்ளனர். இந்நோய் மேலும் பரவாமல் தடுக்கவும், பலியான மாடுகளுக்கு நிவாரணத் தொகை வழங்கவும், மாவட்ட நிர்வாகம்,

கால்நடைத்துறை உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விருதுநகர் மாவட்டத்தில் பெரும்பாலானோர், விவசாயம் செய்தும், கால்நடைகளை வளர்த்தும்தான் பிழைப்பு நடத்தி வருகின்றனர். விவசாயம் பாதிக்கப்பட்ட நேரங்களில், கால்நடைகள்தான் கை கொடுக்கின்றன.

இந்நிலையில், சமீபகாலமாக, கோமாரி நோய், காற்று மூலம் பரவி, மாடு மற்றும் ஆடுகளை தாக்கி வருகிறது. இந்நோய், தாக்கிய ஒரு வாரத்திற்குள் மாடுகள் பலியாகின்றன.

சினை மாடுகள், கன்று குட்டிகளுக்கும் உடனே பாதிப்பு ஏற்படுகிறது. இதனால், கால்நடை வளர்ப்போர் பீதியில் உள்ளனர். இந்நோயால், காரியாபட்டி, சத்திரம்புளியங்குளம், துலுக்கன்குளம், சக்கரக்கோட்டை, விட்டிலாரேந்தல் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில், இதுவரை, 15க்கும் மேற்பட்ட மாடுகள் பலியாகின. வாயில் நீர் வடிந்தவுடன், அதிலிருந்து நோய் பரவி மற்ற மாடுகள் பாதிக்கப்படுகின்றன. இந்நோயை கட்டுப்படுத்த மாவட்ட நிர்வாகம், கால்நடைத்துறை தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டுமென கால்நடை வளர்ப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காரியாபட்டி ராஜ@காபால், ""நன்றாக இருக்கும் மாடுகள், கோமாரி நோயால், திடீரென வாயில் நுரை தள்ளி, கால்களில் வெடிப்பு ஏற்பட்டு, மேய முடியாமல் ஒரு சில நாட்களிலேயே பலியாகின்றன. இதனால், செய்வதறியாது திகைக்கிறோம். அரசு நிவாரணம் வழங்க வேண்டும்," என்றார்.

பெத்துரெட்டிபட்டி சீனிவாசன்,""காரியாபட்டி பகுதிகளில், "கோமாரி' நோய் தாக்குதலால் பலமாடுகள் பலியாகியுள்ளன. ஏராளமான மாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதுபோன்று, மற்றபகுதிகளில் உள்ள கால்நடைகளும் பாதிக்கப்பட்டுள்ளனவா என்பதை கண்டறிய, சிறப்பு முகாம் நடத்த வேண்டும். பெரும்பாலான விவசாயிகள் கால்நடைகளுக்கு வந்திருப்பது கோமாரி நோய்தானா என்பது தெரியாத நிலையில் நாட்டு வைத்தியர்களிடம் காண்பித்து சிகிச்சை அளித்து வருகின்றனர், "என்றார்.

அருப்புக்கோட்டை கணேசன், ""காரியாபட்டி போன்ற ஊர்களிலிருந்து வடதிசை

காற்றின் மூலம் அருப்புக்கோட்டை, பாலையம்பட்டி பகுதிகளில் உள்ள மாடுகளுக்கு கோமாரி நோய் பரவ ஆரம்பித்துள்ளது.
இதனை தடுக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
இந்நோயால் பலியான கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும்,"என்றார்.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

விருதுநகர் : தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டம் பயறு இயக்கம் 2013-14ன்கீழ், துவரையில், நடவுமுறை சாகுபடித் தொழில்நுட்பங்கள் குறித்த, விவசாயிகளுக்கான பயிற்சி, கோவிலாங்குளம் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடந்தது. வேளாண் இணை இயக்குனர் சுப்பையா தலைமை வகித்தார். உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் செண்பகராஜ் முன்னிலை வகித்தார். துவரையில் நடவுமுறை சாகுபடித் தொழில்நுட்பங்களான பயிர் இடைவெளி, குறைந்த விதையளவு, பாலிதீன் பைகளில் நாற்றுக்கள் தயாரித்தல், நாற்று நடவிற்குப்பின் உரமிடுதல், நுனி கிள்ளுதல் போன்றவை, விரிவாக எடுத்துக்கூறப்பட்டது. பத்து நாட்கள் நடந்த இப்பயிற்சியில், அருப்புக்கோட்டை, காரியாபட்டி, நரிக்குடி, ரெட்டியபட்டி வட்டாரங்களைச் சேர்ந்த 300 விவசாயிகள் கலந்துகொண்டனர்.
வேளாண்மை துணை இயக்குனர்கள் செண்பகராஜ், வன்னியராஜன், வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் பால்பாண்டி, உதவி பேராசிரியர்கள் மற்றும் வேளாண் அலுவலர்களால் பயிற்சி வழங்கப்பட்டது.

**சாத்தை., பகுதியில் பருவமழை ஓய்ந்து விட்டதா கடும் குளிர் நிலவுவதால் விவசாயிகள் கலக்கம்'**

சாத்தான்குளம்:சாத்தான்குளம் பகுதியில் கடும் குளிர் நிலவுவதால் பருவமழை சீசன் ஓய்ந்து விட்டதோ என விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.
சாத்தான்குளம் வட்டாரத்தில் வடகிழக்கு பருவமழை சீசனில் இந்த ஆண்டு இதுவரை 24 செ.மீ. மழையே பெய்துள்ளது. இதனால் பல இடங்களில் விவசாயப் பணிகள் நடக்கவில்லை. பருவமழை தாமதமாவாவது பெய்யும் என்ற நம்பிக்கையில நாற்று நெல் விதைத்தவர்கள் நாற்று முப்பேறியும் நாற்று பிடுங்கி

நட முடியாமல் உள்ளனர். தற்போது சாத்தான்குளம் பகுதியில் இரவில் கடும் குளிரும் பனியும் நிலவுவதால் பருவமழைசீசன் முடிந்து விட்டதோ என விவசாயிகள் கலக்கத்தில் உள்ளனர். புயல் உருவானால் மட்டுமே பனியை முறித்து மழை பெய்ய வாய்ப்புள்ளது இல்லையென்றால் இந்த ஆண்டும் விவசாயம் முற்றிலும் பாதிக்கப்படும் என விவசாயிகள் கூறியுள்ளனர்.

**கரும்புக்கு ரூ.2,650 கொள்முதல் விலை நிர்ணயம் தமிழக அரசு அறிவிப்பால் விவசாயிகள் கடும் அதிருப்தி**

சென்னை:'கரும்பு விவசாயிகளுக்கு, டன் ஒன்றுக்கு, 2,650 ரூபாய், கொள்முதல் விலை வழங்கப்படும்' என, முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார். 'இது போதுமானதாக இல்லை' என, விவசாயிகள் போர்க்கொடி துாக்கி உள்ளனர். மாநில அரசு, கடந்த ஆண்டைவிட, 100 ரூபாய், குறைவாக வழங்குவது விவசாயிகளுக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

மத்திய அரசு நிர்ணயம்

தமிழகத்தில், 8.65 ஏக்கரில், கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும், கரும்புக்கு, நியாயமான மற்றும் ஆதாய விலையை, மத்திய அரசு உயர்த்தும் போதெல்லாம், கரும்பு விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு, மாநில பரிந்துரை விலை, தொடர்ந்து வழங்கப்படுகிறது. 2011-12ல், கரும்புக்கு ஆதாய விலையாக, ஒரு டன்னுக்கு, 1,450 ரூபாயை, மத்திய அரசு நிர்ணயம் செய்தது. அப்போது, போக்குவரத்து செலவு, 100 ரூபாய் உட்பட, மாநில அரசின் பரிந்துரை விலையை, 650 ரூபாய் உயர்த்தி, 2,100 ரூபாய் வழங்கப்பட்டது.

முதல்வர் உத்தரவு

கடந்த ஆண்டு, மத்திய அரசு, 1,700 ரூபாய் வழங்கியது; அத்துடன், 650 ரூபாய் சேர்த்து, 2,350 ரூபாய் வழங்கப்பட்டது.

நடப்பு ஆண்டிற்கு, மத்திய அரசு, ஒரு டன்னுக்கு, 2,100 ரூபாய் நிர்ணயம் செய்துள்ளது. அத்துடன், 550 ரூபாய் சேர்த்து, 2,650 ரூபாய் வழங்க, முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டு உள்ளார்.

விவசாயிகள் எதிர்ப்பு

இதற்கு, விவசாயிகளிடம் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இதுகுறித்து, விவசாயிகள் சங்க நிர்வாகிகள் கூறியதாவது:

'வெட்டுக்கூலி, வாகன வாடகை இல்லாமல், டன்னுக்கு, 3,500 ரூபாய் வழங்க வேண்டும்' என, கேட்டோம். ஒரு டன் கரும்புக்கு, வெட்டுக்கூலி, 500 ரூபாய். சர்க்கரை ஆலை நியமிக்கும், கரும்பு அலுவலருக்கு, 1,000 ரூபாய் கமிஷன் கொடுக்கிறோம்.

கரும்பு ஏற்றிச்செல்லும், லாரி டிரைவர் மற்றும் கிளீனருக்கு, 500 ரூபாய் பேட்டா கொடுக்கிறோம். இதனால், கரும்பு சாகுபடியில், பெரிதாக லாபம் கிடைப்பதில்லை.

அரசு அறிவித்துள்ள, விலை உயர்வை ஏற்றுக் கொள்ள முடியாது. விவசாயிகள், அதிகாரிகள், கரும்பு ஆலை அதிகாரிகள் பங்கேற்கும், முத்தரப்பு கூட்டத்தை கூட்டாமல், கொள்முதல் விலையை நிர்ணயம் செய்துள்ளனர்.

இது விவசாயிகளை வஞ்சிக்கும் செயல். இதை மறுபரிசீலனை செய்ய வலியுறுத்தி, அனைத்து சங்கங்களும் இணைந்து, விரைவில், மிகப் பெரிய போராட்டம் நடத்துவோம்.

இவ்வாறு, அவர்கள் கூறினர்.

மறு பரிசீலனை?

தமிழகம் மற்றும் புதுச்சேரி, தனியார் சர்க்கரை ஆலை கரும்பு விவசாய சங்கத் தலைவர், கார்மாங்குடி வெங்கடேசன்
கூறியதாவது:

நாங்கள், வயல் விலையாக, 3,500 ரூபாய் கேட்ட நிலையில், கடந்த ஆண்டை விடக் கூடுதலாக, 300 ரூபாய்
மட்டுமே வழங்குகின்றனர். அ.தி.மு.க., தேர்தல் அறிக்கையில் தெரிவித்த, 2,500 ரூபாய் மட்டுமின்றி, கூடுதலாக, 50 ரூபாய் வழங்குவதாக கூறுகின்றனர்.

தேர்தல் அறிக்கை வெளியிட்ட, 2011ல் இருந்த நிலைமை வேறு. இப்போது எட்டு முறை, டீசல் விலை உயர்த்தப்பட்டு உள்ளது. டிராக்டர் வாடகை, உரம், ஆட்கள் கூலி செலவும் கூடிவிட்டது. எனவே, விலை உயர்வை, முதல்வர் ஜெயலலிதா மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

இவ்வாறு, அவர் கூறினார்.

ஏமாற்றி விட்டது

இந்திய விவசாயிகள் கூட்டமைப்பின் பொதுச் செயலர், விருதகிரி
கூறியதாவது:
கடந்த ஆண்டு,
ஒரு டன் கரும்புக்கு, மத்திய அரசு நிர்ணயித்த விலையை விட,
கூடுதலாக, 650 ரூபாயை மாநில அரசு வழங்கியது. இந்த ஆண்டு, 550 ரூபாய்
வழங்கியுள்ளனர்.
கரும்பு கொள்முதல் விலையை, எதிர்பார்த்த அளவிற்கு, அரசு உயர்த்தவில்லை.
சர்க்கரை ஆலை நிர்வாகங்களின் நெருக்கடிக்கு பணிந்து, விவசாயிகளை அரசு
ஏமாற்றி விட்டது. இவ்விஷயத்தில், அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து,
விரைவில் ஆலோசனை நடத்த உள்ளோம்.
இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

'தினமலர்' செய்தி எதிரொலி

'தினமலர்' நாளிதழில் வெளியான செய்தியைத் தொடர்ந்து, கடந்த, மூன்று
மாதங்களாக, அறிவிக்கப்படாமல் இருந்த, கரும்பு கொள்முதல் விலையை, தமிழக
அரசு நேற்று அறிவித்தது.
நாடு முழுவதும் கரும்பு சாகுபடி பருவம், ஆகஸ்ட் மாதம் துவங்கும். கரும்பு
கொள்முதலுக்கான, ஆதார விலையை, மத்திய அரசு முதலில் அறிவிக்கும்.
அதை தொடர்ந்து, தமிழக அரசு அறிவிக்கும்.
இந்த ஆண்டு, மத்திய அரசு, 2,100 ரூபாய் அறிவித்தது. ஆனால், மூன்று மாதமாக,
கரும்பு கொள்முதல் விலையை அறிவிக்காமல், தமிழக அரசு மவுனம்
காத்தது.
இது குறித்து, நேற்று, 'தினமலர்' நாளிதழில், செய்தி வெளியானது. அதைத்
தொடர்ந்து, கரும்பு கொள்முதல் விலை உயர்வை, முதல்வர் ஜெயலலிதா
அறிவித்தார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

மன்னார்குடி அருகே அறுவடை இயந்திரம் பயன்படுத்த

**விவசாய தொழிலாளர்கள் எதிர்ப்பு**



மன்னார்குடி : டெல்டா மாவட்டங்களில் பல இடங்களில் சம்பா பயிர்கள் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. இதனால் அறுவடைக்கு இயந்திரங்களை பயன்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அடுத்த மழவராயநல்லூரில் நேற்றுமுன்தினம் அறுவடைக்காக இயந்திரம் வரவழைக்கப்பட்டது. இதற்கு விவசாய தொழிலாளர்கள் எதிர்ப்பு தெரிவித்து இயந்திரத்தை மறித்து திருப்பி அனுப்பினர். பின்னர் விவசாய தொழிலாளர்கள், வயல்களில் இறங்கி கதிர் அறுக்கும் அரிவாளால் அறுவடை பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இதன்மூலம் ஓரளவு வேலைவாய்ப்பு கிடைத்திருப்பதாக விவசாய தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி விவசாய தொழிலாளர் சங்க மாநில செயலாளர் முத்தரசன் கூறியது:அறுவடைக்கு இயந்திரம் பயன்படுத்தப்பட்டால் தங்களுக்கு வேலையில்லாமல் போய்விடுமோ என்ற அச்சத்தில் அறுவடை பணி துவங்கியுள்ள ஒரு சில இடங்களில் இயந்திரத்தை பயன்படுத்த தடை விதித்து விவசாய தொழிலாளர்கள் தாங்களே அறுவடை பணியை மேற்கொண்டு வருகின்றனர்.விவசாய தொழிலாளர்களுக்காக தமிழக அரசு 100 நாட்கள் வேலையை 150 நாளாக உயர்த்தி அறிவித்தாலும் பல தொழிலாளர்களுக்கு 150 நாளும் வேலை கிடைக்கவில்லை. இதுதவிர அறிவித்தபடி ரூ.148 கூலி வழங்கவில்லை.இவ்வாறு அவர் கூறினார்.

**மேட்டூருக்கு நீர்வரத்து மீண்டும் சரிவு**



மேட்டூர் : காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு குறைந்துள்ளது. நேற்று முன்தினம் விநாடிக்கு 2153 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை விநாடிக்கு 1146 கனஅடியாக குறைந்தது.அணையில் இருந்து காவிரி டெல்டா பாசன தேவைக்கு வினாடிக்கு 9410 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. தொடர்ந்து பாசனத்துக்கு அதிக அளவில் தண்ணீர் திறக்கப்பட்டு வருவதால் நீர்மட்டம் குறைந்து வருகிறது. நேற்று முன்தினம் 75.78 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று காலை 75 அடியாக சரிந்துள்ளது.

**கடும் பனி பெய்கிறது 2 நாளுக்கு இரவில் குளிர் காற்று வீசும்**

சென்னை: தமிழகத்தில் வட கிழக்கு பருவமழை பெய்வதற்கான வாய்ப்புகள் குறைந்து விட்டது. இதையடுத்து, கடந்த நான்கு நாட்களாக பனியின் தாக்கம் அதிகரித்துள்ளது. அதிகாலையில் இந்த பனியின் தாக்கம் அதிகரித்து காலை 9 மணி வரை நீடிக்கும். மேலும், குளிர்ந்த கடல் காற்று பலமாக வீசும் நிலை ஏற்பட்டுள்ளதால் இன்றும் நாளையும் மலைப் பிரதேசங்களில் உறைபனி காணப்படும். இதைத் தொடர்ந்து தரைப் பகுதியில் கடுமையான பனிப் பொழிவும் இருக்கும்.

மேலும் இரண்டு நாட்களுக்கு இரவு நேரங்களில் கடுமையான குளிர்காற்றும் வீசும். எதிரில் வரும் வாகனங்கள் தெரியாத அளவுக்கு மூடுபனி காணப்படும். வானிலையைப் பொறுத்தவரை பெரும்பாலும் 70 டிகிரி அளவில்தான் வெப்பம் இருக்கும். தமிழகத்தில் பரவலாக அதிகாலை நேரங்களில் மூடுபனி இருக்கும். சில இடங்களில் மேகமூட்டம் காணப்படும். நீலகிரி மாவட்டத்தில் கடுமையான குளிர்காற்றும், உறைபனியும் நீடிக்கும்.

**ஒரு ஹெக்டேரில் திறந்தவெளி பூங்கா பறவைகளை ஈர்க்க சிறப்பு வசதி**

சென்னை : தாம்பரம் அடுத்த வண்டலூரில் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா உள்ளது. இங்கு நீர் பறவைகள், நிலப்பறவைகள், வேட்டையாடும் பறவைகள், சதுப்பு நில பறவைகள் என 74 வகைகளைச் சேர்ந்த 762 பறவைகள் அடைப்பிடங்களில் வைத்துப் பராமரிக்கப்படுகிறது. மேலும் 602 ஹெக்டேர் பரப்பளவில் உள்ள இந்த பூங்காவில் இதர பறவை வகைகள் 150க்கும் மேற்பட்டவை கணக்கெடுக்கப்பட்டுள்ளது.திறந்தவெளியில் காணப்படும் பறவை வகைகளை கண்டுகளிக்க கட மான் இருப்பிடம் அருகில் காலியாக இருந்த ஒரு

ஹெக்டேர் பரப்பளவில் திறந்தவெளி பறவைகள் பூங்கா புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இதை காண பார்வையாளர்கள் நேற்று முன்தினம் முதல் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் இங்கு பறவைகளுக்கான கம்பு, தினை, கோதுமை, நெல், சூரியகாந்தி, கேழ்வரகு, வேர்க்கடலை, ரொட்டித்துண்டுகள், மக்காச் சோளக்கதிர் போன்ற தானியங்கள், பனைமரத்தில் கட்டி வைக்கப்பட்டுள்ளன.  தரையில் பிளாஸ்டிக் பாட்டில்களிலும் தானியங்கள் வைக்கப்பட்டுள்ளன. இதேபோல் பழம் உண்ணும் பறவைகளை கவர்வதற்காக கொய்யா, ஆப்பிள், திராட்சை, சாத்துக்குடி, வாழைப்பழம், சீத்தா பழம் போன்றவை இயற்கையாக மரத்தில் காய்த்திருப்பது போல சிறப்பு வசதிசெய்து வைக்கப்பட்டுள்ளன. பூச்சிகளை உண்ணும் பறவைகளைக் கவரும் வகையில் சாணக் குவியல், சறுகுக் குவியல், எருக்குவியல், மரக்குவியல் போன்றவைகள் அமைக்கப்பட்டு புழுபூச்சிகள் உருவாக வழிவகை செய்யப்பட்டுள்ளன. இதேபோல் தேன் உண்ணும் பறவைகளைக் கவருவதற்கு இயற்கையாக வளர்ந்துள்ள இலை பொருசு மரங்களுடன் செம்பருத்தி மந்தாரை, இட்லி பூ, பொன்அரளி , ரெட் பப்பு, மற்றும் சொர்க்கம் போன்ற பூக்கும் தாவரங்கள் நடப்பட்டுள்ளன.  மீன் உண்ணும் பறவைகளைக் கவர குட்டை ஒன்று அமைக்கப்பட்டு அதில் கெண்டை, திலேத்தியா போன்ற மீன்கள் விடப்பட்டுள்ளன.  பறவைகள் கூடுகட்டுவதற்கு தேவையான சிறு குச்சிகள், தேங்காய் நார் போன்ற பொருட்கள் வைக்கப்பட்டுள்ளன.
அவற்றுடன் மரப்பலகைகளால் செய்யப்பட்ட 25 கூண்டுகள் உயரமான மரங்களில் வைக்கப்பட்டுள்ளன. மேலும் பறவைகளுக்குத் தேவையான புதர்செடிகள் இயற்கையாக உருவாக்கப்பட்டுள்ளன. பறவைகள் குளிப்பதற்குத் தேவையான தொட்டிகள் சாம்பல் மற்றும் மணல் குவியல்கள் மூலம் அமைக்கப்பட்டுள்ளன. இந்த திறந்தவெளி பூங்காவுக்கு வருகை தரும் சாம்பல் கதிர் குருவி, சாம்பல் தகைவிலான், கருங்கரிச்சான், நீளமுக செண்பகம், அக்கா குயில், சிறால் மீன் கொத்தி, கருப்பு வெள்ளைக் குருவி, பச்சை ஈபிடிப்பான் ஊதா தேன் சிட்டு போன்ற 40க்கும் மேற்பட்ட பறவைகளின் புகைப்படங்களும் வைக்கப்பட்டுள்ளன.

**தேயிலை தூள் விற்பனை 20 சதவீதம் அதிகரிப்பு**


கோவை: கோவை ஏல மையரூ. தில் நடந்த 51வது தேயிலைரூ. தூள் விற்பனையில், கடந்த பல வாரங்களை விட 20 சதவீதம் விற்பனை அதிகரிரூ. துள்ளது.கோவை தேயிலை ஏல மையரூ. தில் இந்த ஆண்டின் 51வது வார ஏலம் நடந்தது. இதில் 1276 லாட் தேயிலைரூ. தூள் விற்பனைக்கு வந்தது. இதில் டஸ்ட் ரகம் 3.71 லட்சம் கிலோ, லீப் ரகம் 1.94 லட்சம் கிலோ என மொரூ. தம் 5.65 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில் டஸ்ட் ரகம் 3.30 லட்சம் கிலோ, லீப் ரகம் 1.50 லட்சம் கிலோ என மொரூ. தம் 4.80 லட்சம் கிலோ விற்பனையானது. டஸ்ட் ரகம் கிலோவிற்கு 33 பைசா கூடியுள்ளது. லீப் ரகம் 10 பைசா குறைந்துள்ளது. விற்பனை சதவீதம் இந்த வாரம் டஸ்ட் ரகம் 89 சதவீதம், லீப் ரகம் 77 சதவீதம் விற்றுள்ளது. விற்பனை சதவீதரூ. தை ஒப்பிடுகையில் கடந்த வாரம் மட்டுமல்ல, கடந்த பல வாரங்களோடு ஒப்பிடுகையில் டஸ்ட் மற்றும் லீப் ரகம் 20 சதவீதம் வரை அதிகரிரூ. துள்ளது.

**வாழைத்தார் விலை உயர்வு**


ஈரோடு: ஈரோடு நேதாஜி காய்கறி மார்க்கட் டில் நேற்று காலை வாழைரூ. தார்கள் வரத்து வெகுவாக குறைந்து காணப்பட்டது. வரரூ. து குறைவால் விலை அதிகரிரூ. து காணப்பட்டது. விவசாயிகள் கூறியதா வது: கடந்த ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் நடவு செய்யப்பட்ட வாழை தற்போது தான்

விளைச்சலுக்கு வந்துள்ளது. கடந்த ஜனவரி பிப்ரவரி, மார்ச் மாதங்களில் வறட்சி நிலவியதால் தற்போது விற்பனைக்காக வரும் வாழைரூ. தாரின் விளைச்சல் குறைவாகவே உள்ளது. குறைந்த வரரூ. து காரணமாக முன்பைவிட வாழைரூ. தார்களுக்கு கூடுதல் விலை கிடைக்கிறது. 2 வாரங்களுக்கு முன்பு சுமார் 150 பழங்கள் கொண்ட ஒரு தார் பூவன் வாழை ரூ. 200 முதல் ரூ. 250 வரையிலும் விற்பனை ஆன நிலையில் நேற்றைய மார்க்கெட் நிலவரப்படி பூவன் தார் ரூ. 300 முதல் 350க்கு விலை போகிறது. முன்பு ரஸ்தாளி ரூ. 400க்கு விலைபோன நிலையில் தற்போது ரூ. 500க்கு விலை போகிறது.

**கறிக்கோழி விலையை சீராக்க வாரம் 20 லட்சம் கிலோ உற்பத்தி குறைப்பு**



கோவை: தமிழகதில் கறிக்கோழி உற்பரூ. தியாளர்கள் அதன், விலையை சீராக்கிட வாரரூ. திற்கு 20 லட்சம் கிலோ அளவிற்கு உற்பரூ. தியை குறைரூ. துள்ளனர். அதன் காரணமாக கடந்த 3 மாதரூ. திற்கு பிறகு சில்லரை விற்பனையில் தோல் நீக்கிய கறி கிலோ ரூ. 150க்கு உயர்ந்தது.தமிழகரூ. தில் 25 ஆயிரரூ. திற்கும் மேற்பட்ட கோழி பண்ணைகள் உள்ளன. இங்கிருந்து 25க்கும் மேற்பட்ட கறிக்கோழி உற்பரூ. தியாளர்கள் கோழிகளை வாங்கி ஒவ்வொரு வாரமும் 80 லட்சம் கிலோ கறிக்கோழிகள் உற்பரூ. தி செய்கின்றனர்.

இதில் தலா 10 லட்சம் கிலோ கேரளா, ஆந்திராவிற்கும், தலா 30 லட்சம் கிலோ வட மற்றும் தென் மாவட்டங்களுக்கும் அனுப்பப்படுகிறது.இந்நிலையில், கடந்த சில வாரங்களாக கறிக்கோழி விலையில் ஏற்ற&இறக்கம் நிலவியது. கடந்த 2வது வாரரூ. தில் பண்ணை விலை ஒரு கிலோ ரூ.56க்கு சரிந்தது. இதனால், கோழிபண்ணையாளர்கள் பாதிப்புக்குள்ளானர்கள். கடந்த நவம்பர் மாத துவக்கரூ. தில் சில்லரை விற்பனை விலையில் தோல் நீக்கிய கறி கிலோ ரூ. 110க்கு விற்றது, பின்னர் ரூ.100க்கும், ரூ. 90க்கும் சரிந்தது.

பின்னர் மீண்டும் ரூ. 110, 120, 130, 140 என நிலவியது. நேற்று முதல் ரூ. 150க்கு உயர்ந்துள்ளது. இந்த விலை 3 மாதரூ. திற்கு பிறகு நிலவிய விலையேற்றமாகும்.இது குறிரூ. து கறிக்கோழி வியாபாரிகள் கூறுகையில், 'கடந்த மாதம் முதல் வாரரூ. தில் நிலவிய விலை வீழ்ச்சியால் பண்ணையாளர்கள் பாதிக்கப்பட்டனர். அப்போது கறிக்கோழி உற்பரூ. தியை 25 சதவீதம் குறைரூ. தனர். கறிக்கோழிகள் 7 வாரங்கள் வளர்ரூ. த பின்னர் விற்பனைக்கு வருகிறது. அதன்படி 7 வாரரூ. திற்கு முன்பு குறைரூ. த உற்பரூ. தியால், வார வரரூ. து 80 லட்சம் கிலோவிலிருந்து 60 லட்சமாக குறைந்தது. இதனால், விலை சீரடைந்துள்ளது. பண்ணை விலை கிலோ ரூ. 65 முதல் ரூ. 70 வரை விற்றால் மட்டுமே கட்டுப்படியாகும். அந்த விலையை தற்போது கிடைப்பதால் உற்பரூ. தியாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்' என்றனர்.

**நல்லெண்ணெய் விலை லிட்டருக்கு ரூ13 உயர்வு**

விருதுநகர்: எள் விலை உயர்வால் நல்லெண்ணெய் டின்னுக்கு ரூ160ம், லிட்டருக்கு ஸி13ம் உயர்ந்துள்ளது. எள் வரத்து தேவைக்கு ஏற்ப இல்லாததால் நல்லெண்ணெய் விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததால் எள் விலைச்சல் இல்லாத நிலையில் குஜராத் மாநிலத்திலிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. வெள்ளை எள் 70 கிலோ மூட்டை ரூ10,500 ஆகவும், கருப்பு எள் ரூ9,500 எனவும் விலை உயர்ந்துள்ளது. இதனால் நல்லெண்ணெய் டின் (15 கிலோ) ரூ4,455 லிருந்து ரூ4,615 ஆகவும் ஒரு லிட்டர் நல்லெண்ணெய் ஸி267 லிருந்து ஸி280.50 என உயர்ந்துள்ளது. உளுந்து, துவரம் பருப்பு, பாசிப் பருப்பு தட்டுப்பாடு காரணமாக கடந்த 2 மாதங்களாக பருப்பு விலை கடுமையாக விலை உயர்ந்து வருகின்றன. சங்கரன்கோவில், கோவில்பட்டி பகுதிகளில் இருந்து உளுந்து, பாசிப்பயறு வரத்து துவங்கி உள்ளது. வரும் வாரங்களில் உளுந்தம் பருப்பு, பாசிப் பருப்பு விலைகள் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**நாமகிரிப்பேட்டை சந்தையில் நாட்டிலேயே மஞ்சளுக்கு அதிக விலை**



நாமகிரிப்பேட்டை: நாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டையில் கடந்த வாரம் நடந்த ஏலத்தில் ஒரு குவிண்டால் விரலி மஞ்சள் ரூ9 ஆயிரத்தை தாண்டி விற்பனையானது. கடந்த 2 ஆண்டுக்கு முன் இந்திய மஞ்சள் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்து குவிண்டால் ரூ20 ஆயிரம் வரை விற்பனையானது. மஞ்சள் உற்பத்தி குறைந்ததே இதற்கு பிரதான காரணம். பின்னர் திடீரென விலையில் சரிவு ஏற்பட்டு குவிண்டால் மஞ்சள் ரூ4,500 என அதள பாதளத்திற்கு சென்றது. தற்போது நாடு முழுவதும் மஞ்சள் வர்த்தகம் சூடு பிடித்துள்ளது. ஆனால், கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சியால் சாகுபடி பரப்பு குறைந்தது. இதனால் கடந்த சில வாரங்களாக மிகச்சிறிய அளவில் மஞ்சள் விலை யில் ஏறுமுகம் காணப்படுகிறது.

ஆனால், மஞ்சள் ஆன்லைன் வர்த்தகத்தில் அனுமதிக்கப்பட்டிருப்பதால் முன்பேர யூக வர்த்தகத்தின் மூலம் குறைந்த விலையை நிர்ணயம் செய்து பதுக்குவதற்கான முயற்சிகள் தொடங்கியுள்ளன. எனவே முன்பேர யூக வணிகத்திற்கான பட்டியலில் இருந்து மஞ்சளை நீக்க வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர். இதற்கிடையில் நாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டையில் கடந்த வாரத்தில் மஞ்சள் ஏலமுறையில் புதிய மாற்றம் கொண்டு வரப்பட்டது. இதனால் நாட்டிலேயே நாமகிரிப்பேட்டையில் மட்டும் ஒரு குவிண்டால் மஞ்சள் ரூ9,339 வரை விலை போனது விவசாயிகளுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. மற்ற பகுதிகளை ஒப்பிடுகையில் சராசரியாக குவிண்டாலுக்கு ரூ1,500 வரை கூடுதல் விலை இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வழக்கமாக மஞ்சள் ஏலத்தில் 5 கிலோ அளவுக்கு சாம்பிள் மஞ்சள் வைத்து விலை நிர்ணயிப்பது வழக்கம்.

தற்போது அதற்கு பதிலாக மூட்டைகளையே அடுக்கி மாதிரிக்கு அறுத்துவிடும் முறையை பின்பற்றினர். இதனால் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த ஏலத்தில் மஞ்சளுக்கு கூடுதல் விலை கிடைத்தது. விரலி ரகம் அதிகப்பட்சமாக மூட்டை ரூ9,339 க்கும் குறைந்தபட்சம் ஸி5,109க்கும் ஏலம் போனது. அதேபோல் குண்டு ரகம் அதிகபட்சமாக மூட்டை ரூ7,399க்கும் குறைந்தபட்சம் ஸி4,171க்கும் ஏலம் போனது. இதையடுத்து கடந்த வாரம் முடிவில் 20ம் தேதி இந்திய மார்க்கெட்டில் நாமகிரிப்பேட்டை மார்க்கெட்டில்தான் மஞ்சள் விலை அதிகப்பட்சமாக விலைக்கு விற்றதாக பதிவாகியுள்ளது.

**ஒருபோக பாசனத்திற்கு தண்ணீர் திறக்க வேண்டும் விவசாயிகள் வலியுறுத்தல்**

மதுரை, : ஒருபோக பாசனத்திற்காக முல்லைப் பெரியாறு, வைகை அணையில் இருந்து உடனடியாக தண்ணீர் திறந்துவிட வேண்டும் என மதுரை மாவட்ட விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

மதுரையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம், கலெக்டர் சுப்ரமணியன் தலைமையில் நடந்தது. இதில் விவசாயிகள் பேசியதாவது:

பாண்டியன்: உசிலம்பட்டி, பேரையூர், திருமங்கலம் தாலுகாக்களில் மண் உவர்சத்து நிறைந்துள்ளது.  இந்த மண்ணிற்கு ஏற்ப விவசாயத்திற்கு, ஜிங்ச் சல்பேட் உரம் மட்டுமே பயன்படுகிறது. எனவே, இந்த உரத்தை விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்க வேண்டும். புதிய ரக கரும்புகளை அறிமுகப்படுத்த வேண்டும்.

ராமமூர்த்தி: மதுரை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் கோமாரி நோய் தாக்கத்தால் மாடு, ஆடு, கன்றுகள் இறந்துள்ளன. குறிப்பாக மேலூர், தேனூர், மேட்டுநீரேத்தான், கொடிமங்கலம், பேரையூர் பகுதிகளில் அதிகளவில் கால்நடைகள் இறந்துள்ளன. இதில் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு உரிய

இழப்பீடு வழங்க வேண்டும்.

பழனிச்சாமி: மாவட்டத்தில் மேலூர் உள்பட பல்வேறு பகுதிகளில் கல்குவாரிகள் முறைகேடாக இயங்கி வருகின்றன. இதில் ஆளும்கட்சியினருக்கு தொடர்பு உள்ளது. இவர்களை கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். 5 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமாக பயிரிடப்பட்ட கரும்புகள் கருகிவிட்டன. இதனால் மேலூர், திருமங்கலம், வாடிப்பட்டி பகுதிகளில் கரும்பு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். கிரானைட் குவாரி முறைகேட்டால், ஏராளமான கண்மாய், குளங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அவற்றை உடனடியாக சீரமைக்க வேண்டும்.

ராஜமாணிக்கம், அடக்கிவீரணன்: முன்பு முல்லைப் பெரியாறு அணையில் 116 அடி தண்ணீர் இருந்தபோது, எந்தவித பாதிப்பும் இல்லாமல் மேலூர் உள்ளிட்ட கடைமடை பகுதிகளின் ஒருபோக சாகுபடிக்கு தாராளமாக தண்ணீர் திறந்து விடப்பட்டது. தற்போது குறைந்தது 10 நாட்களாவது தண்ணீர் கொடுத்தால்தான் பயிர்களை காப்பாற்ற முடியும். இல்லாவிட்டால் 12 ஆயிரம் ஏக்கரில் விவசாயம் பாதிக்கும்.

முத்துப்பாண்டி: சொட்டுநீர் பாசனத்தில் மானியம் பெற குறிப்பிட்ட நிறுவனத்தில்தான் பைப், வால்வு வாங்க வேண்டும் என்கின்றனர். பொருட்களை எங்கு வாங்கினாலும் மானியம் வழங்க உத்தரவிட வேண்டும்.

கலெக்டர் சுப்ரமணியன்: மதுரை மாவட்டத்தில் கோமாரி நோய் தாக்குதல் இல்லை. பக்கத்து மாவட்டங்களில் இருந்து பாதிப்பு வரும் என்பதால், மாவட்டம் முழுவதும் கால்நடை சந்தைகள் மூடப்பட்டுள்ளது. நோய் தாக்கத்தை தவிர்க்கும் விதமாக, 1.87 லட்சம் மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. கிரானைட் குவாரி முறைகேடு தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஒரு போக சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடுவது குறித்து ஆலோசித்து வருகிறோம். இதுகுறித்து அரசுடன் விவாதிப்பதற்காக பொதுப்பணித்துறை அதிகாரி சென்னை சென்றுள்ளார். குடிநீர் தேவைக்கு போகத்தான் கணக்கிட முடியும். வைகையில் 20 முதல் 25 அடி வரை சகதி உள்ளது. எனவே அதையும் முழு கொள்ளளவாக கணக்கிட முடியாது' என்றார்.

டிஆர்ஓ சிற்றரசு, இணை இயக்குநர்கள் ஜெய்சிங் ஞானதுரை (வேளாண்), பழனிவேலு (கூட்டுறவு) உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**அனைத்து விவசாயிகளுக்கும் கட்சி பாகுபாடின்றி பயிர்கடன் வழங்க வேண்டும் விவசாயிகள் கோரிக்கை**

கரூர்,: கரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று கலெக் டர் அலுவலகத்தில் கலெக் டர் ஜெயந்தி தலைமையில் நடைபெற்றது.

வேளாண்மைத்துறை இணை இயக்குனர் தெய்வேந்திரன், டிஆப்ஓ அருணா, கூட்டுறவு இணைப்பதிவாளர் சந்தானம் முன்னிலை வகித்தனர். மனோகரன், ஆறு முகம் ஆகியோர் கோமாரி நோய் தாக்கி இறந்த கால்நடைகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என கோரினர். அதற்கு அரசு விதிமுறைகளின்படி நோயினால் இறந்த கால்நடைகளுக்கு இழப்பீடு தொகை வழங்க வழிவகை இல்லை என அதிகாரிகள் பதில் அளித்தனர். வேளாண்மைகூட்டுறவு கடன் சங்கங்களில் விவசாயிகளுக்கு புதிய பயிர்க்கடன் வழங்கவேண்டும் என மைக்கேல், சையதுஅபுதாகீர் ஆகியோர் கூறினர். கடன் வழங்கப்படும் என கூட்டுறவு அதிகாரிகள் கூறியபோது, விவசாயிகள் கூட்டுறவு கடன் சங்கத்திற்கு இயக்குனர்கள், தலைவர்கள் புதி தாக வந்துள்ளனர். அவர்கள் கடன் தர மறுக்கின்றனர். கட்சி வித்தியாசம் பார்க்கின்றனர்., நிலம் இல்லாதவர்கள், சாகுபடி செய்யாதவர்களு க்கு எல்லாம் கடன் கொடுக்கின்றனர். சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு கடன் தருவதில்லை. அதிகாரிகள் பொதுவானவர்கள். எனவே உரிய நடவடிக்கை மேற் கொண்டு தகுதியான அனை த்து விவசாயிகளுக்கும்

பயிர்க்கடன் வழங்க வேண்டும் என்றனர்.

கோபாலதேசிகன், திருச்சி-கரூர் தேசிய நெடுஞ்சாலை என்எச்67 என உருவாக்கப்பட்டு குளித்தலை நகரில் இரண்டு சுரங்கப்பாதை அமைக்கப்பட்டுள்ளது. இதன்வழியாக வெள்ளகாலங்களில் வெள்ளநீர் ஊருக்குள் வருகிறது. இதனை சரிசெய்யவேண்டும். இப்பகுதி மட்டுமின்றி தேசிய நெடுஞ்சாலையை அமைக்கும் நிறுவனத்தினர் ரோடு போடுவதிலேயே கவனம் செலுத்துகிறார்களே தவிர, சுரங்கப்பாதை, அணுகு சாலை அமைப்பது போன்றவற்றில் கவனம் செலுத்துவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அறிவுறுத்தி திட்ட வரைவுப்படி மேற்கொள்ள வேண்டிய பணிகளை செய்யவேண்டும் என்றார்.

நிலத்தடிநீர் பாது காப்பு, சாயக்கழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சங்க தலைவர் ராமசாமி, ராமலிங்கம் ஆகியோர், கரூர் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ராஜவாய்க்கால், சோமூர் வாய்க் கால் போன்ற வாய்க்கால்களில் சாக்கடை கழிவுநீர் கலக்கிறது. இதனால் பாசன வாய்க்கால் தண்ணீர் கெட்டுபோகிறது. குடிமைக் கழிவுகளை பாசன வாய்க்காலில் கலக்காமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றனர்.


பின்னர் அதிகாரிகள் கூறுகையில், பொதுப்பணித்துறை மூலமாக புறநகர் பகுதியில் பொக்லைன் இயந்திரம் மூலமாக பாசன வாய்க்காலில் சாயக்கழிவுநீர் கலக்காமல் இருப்பதற்கு மாற்று ஏற்பாடு செய்யப்படும். நகராட்சி நிர்வாகம் சார்பில் கரூர், இனாம் கரூர் பகுதியில பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நகராட்சியின் பிறபகுதியான தாந்தோணி, சணப்பிரட்டி பகுதிக்கு புதிய பாதாள சாக்கடை அமைக்கின்ற திட்டம் வடிவமைக்கப்பட்டு வருகிறது.

மேலும் இதில் கரூர் நகரில் விடுபட்டுப்போன பகுதிகளும் சேர்க்கப்படும். ரூ.300கோடி மதிப்பில் பாதாள சாக்கடை திட்டம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அரசின் அனுமதி கிடைத்ததும் திட்டம் நிறைவேற்றப்படும். இதன்மூலம் நகர பகுதியில் இருந்து கழிவுநீர் அமராவதி ஆற்றிலோ, பாசன வாய்க்காலிலோ கலக்காமல் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றனர்.

தினத் தந்தி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ரபி பருவத்தில், டிசம்பர் 12–ந் தேதி வரை எண்ணெய் வித்துக்கள் சாகுபடி**



கொல்கத்தா

நடப்பு ரபி பருவத்தில் (அக்டோபர்–மார்ச்) டிசம்பர் 12–ந் தேதி வரை எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பளவு 77.80 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது. சென்ற ஆண்டின் இதே காலத்தில் இது 75.80 லட்சம் ஹெக்டேராக இருந்தது. மத்திய வேளாண் அமைச்சகம் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

**9 எண்ணெய் வித்துக்கள்**

கரீப் பருவத்தில் (ஜூன்–அக்டோபர்) ஒன்பது பிரதான எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 17.2 சதவீதம் வளர்ச்சி கண்டு 1.69 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. சென்ற ஆண்டின் இதே பருவத்தில் இந்த எண்ணெய் வித்துக்கள் விளைச்சல் 1.52

கோடி டன்னாக இருந்தது. நிலக்கடலை உற்பத்தி சுமார் 20 லட்சம் டன் உயர்ந்ததே இதற்கு முக்கிய காரணமாகும்.

கடுகு, பருத்தி விதை, எள் உள்ளிட்ட பல்வேறு எண்ணெய் வித்துக்களிலிருந்து எண்ணெய் எடுத்த பிறகு கிடைக்கும் புண்ணாக்கு கால்நடை தீவனமாகவும், விளைநிலங்களில் உரமாகவும் பயன்படுத்தப்படுகிறது. பொதுவாக தென் கொரியா, வியட்நாம், தாய்லாந்து, இந்தோனேஷியா போன்ற தென்கிழக்கு ஆசிய நாடுகள் இந்தியாவிலிருந்து புண்ணாக்கை அதிகம் இறக்குமதி செய்கின்றன.

ரபி பருவத்தில் எண்ணெய் வித்துக்கள் அதிகரிக்கும் என தற்போதைய மதிப்பீடுகள் தெரிவித்தாலும், புண்ணாக்கு ஏற்றுமதியில் பெரிய அளவில் முன்னேற்றம் இருக்காது என்று கூறப்படுகிறது. சில பகுதிகளில் மழை தாமதமானதால் சோயாபீன் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் நடப்பு நிதி ஆண்டில் (2013–14) புண்ணாக்கு ஏற்றுமதி 48 முதல் 50 லட்சம் டன் வரைதான் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. டிசம்பர்–மார்ச் மாத காலத்தில் புண்ணாக்கு ஏற்றுமதி 20 லட்சம் டன்னாக குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தில் ஏற்றுமதி 24.50 லட்சம் டன்னாக இருந்தது.

முதல் 8 மாதங்களில்...

ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான முதல் எட்டு மாதங்களில் 25.80 லட்சம் டன் புண்ணாக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும்போது இது 8 சதவீதம் அதிகமாகும். 2012–13 முழு நிதி ஆண்டில் மொத்தம் 48.40 லட்சம் டன் புண்ணாக்கு ஏற்றுமதி ஆகியிருந்தது.

**கொப்பரை தேங்காய், எள் வரத்து குறைவு: தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் விலை 'கிடுகிடு' உயர்வு பாமாயில், சர்க்கரை விலை சரிவு**



சென்னை,

கொப்பரை தேங்காய், எள் வரத்து குறைவு காரணமாக தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் விலை 'கிடுகிடு'வென உயர்ந்து வருகின்றன. அதே நேரத்தில் பாமாயில், சர்க்கரை விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது.

விலைவாசி உயர்வு

தொடர்ந்து அதிகரித்து வரும் பெட்ரோல், டீசல் விலை உயர்வு காரணமாகவும், மத்திய அரசின் பொருளாதார கொள்கை காரணமாகவும் விலைவாசி உயர்ந்து கொண்டே வருகிறது. குறிப்பாக, அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

கடந்த வாரம் ஒரு லிட்டர் நயம் நல்லெண்ணெய் பாக்கெட் ரூ.230–க்கு விற்பனை செய்யப்பட்டது, தற்போது ரூ.278 ஆக உயர்ந்துள்ளது. இதேபோல், காங்கேயம், பொள்ளாச்சி, திருப்பூரில் உற்பத்தியாகும் நயம் நல்லெண்ணெய் பாக்கெட் (ஒரு லிட்டர்) ரூ.210–ல் இருந்து ரூ.250 ஆக விலை அதிகரித்துள்ளது. விளக்கு ஏற்றப் பயன்படுத்தப்படும் நல்லெண்ணெய் ஒரு லிட்டர் ரூ.70–ல் இருந்து ரூ.90 ஆக

கூடியுள்ளது. 15 கிலோ எடை கொண்ட நல்லெண்ணெய் டின் ரூ.3600–ல் இருந்து ரூ.3800 ஆக அதிகரித்துள்ளது.

<u>எள், கொப்பரை உற்பத்தி குறைவு</u>

எள் உற்பத்தி குஜராத், மராட்டியம், ஆந்திரா, கர்நாடகா, மத்திய பிரதேசம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் நடைபெறும். ஆனால், இந்த ஆண்டு எள் உற்பத்தி குறைந்ததால் விலை அதிகரித்து வருகிறது.

இதேபோல், கொப்பரை தேங்காய் அந்தமான் தீவிலும், காங்கேயம், பொள்ளாச்சி, கேரள மாநிலம் கொச்சியிலும் அதிகம் உற்பத்தி செய்யப்படும். தற்போது, கொப்பரை தேங்காய் வரத்து குறைந்துள்ளதால் தேங்காய் எண்ணெய் விலையும் அதிகரித்து வருகிறது.

கடந்த வாரம் ஒரு லிட்டர் நயம் தேங்காய் எண்ணெய் ரூ.120–க்கு விற்பனையானது, தற்போது ரூ.160 ஆக விலை அதிகரித்துள்ளது. சாதா தேங்காய் எண்ணெய் ஒரு லிட்டர் ரூ.100–ல் இருந்து ரூ.140 ஆக விலை உயர்ந்துள்ளது. 15 கிலோ எடை கொண்ட தேங்காய் எண்ணெய் டின் ரூ.2 ஆயிரத்தில் இருந்து ரூ.2220 ஆக விலை கூடியுள்ளது. நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் விலை மேலும் உயர வாய்ப்பு இருப்பதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

<u>பாமாயில் விலை சரிவு</u>

தற்போது, இந்திய ரூபாயின் மதிப்பு உயர்வு காரணமாக, இறக்குமதி செய்யப்படும் பாமாயில் விலை சற்று குறைந்துள்ளது. அதாவது, கடந்த வாரம் ரூ.65–ல் விற்பனையான ஒரு லிட்டர் பாமாயில் தற்போது ரூ.61 ஆக விலை குறைந்துள்ளது.

இதேபோல், அதிக இறக்குமதி காரணமாக சூரியகாந்தி எண்ணெய் விலை குறைந்து வருகிறது. கடந்த வாரம் ரூ.90–க்கு விற்பனையான ஒரு லிட்டர்

சூரியகாந்தி எண்ணெய் (முதல் ரகம்) தற்போது ரூ.85 ஆக விலை குறைந்துள்ளது. 2–வது ரகம் ரூ.85–ல் இருந்து ரூ.78 ஆக விலை சரிந்துள்ளது.

கடலை விளைச்சல் அதிகரித்ததன் காரணமாக கடலை எண்ணெய் விலை குறைந்து வருகிறது. கடந்த வாரம் ஒரு லிட்டர் கடலை எண்ணெய் ரூ.110–க்கு விற்பனையானது, தற்போது ரூ.92 ஆக விலை சரிந்துள்ளது.

<u>சீனா பூண்டுக்கு கிராக்கி</u>

இந்தியாவில் மலைப்பூண்டு இமாச்சல் பிரதேசத்திலும், தமிழ்நாட்டில் ஊட்டியிலும் பயிரிடப்படுகிறது. ஆனால், இந்த ஆண்டு போதிய விளைச்சல் இல்லாத காரணத்தால், சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பூண்டுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.

சீனா மலைப்பூண்டு ஒரு கிலோ ரூ.100–ல் இருந்து ரூ.130 ஆகவும், நாட்டுப்பூண்டு ஒரு கிலோ ரூ.80–ல் இருந்து ரூ.90 ஆகவும் விலை உயர்ந்துள்ளது. நாட்டுப்பூண்டு குஜராத், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டிற்கு வரும். ஆனால், தற்போது பூண்டு சீசன் முடிவடைந்துள்ளதால், இந்த விலையில் உயர்வு ஏற்பட்டுள்ளது. இன்னும் ஒரு மாதத்தில் புதிய பூண்டு வரத்து தொடங்கும்போது, கிலோவுக்கு ரூ.50 வரை விலை குறைய வாய்ப்பு இருப்பதாக, தமிழ்நாடு அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் தெரிவித்தார்.

<u>சர்க்கரை விலை குறைந்தது</u>

கரும்பு விளைச்சல் குஜராத், உத்தரபிரதேசம், ஆந்திரா, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் அதிகமாக நடந்துள்ளது. இதன்காரணமாக, கடந்த வாரம் ரூ.3050–க்கு விற்பனையான ஒரு மூட்டை சர்க்கரை தற்போது ரூ.2950 ஆக விலை குறைந்துள்ளது. இதனால், ஒரு கிலோ சர்க்கரை ரூ.33–ல் இருந்து ரூ.31 ஆகவும் விலை சரிந்துள்ளது.

**கரும்புக்கான கொள்முதல் விலையை ரூ.3,500 ஆக நிர்ணயிக்க வேண்டும்: ராமதாஸ் வலியுறுத்தல்**

சென்னை,

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் 2013-14 ஆண்டு பருவத்தில் கரும்பு கொள்முதல் விலையாக டன்னுக்கு ரூ. 2650 வழங்கப்படும் என்று முதல்-அமைச்சர் ஜெயலலிதா அறிவித்திருக்கிறார். கரும்புக்கு நியாயமான விலை வழங்கப்பட வேண்டும் என்று விவசாயிகள் கோரி வந்த நிலையில் யானைப் பசிக்கு சோளப்பொறியைப் போல தமிழக அரசு அறிவித்திருக்கும் கரும்புக் கொள்முதல் விலை மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது.

எனவே, கரும்பு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு கரும்புக்கான கொள்முதல் விலையை டன்னுக்கு குறைந்தது ரூ.3,500 ஆக நிர்ணயிக்க தமிழக அரசு முன்வர வேண்டும். இனி வரும் காலங்களில் விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளுடன் சர்க்கரை ஆணையர் மூலம் பேச்சு நடத்தி கரும்புக்கான கொள்முதல் விலையை நிர்ணயிக்கும் நடைமுறையை அறிமுகப்படுத்த தமிழக அரசு முன்வர வேண்டும்.இவ்வாறு அறிக்கையில் டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளார்.

**கோமாரி நோயால் இறக்கும் கால்நடைகளுக்கு நிவாரணம் குறைதீர் கூட்டத்தில்**

காஞ்சீபுரம், - கோமாரி நோயால் இறக்கும் கால்நடைகளுக்கு நிவாரணத்தொகை வழங்க வேண்டும் என்று குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

<u>விவசாயிகள் குறைதீர் கூட்டம்</u>

காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. மாவட்ட கலெக்டர் கா.பாஸ்கரன் தலைமை தாங்கினார். இந்த

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அதிகாரி சம்பத்குமார், வேளாண் துணை இயக்குனர் சவுந்தரராஜன், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் கோவர்த்தனன் உள்ளிட்ட பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு-:

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் நேரு: மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் கோமாரி நோய் தாக்கி கால்நடைகள் இறக்கின்றன. இது குறித்து கால்நடை மருத்துவர்களிடம் பதிவு செய்திருந்தும் உரிய இழப்பீடு கிடைப்பதில்லை.

கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் கோவர்த்தனன்: கோமாரி நோய் தாக்கி கால்நடைகள் இறந்ததாக இதுவரை மாவட்டத்தில் பதிவு ஏதும் இல்லை. செப்டம்பர் மாதம் 15-ம் தேதி முதல் அக்டோபர் மாதம் 28-ந் தேதி வரை 4 லட்சத்து 41 ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி 5-வது கட்டமாக போடப்பட்டுள்ளது.

விவசாயிகள்: உத்திரமேரூர் தாலுக்கா உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கால்நடைகள் இறப்பு குறித்து பதிவு செய்யப்பட்டுள்ளது. கால்நடைகள் இறந்த பிறகு அந்த பகுதி கால்நடை மருத்துவரிடம் தெரிவித்தால், அவர்கள் பிரேத பரிசோதனைக்கு வருவதில்லை. எனவே மாவட்டத்தில் கோமாரி நோயால் பாதிப்படைந்து இறக்கும் மாடுகளில், கறவை மாடுக்கு ரூ.25 ஆயிரம், சினை மாடுக்கு ரூ.20 ஆயிரம், மற்ற மாடுகளுக்கு ரூ.15 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும்.

<u>தர்பூசணி விதைகள்</u>

அன்பழன் : தர்பூசணி சீசன் தொடங்க உள்ளது. எனவே நல்ல தரமான தர்பூசணி விதைகள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதிகாரிகள் : தர்பூசணி விதைகள் தொடர்பாக ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது, விவசாயிகள் தோட்டக்கலைத்துறை அதிகாரிகளை தொடர்பு கொண்டு விதைகளை பெற்றுக் கொள்ளலாம்.

நேரு : செய்யூர் ஒன்றியம் அகரம், கயநல்லூர் ஆகிய கிராமங்களில் 100 நாள் வேலைத் திட்டத்தில் பயனாளிகளுக்கு ரூ.30 மட்டுமே ஊதியமாக வழங்கப்படுகிறது. அதுவும் கடந்த 2 மாதங்களாக வழங்கப்படவில்லை.

கலெக்டர் : இது குறித்து விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

**காய்கறி–பழங்கள் விற்பனையில் எடை குறைப்பு மோசடி தடுக்கப்படுமா? பொதுமக்கள் எதிர்பார்ப்பு**



காய்கறி, பழங்கள் குறைந்த விலையில் கிடைக்கும் ஒரு சில தமிழக மாவட்டங்களில் வேலூரும் ஒன்று. அருகேயுள்ள ஆந்திர, கர்நாடக மாநிலங்களில் இருந்து அதிக அளவில் காய்கறிகள், பழங்கள் வரத்து இருப்பதாலும் மாவட்டத்தின் பல்வேறு கிராமப்பகுதிகளில் காய்கறிகள், பழங்கள் உற்பத்தி செய்யப்படுவதாலும் மற்ற மாவட்டங்களைவிட வேலூர் மாவட்டத்தில் இவற்றின் விலை தரத்திற்கு ஏற்ப கிலோவுக்கு 2 ரூபாய் முதல் 10 குறைவாக இருப்பது நிச்சயம்.

**<u>தாராளமாய் கிடைக்கும்</u>**

காய்கறிகளில் காலிபிளவர், முட்டைக்கோஸ், கத்தரிக்காய், முள்ளங்கி, முருங்கைக்காய், பழங்களில் சாத்துக்குடி, பப்பாளி, ஆப்பிள், வாழைப்பழம், சீத்தாபழம், தர்பூசணி மற்றும் இளநீர் ஆகியவற்றை வேலூர் மாவட்டத்தின் எந்த பகுதியிலும் குறைந்த விலைக்கு வாங்க முடியும். இதனால் வெளியூர்களில் இருந்து வேலூருக்கு வந்து செல்ல நேர்பவர்கள் கையோடு காய்கறி, பழங்களை வாங்கிச் செல்வதும் உண்டு.

ஆனால் கடந்த சில வருடங்களாக வேலூர் மாவட்டத்தில் இந்த நிலை மாறிவிட்டது. வேலூர் மாவட்டத்தில் காய்கறி பழங்கள் தரமாக இருந்தாலும் கூட சரியான எடைக்கு இவை கிடைக்கிறதா? என்றால் ஆம் என்று சொல்லிவிட முடியாது. அரக்கோணம், வாணியம்பாடி, வாலாஜா, காட்பாடி, ஆற்காடு போன்ற பகுதிகளை இதற்கு உதாரணமாக கூறலாம்.

முன்பெல்லாம் பஸ்நிலையங்கள், ரெயில் நிலையங்கள் போன்ற இடங்களில்தான் குறைந்த எடையில் பழங்கள் விற்பனை செய்வார்கள். அல்லது அதிக விலைக்கு விற்பார்கள். கேரி பைகள் வந்த பின்பு, திராட்சை, வாழைப்பழம், சாத்துக்குடி, ஆப்பிள் போன்றவற்றை விற்பனை செய்வதில் ஓரளவுக்கு இந்த மோசடி குறைந்தது. ஏனெனில் கண்களுக்கு தெரிகிற மாதிரி பொருட்களின் அளவு இருப்பதையும், நமக்கு பிடித்தால் வாங்கப்போகிறோம் இல்லையென்றால் விட்டுவிடுவோம் என்கிற போக்கு இருப்பதால் இதுபற்றி பொதுமக்களிடம் சமாதான நிலை இருந்தது.

**<u>சரியான எடை இருக்காது</u>**

ஆனால், வேலூர் மாவட்டத்தில் பஸ் நிலையங்கள் அருகேயும், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களிலும், தள்ளுவண்டிகள், வாகனங்களை நிறுத்தி காய்கறிகள், பழங்கள் விற்போரும் சரியான எடையில் விற்பனை செய்வதில்லை என்ற குற்றச்சாட்டு பொதுமக்களால் தீவிரமாக எழுப்பப்படுகிறது.

வேலூர் நகரைப் பொறுத்தவரை பழைய பஸ்நிலையம், மண்டித்தெரு, மீன்மார்க்கெட், சத்துவாச்சாரி ஆகிய இடங்களில் இதுபோல் எடை குறைவாக விற்பனை செய்யப்படுவது கண்கூடு. தரமான ஆப்பிள் கிலோ ரூ. 120 என்றால் அதை கிலோ 100 ரூபாய் என்று அழகாக சிலேட்டில் எழுதி வைப்பார்கள். கைத்தராசு அல்லது மின்னணு தராசில் துல்லியமாக 1 கிலோ என நிறுத்தும் காண்பிப்பார்கள்.

சரி விலை குறைவாக இருக்கிறதே என வாங்கி வீட்டுக்கு வந்து எடை போட்டு பார்த்தால் அவை 800 முதல் 850 கிராம்தான் இருக்கும். ஆப்பிள் மட்டும் அல்ல, திராட்சை, சாத்துக்குடி பழங்களை வாங்கினாலும் இதே கதிதான்.

**<u>கூடுதல் விலை</u>**

காய்கறி வாங்குபவர்களுக்கு இந்த சோதனையோடு, இன்னொரு வேதனையும் இருக்கும். அதாவது விலை குறைவான காய்கறிகளை அரைக்கிலோவுக்கும் குறைவாக வாங்க முடியாது. கத்தரிக்காய் கிலோ 10 ரூபாய் என்றால் கால் கிலோ ரூ.2.50 பைசாவுக்கு கிடைக்காது. காய்கறி விற்பனையாளர்களின் விருப்பத்தின்படி அரைக்கிலோவிற்கும் அதிகமாகத்தான் வாங்க நேரும். அதற்கு குறைவாக நேர்ந்தால் கேட்பவருக்கு சற்று ஏச்சும் கிடைக்கும்

வேலூரைப் பொறுத்தவரை, காட்பாடி, சத்துவாச்சாரி போன்ற பகுதியில் காய்கறிகள், பழங்களின் விலை மற்ற இடங்களை விட பலமடங்கு அதிகமாக விற்பனை செய்யப்படுகிறது. குறிப்பாக சத்துவாச்சாரி ஆர்.டி.ஓ. அலுவலக சாலை பகுதியில் உள்ள காய்கறி, பழக்கடைகளில் விலை நேதாஜி மார்க்கெட்டில் விற்பனை செய்வதை விட கிலோவுக்கு 10 ரூபாய் முதல் 20 ரூபாய் வரை அதிகமாக இருக்கும். **<u>வீணாகிவிடும்</u>**

எடைக்குறைப்பு பற்றி நடைபாதை, தள்ளுவண்டி, வாகனங்களில் காய்கறி, பழங்களை விற்போரைக் கேட்டால், “காய்கறியிலும், பழங்களிலும் அழுகும் பொருட்களை ஓரிரு நாளைக்கு மேல் வைத்திருக்க முடியாது. இதனால் 10 கிலோ

வாங்கினால் 2 கிலோ வரை வீணாகிவிடும். அதை எடைக்குறைப்பில்தான் சரிக்கட்ட முடியும். இன்னொன்று, எங்களைப் போன்றவர்கள் யார் யாருக்கு பணம் கொடுக்கவேண்டி இருக்கும், காய்கறி, பழங்களை இனாமாக கொடுக்கவேண்டிஇருக்கும் என்பதை பொதுமக்கள் நன்கு அறிவார்கள். அதனால் அவர்கள் எடைக்குறைப்பையெல்லாம் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்வதில்லை. தங்கள் கையில் காசு இருப்பதற்கு ஏற்ப வாங்கிச் செல்வார்கள்" என நியாயம் கற்பிக்கிறார்கள்.

என்ன காரணம் கூறினாலும், எடை மோசடி என்பதை எப்படி ஏற்க இயலும்?... சம்பந்தபட்ட அதிகாரிகள் தொடர் அதிரடி நடவடிக்கை எடுத்தால் மட்டுமே இதைக் கட்டுப்படுத்த முடியும்.

**சேத்துப்பட்டில் கறவை மாடு வாங்க ரூ.15 லட்சம் கடன் உதவி**

சேத்துப்பட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் கடன் உதவி வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. சங்க தலைவர் சி.எம்.முருகன் தலைமை தாங்கினார். பேரூராட்சி தலைவர் எம்.ஜி.ராதா கிருஷ்ணன், கூட்டுறவு சங்க துணைத்தலைவர் ராஜேஸ் ரி செந்தில்குமார், போளூர் கூட்டுறவு சங்க களமேலாளர் இளங்கோவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டுறவு கடன் சங்க செயலாளர் கே.நடராஜன் வரவேற்றார்.

இதில் விவசாய கூட்டுப் பொறுப்பு குழுவை சேர்ந்த 25 பயனாளிகளுக்கு தலா ரூ.25 ஆயிரம், மகளிர் குழுக்க ளுக்கு ரூ.8 லட்சத்து 80 ஆயிரம் என ரூ.15 லட்சம் கறவை மாட்டு கடன் வழங்கப்பட்டது.

சங்க இயக்குனர்கள் ஐ.ஜி.ஏழுமலை, சுப்பிரமணி, சேட்டு உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் கால் நடை டாக்டர் சந்திரசேகர் நன்றி கூறினார்.

**கொங்கணாபுரத்தில் பருத்தி ரூ.1½ கோடிக்கு ஏலம் எள் ரூ.12 லட்சத்துக்கு விற்பனை**



இடைப்பாடி,

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தி விற்பணையாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் கொங்கணாபுரம் கிளையில் சனிக்கிழமைதோறும் பருத்தி மற்றும் எள் ஏலம் நடைபெறுவது வழக்கம். அதன்படி, நேற்று பருத்தி மற்றும் எள் ஏலம் நடந்தது.

இந்த ஏலத்தில் தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, ஈரோடு ஆகிய பகுதிகளில் இருந்து விவசாயிகள், தங்கள் நிலத்தில் விளைந்த பருத்தியையும், எள்ளையும் எடுத்து வந்து கலந்து கொண்டனர். இதில் பி.டி. ரக பருத்தி மூட்டை ரூ.4,300 முதல் ரூ.5,200–க்கு ஏலம் சென்றது. டி.சி.எச். ரக பருத்தி ரூ.6,400 முதல் ரூ.6,990 வரை விற்பனை ஆனது. மொத்தம் 10 ஆயிரம் பருத்தி மூட்டைகள் ரூ.1½ கோடிக்கு ஏலம் போனது.

இதேபோல் 120 மூட்டைகளில் கொண்டு வரப்பட்டு இருந்த எள் ரூ.12 லட்சத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகள் கலந்து கொண்டு போட்டிப்போட்டுக் கொண்டு ஏலம் எடுத்தனர்.

**கோழிகளின் மேல் குளிர்காற்று நேரடியாக படுவதை தவிர்க்கவேண்டும் ஆராய்ச்சி நிலையம் தகவல்**



நாமக்கல்,

கோழிகள் அதிக தீவனம் எடுப்பதை தவிர்க்க, கோழிகளின் மேல் குளிர்காற்று நேரடியாக படுவதை தவிர்க்க வேண்டும் என நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தெரிவித்து உள்ளது.

ஆராய்ச்சி நிலையம்

நாமக்கல் மாவட்டத்தில் இன்று (சனிக்கிழமை) முதல் அடுத்த 4 நாட்களுக்கு நிலவும் வானிலை குறித்து நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில் கூறப் பட்டு உள்ளதாவது:-

இன்று முதல் அடுத்த 4 நாட்கள் வானம் லேசான மேக மூட்டத்துடன் காணப் படும். மழை பெய்ய வாய்ப்பு இல்லை. காற்றின் வேகம் முறையே 3, 3, 3, 4 கி.மீ. வேகத்தில் இருக்கும். கிழக்கு திசையில் இருந்து வீசும்.

வெப்ப நிலையை பொறுத்த வரையில் அதிகபட்சமாக 86 டிகிரியாகவும், குறைந்தபட்ச மாக 62.6 டிகிரியாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம்

அதிகபட்சமாக முறையே 70, 69, 66, 65 சதவீதமாகவும், குறைந்தபட்சமாக முறையே 38, 35, 35, 35 சதவீதமாகவும் இருக்கும்.

கோழிகளில் தீவன எடுப்பு அதிகரித்தால் முட்டை உற் பத்தி செலவு கூடும் என்பதால் கோழிமனைகளின் பக்கவாட் டில், குறிப்பாக உயர்மனை களில் படுதாவை கொண்டு 3 அடி உயரம் கோழிகளை மறைக்கும் அள விற்கு மறைத்து குளிர்காற்று கோழிகளின் மேல் நேரடியாக படாமல் தடுக்க வேண்டும். இதனால் அதிகமாக கோழிகள் தீவனம் எடுப்பதை தவிர்க்கலாம்.

<u>கோழியின நோய் ஆய்வகம்</u>

கடந்த வாரம் கோழியின நோய் கண்டறிதல் மற்றும் கண்காணிப்பு ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்ட கோழி கள் பெரும்பாலும் இறக்கை அழுகல் சம்பந்தப்பட்ட நோய் மற்றும் மேல் மூச்சுக்குழாய் நோயினால் இறந்துள்ளது தெரிய வந்துள்ளது.

எனவே கோழிப் பண்ணை யாளர்கள் தகுந்த பண்ணை உயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடிப்பதுடன், கால் நடை மருத்துவரின் ஆலோச னைப்படி கோழிக் கொட்டகை களில் கிருமி நீக்க மருந்துகளை தெளிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

**கோமாரி நோயால் உயிரிழந்த கால்நடைகள் குறித்து சரியாக கணக்கெடுக்கவில்லை குறைதீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் புகார்**

கிருஷ்ணகிரி மாவட்டத் தில் கோமாரி நோயால் உயிரிழந்த கால்நடை கள் குறித்து சரியாக கணக் கெடுக்கப் படவில்லை என்று குறைதீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் புகார் தெரிவித்தனர். இத னால் பரபரப்பு ஏற்பட் டது.

<u>குறைதீர்க்கும் கூட்டம்</u>

கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடந்தது. கலெக்டர் டி.பி.ராஜேஷ்

தலைமை தாங் கினார். மாவட்ட வருவாய் அலுவலர் பாலசுப்பிரமணி யம், ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குனர் மந்திராசலம், வேளாண் இணை இயக்குனர் ராதாகிருஷ்ணன் உள்ளிட் டோர் முன்னிலை வகித்தார் கள்.

இந்த கூட்டத்தில் கிருஷ்ண கிரி, ஊத்தங்கரை, போச்சம் பள்ளி, தேன்கனிக்கோட்டை, ஓசூர் உள்ளிட்ட மாவட்டத் தின் பல்வேறு பகுதிகளில் இருந்து 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு தங்கள் கோரிக்கைகள் மற்றும் குறைகள் குறித்து பேசினர்.

<u>கோமாரி நோய்</u>

பெரும்பாலான விவசாயி கள், நீர்நிலைகளில் உள்ள ஆக் கிரமிப்புகளை அகற்ற வேண் டும். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு சுற்றுச் சுவர் கட்ட வேண்டும். பாலே குளி முதல் சந்தூர் வரை புதி தாக வெட்டப்பட்ட கால் வாய்க்கு தண்ணீர் திறந்து விடவேண்டும். மா உற் பத்தியை அதிகரிக்க விவசாயி களுக்கு நவீன சாகுபடி முறை கள் குறித்து பயிற்சி அளிக்க வேண்டும் போன்ற கோரிக்கை களை வலியுறுத்தி பேசினர்.

தமிழக விவசாயிகள் சங்க மாநிலப் பொதுச்செயலாளர் ராமகவுண்டர், ‘ கோமாரி நோய் தாக்குதலால் ஆயிரக் கணக்கான கால்நடைகள் உயிரிழந்தன. இது குறித்து கிராம நிர்வாக அலுவலர்கள் சரியான முறையில் கணக் கெடுக்கவில்லை என்றும் எனவே மீண்டும் கணக்கெடுக்க வேண்டும் எனவும் வலியுறுத் தினார்.

இதையடுத்து, மீண்டும் கணக்கெடுப்பு நடத்த நட வடிக்கை எடுக்கும்படி சம் பந்தப்பட்ட துறை அலுவலர் களுக்கு கலெக்டர் உத்தரவிட் டார், பின்னர் கூட்டத்தில், விவசாயிகளுக்கு சர்க்கரை நோய் மற்றும் ரத்த அழுத்தம் குறித்து பரிசோதனை நடத்தப் பட்டது.

**கச்சிராயப்பாளையம் பகுதியில் சம்பா நெல் சாகுபடி மும்முரம்**



கோமுகி அணை வாய்க்காலில் தண் ணீர் திறந்ததால் கச்சி ராயப்பாளையம் பகுதி யில் சம்பா நெல் சாகுபடி பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

<u>கோமுகி அணை</u>

கச்சிராயப்பாளையம் அருகே கல்வராயன்மலை அடிவாரத்தில் கோமுகி அணை உள்ளது. இதன் பழைய பாசனம், புதிய பாசன திட்டத்தில் வடக்கனந்தல், மாத்தூர், மண்மலை, செல்லம்பட்டு, தாவடிப்பட்டு, பால்ராம்பட்டு, கரடிசித்தூர், ஏர்வாய்பட்டினம் உள்பட சுற்றுப்புற கிராமங்களில் 5 ஆயிரம் ஏக்கரில் விவசாயம் நடைபெறுகிறது. இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை சரியாக பெய்யாத தால் கோமுகி அணைக்கு குறைந்த அளவு தண்ணீர் வந்தது. இதனால் சம்பா சாகுபடி பணி தாமதமானது. திடீரெனறு வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலத்தால் மழை பெய்தது. இதன் காரணமாக கோமுகி அணையின் நீர்மட்டம் 43 அடியாக உயர்ந்தது.

<u>குறுவை நெல்</u>

இதன்பின்னர் முதல்- அமைச்சர் ஜெயலலிதா உத்தரவுப்படி கடந்த 8-ந் தேதி விவசாய பாசனத்துக்கு வாய்க் காலில் தண்ணீர் திறக்கப் பட்டது. இதையடுத்து கோமுகி அணை சாலை, வடக்கனந்தல், மாத்தூர், மண்மலை, பரிகம் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் குறுவை சாகுபடிக்காக நாற்றங்கால் விடப்பட்டு, நாற்று நடும் பணி மும்முரமாக நடக்கிறது.

பருவமழை தாமதத்தால், கோமுகி அணையின் நீர் இருப்பை கணக்கில் கொண்டு 90 நாள் குறுவை பயிரான கோ-45 ரக நெல் பயிர் செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

**2011–12–ம் ஆண்டில் வறட்சியால் பாதிப்பு: விவசாய கடன்களை மத்திய–மாநில அரசுகள் தள்ளுபடி செய்ய வேண்டும் ஏரி,ஆற்றுப்பாசன விவசாயிகள் கூட்டத்தில் தீர்மானம்**

திருச்சி,

2011–12–ம் ஆண்டில் வறட்சியால் பாதிக்கப்பட்டதால் விவசாய கடன்களை மத்திய–மாநில அரசுகள் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று ஏரி மற்றும் ஆற்றுபாசன விவசாயிகள் சங்க கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

<u>பொதுக்குழு கூட்டம்</u>

தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்க பொதுக்குழு கூட்டம் திருச்சி சத்திரம் பஸ்நிலையம் அருகே உள்ள ஒரு அரங்கில் நேற்று நடந்தது. கூட்டத்துக்கு மாநில தலைவர் பூ.விசுவநாதன் தலைமை தாங்கினார். மாநில பொருளாளர் தமிழரசன், மாவட்ட செயலாளர் அன்பழகன், மாவட்ட துணை செயலாளர் மூர்த்தி உள்பட பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:–

<u>விவசாய கடன்கள் தள்ளுபடி</u>

கடந்த 2011–12–ல் காவிரி நீர், மழைநீர் இல்லாமல் விவசாயம் செய்ய முடியாமல் வறட்சியால் பாதிக்கப்பட்டனர். ஆகவே 2011–12–ம் ஆண்டில் விவசாயிகள் வாங்கிய கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். கரும்பு டன்னுக்கு ரூ.3ஆயிரத்து 500 என்றும், நெல் குவிண்டாலுக்கு ரூ.1,750 என்றும், பருத்தி கிலோவுக்கு ரூ.75 என்றும் தமிழக அரசு விலை அறிவிக்க வேண்டும். தமிழக முதல்–அமைச்சர் விவசாயத்துக்கு தனி பட்ஜெட் கொண்டு வர வேண்டும்.

<u>நதிகள் இணைப்பு</u>

தமிழகத்தில் நதிகளையும், ஆறுகளையும், ஏரிகளையும் இணைக்க வேண்டும். 10 வருடங்களாக விவசாய மின் இணைப்பு கேட்டு காத்திருப்பவர்களுக்கு விவசாய மின் இணைப்புகளை வழங்க வேண்டும் என்பது உள்பட 11 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் சின்னதம்பி, அய்யாவு, செந்தில்குமார், சுப்பிரமணியன், ராமச்சந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக மாவட்ட தலைவர் ஜெயராமன் வரவேற்றார். முடிவில் செல்லதுரை நன்றி கூறினார்.

**நிலக்கடலையில் அதிக மகசூல் பெற நுண்ணூட்ட சத்துக்கள் இட வேண்டும் அதிகாரிகள் ஆலோசனை**

இலுப்பூர்,

நிலக்கடலையில் அதிக மகசூல் பெற நுண் ணூட்டச் சத்துக்கள் இட வேண்டும் என்று வேளாண்மை அதிகாரி கள் ஆலோசனை வழங்கி யுள்ளனர்.

இது குறித்து குடுமியான் மலை உழவர் பயிற்சி நிலையம் சார்பில் வேளாண்மை இணை இயக்குநர் ஷாஜஹான், குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் சதானந்தம் மற்றும் வேளாண்மை அலு வலர் ராஜசேகரன் ஆகியோர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், தெரிவித்துள்ள தாவது;-

நுண்ணூட்ட குறைபாடு

இறவை நிலக்கடலையில் மகசூல் குறைவுக்கான கார ணங்களில் நுண்ணூட்டக் குறைபாடு முக்கியமானது. பயிர் வளர்ச்சிக்குத் தேவைப் படும் 16 ஊட்டச்சத்துக்களில் கார்பன், ஆக்சிஜன் காற்றின் மூலமும், ஹைட்ரஜன் நீரின் மூலமும் பயிர்களுக்குக் கிடைக் கிறது. மற்ற ஊட்டச்சத்துக்கள் ரசாயன உரங்கள் மூலம் கிடைக்கிறது.

இதில் நைட்ரஜன், பாஸ் பரஸ், பொட்டாஷ் ஆகிய ஊட்டச்சத்துக்கள் பேரூட்டச் சத்துக்கள் எனப்படுகின்றன. இவை பயிர்களுக்கு அதிக அளவில் தேவைப்படுகின்றன. கால்சியம், மக்னீசியம் கந்தகம் ஆகியவை இரண்டாம் நிலை ஊட்டச்சத்துக்கள் எனப் படுகின்றன. துத்தநாகம், தாமிரம், இரும்பு, மாங்கனீசு, போரான், மாலிப்டினம் மற்றும் குளோரின் போன் றவை நுண்ணூட்டச் சத்துக் கள் எனப்படும். இவை பயிருக் குக் குறைந்த அளவே தேவைப் படும்.

மகசூலை பாதிக்கும்

பேரூட்டச் சத்துக்களில் கவனம் செலுத்தும் அள விற்கு நுண்ணூட்டம் இடுவதில் விவசாயிகள் கவனம் செலுத் துவதில்லை. மண்ணில் நுண் ணூட்டங்கள் இல்லாததால் அவற்றைத் தனியாக இடவேண்டும். இவை பயிருக்குக் குறைந்த அளவே தேவைப்பட்டாலும், பற்றாக் குறை ஏற்பட்டால் மகசூலைப் பெரிதும் பாதிக் கும்.

நிலக்கடலையின் இலை நரம்புகள் பச்சையமின்றி பயிர் வளர்ச்சி குன்றுவதால், 50 சதவீதம் கூட பயிர் மகசூல் இழப்பு ஏற்படுகிறது. இரும்புச் சத்துப் பற்றாக்குறையும் பெரும் இழப்பை ஏற்படுத்தும். மணற் பாங்கான நிலங்களிலும், மண்ணில் அங்ககப் பொருட் கள் அளவு குறைந்த நிலங் களிலும் போரான் சத்து குறைவாகக் காணப்படும். பயிர் அதிக சூரிய வெளிச்சத் தில் இருந்தால் போரான் பற்றாக்குறை ஏற்பட்டு, நிலக் கடலைப் பயிரில் இளந்தளிர் உற்பத்தி குறையும். பயிர் நுனியில் இலைகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து கொத்தாகக் காணப்படும். இதனால் பொக்குக் காய்கள் அதிகம் உண்டாகும். உரிய அளவு போரான் சத்து அளித்தால் அதிக மகசூல் பெறலாம்.

இட வேண்டிய முறை

நிலக்கடலை விதைப்பு செய்த பின்னர், ஏக்கருக்கு 5 கிலோ நிலக்கடலை நுண்ணூட்டக் கலவையை 20 கிலோ மணலுடன் கலந்து நிலத்தில் சீராகத் தூவினால் நுண்ணூட்டங்களால் ஏற் படும் குறைபாட்டை நிவர் த்தி செய்து அதிக

மகசூல் பெறலாம். நுண்ணூட்டக் கலவையை மற்ற ரசாயன உரங்களோடு கலக்கக்கூடாது. மேலும் இதனை அடியுரமாக இடக்கூடாது. தற்போது புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் விவசாயிகளுக்கு நிலக்கடலை நுண்ணூட்டக் கலவை விநியோகிக்கப்பட்டு வரு கிறது. இவற்றைப் பெற்று விவசாயிகள் பயனடைய லாம். எனவே, இறவை நிலக் கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள் நிலக்கடலை நுண்ணூட்டக் கலவையை இட்டு திரட்சியான பொக்கற்ற நிலக்கடலை பெற்று அதிக மகசூல் பெறலாம். இவ்வாறு அவர்கள் அதில் தெரிவித்துள்ளனர்.

**கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட பசுமாடு பலி**

வி.கைகாட்டி அரியலூர் மாவட்டம் ரெட்டிப்பாளையத்தைசேர்ந்தவர் மலர்க்கொடி. இவருக்கு கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு தமிழக அரசு சார்பில் மதுவிலக்கு துறை சார்பில் ரூ.40ஆயிரம் மதிப்பு கறவை பசு மாடு வழங்கப்பட்டது. இந்த மாடு கடந்த சில நாட்களாக நோயால் பாதிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்று மாலை திடீரென இறந்தது.இது குறித்து மலர்க்கொடி கால்நடை மருத்துவர் மற்றும் தாசில்தாருக்கு தகவல் அளித்தார்.

**அணைப்பட்டி ஆற்றில் மீன் பிடிப்பவர்கள் கவலை**



திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை தாலுகாவில் அணைப்பட்டி, எஸ்.மேட்டுப்பட்டி கிராமங்கள் உள்ளன. இந்த கிராமத்தை சேர்ந்தவர்கள் ஆண்டு தோறும் வைகை

நிலக்கோட்டை,

ஆனால் இந்த ஆண்டு போதிய மழை இல்லாத காரணத்தால் வைகை ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்படவில்லை. இதனால் அவர்கள் ஆற்றில் உள்ள பள்ளங்களில் தேங்கி நிற்கும் தண்ணீரில் மீன் பிடித்து வருகிறார்கள். இதில் போதிய மீன்கள் கிடைக்காததால் அவர்கள் கவலை அடைந்துள்ளனர்.

**விருதுநகர் மார்க்கெட் நல்லெண்ணை விலை உயர்வு**



விருதுநகர், -

எள் விளைச்சல் குறைவாக உள்ளதால் விருதுநகர் மார்க்கெட்டில் நல்லெண்ணை விலை கடுமையாக உயர்ந்துள்ளது. பொருட்களின் விற்பனை கடந்த வாரம் மந்தமாகவே இருந்தது.

உளுந்து

விருதுநகர் மார்க்கெட்டில் உளுந்து 100 கிலோ மூடை ரூ.4,600 முதல் ரூ.5,300 வரையிலும், உருட்டு உளுந்தம் பருப்பு ரூ.5,600 முதல் ரூ.7,100 வரையிலும், தொலி உளுந்தம் பருப்பு ரூ.5,300 முதல் ரூ.5,500 வரையிலும் விற்பனை ஆனது. துவரை 100 கிலோ மூடைக்கு ரூ.300 விலை உயர்ந்து ரூ.4,100 முதல் 4,900 வரையிலும், துவரம் பருப்பு ரூ.6,100 முதல் ரூ.7,300 வரையிலும் விற்பனை ஆனது. பாசிப்பயறு 100 கிலோ மூடை ரூ.6,500 முதல் ரூ.7,000 வரையிலும், பாசிப் பருப்பு 100 கிலோ மூடை ரூ.8,800 முதல் ரூ.9,200 வரையிலும் விற்பனை செய்யப் பட்டது. மல்லி லயன் ரகம் 40 கிலோ மூடை ரூ.3,000 முதல் ரூ.3,100 வரை விற்பனை ஆனது. வத்தல் சம்பா ரகம் குவிண்டால் ரூ.6,000 முதல் ரூ.6,800 வரையிலும், ஏ.சி. வத்தல் ரூ.7,300 முதல் ரூ.7,600 வரையிலும், முண்டு வத்தல் ரூ.4,200 முதல் ரூ.5,900 வரையிலும், சோடை வத்தல் ரூ.1,500 முதல் ரூ.1700 வரையிலும் விலை சொல்லப்பட் டது.

சமையல் எண்ணை

விருதுநகர் எண்ணை மார்க்கெட்டில் கடலை எண்ணை 15 கிலோ 1,350 ஆகவும், தேங்காய் எண்ணை ரூ.1,605 ஆக வும், சூரிய காந்தி எண்ணை ரூ.1500 ஆகவும்

விற்பனை ஆனது. நிலக்கடலை பருப்பு 80 கிலோ ரூ.3,800 ஆகவும், கடலை புண்ணாக்கு 100 கிலோ ரூ.3,200 ஆகவும், எள் புண்ணாக்கு 65 கிலோ ரூ.2,415 ஆகவும் விற்பனை ஆனது. பாமாயில் 15 கிலோ ரூ.970 ஆக விற்பனை செய்யப்பட் டது.

எள் விலை உயர்வு

தமிழகத்தில் எள் விளைச்சல் இல்லாத நிலையில், வட மாநி லங்களில் இருந்து எள் கொள் முதல் செய்யப்படுகிறது. 70 கிலோ வெள்ளை எள் மூடை ரூ.10,500 ஆகவும், கறுப்பு எள் ரூ.9,500 ஆகவும் விலை உயர்ந்து உள்ளது. இதனால் நல்லெண்ணை 15 கிலோ டின்னுக்கு ரூ.160 விலை உயர்ந்து உள்ளது. அடுத்து வரும் நாட்களிலும் நல் லெண்ணை விலை மேலும் உயரும் என்றே கூறப்படுகி றது.

விருதுநகர் சீனி மார்க்கெட்டில் சீனி குவிண்டால் ரூ.3,015 ஆகவும், கொண்டைக்கடலை குவிண்டாலுக்கு ரூ.100 விலை குறைந்து ரூ.3,000 ஆகவும், பொரி கடலை 55 கிலோவுக்கு ரூ.40 விலை குறைந்து ரூ.2,520 ஆகவும், பட்டாணி 100 கிலோ ரூ.3,000 ஆகவும், பட்டாணி பருப்பு ரூ.3,150 முதல் ரூ.3,325 வரையிலும், மசூர் பருப்பு ரூ.4,500 முதல் ரூ.4,600 வரையிலும், ரவை 90 கிலோ ரூ.3,370 ஆகவும், மைதா 90 கிலோ ரூ.3,090 ஆகவும் விலை சொல்லப்பட்டது.

காபி

விருதுநகர் காபி மார்க்கெட்டில் காபி பிளாண்டேசன் பிபி ரகம் 50 கிலோ ரூ.9,000 ஆக வும், ஏ ரகம் ரூ.9,900 ஆகவும், சி ரகம் ரூ.7,800 ஆகவும், ரோபஸ்டா பிபி ரகம் ரூ.6,000 ஆகவும், பிளாக் பிரவுன் ரகம் ரூ.5,500 ஆகவும் விற்பனை ஆனது.

கடந்த வாரம் விருதுநகர் மார்க்கெட்டில் பொருட்களின் விற்பனை மந்தமாகவே இருந்தது.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கொறித்துக் கொறித்துத் தின்னலாம்



அணில் என்றதும் உங்கள் நினைவுக்கு வருவது என்ன? கையில் ஒரு பழத்தையோ அல்லது கொட்டையையோ பிடித்தபடி கொறித்துக்கொண்டிருக்கும் காட்சிதானே. சரி, அணில் ஏன் எப்போதும் எதையாவது கொறித்துக்கொண்டே இருக்கிறது?

**உயிர்வாழும் ரகசியம்**

அணிலின் முன்பற்கள் நீளமானவை, கூர்மையானவை. அவை தொடர்ந்து வளரும் தன்மை கொண்டவை. அணில்கள் இப்படி மரப்பட்டைகளையும் கொட்டைகளையும் கடித்துத் தங்கள் பற்களை தேய்க்காவிட்டால் அவை நீளமாக வளர்ந்துவிடும். அப்படி நீளமாகிவிட்டால் அணில்களால் வாயை அசைக்க முடியாது. வாயை அசைத்தால்தானே சாப்பிட முடியும்? சாப்பிட்டால்தானே உயிர்வாழ முடியும்? அதனால் அணில்கள், பட்டினி கிடந்து இறப்பதற்குப் பதிலாக இப்படிக் கொறித்துக் கொறித்துத் தங்கள் வாழ்நாளை நீட்டித்துக்கொள்கின்றன.

மரக்கிளைகளில் தாவியோடும் அணில்களைப் பற்றி இன்னொரு சந்தேகமும் தோன்றலாம். இவ்வளவு வேகமாக மரங்களில் ஓடும்போது அவை கீழே விழுந்துவிடாதா? பழத்தை இரு முன்னங்கால்களால் பிடித்துக் கொண்டிருக்கும்போது, பின்னங்கால்களால் மட்டும்தானே உட்கார்ந்திருக்கின்றன. எப்படி கீழே விழாமல் இருக்க முடியும்?

இரண்டு கேள்விக்கும் ஒரே பதில்தான். அணிலின் நகங்கள் வளைந்து இருக்கும். அந்த அமைப்பு, மரங்களை இறுக்கமாகப் பற்றிக்கொள்ள உதவும்.

குட்டிப் புதர் மாதிரி இருக்கிற அணிலின் வால், அவை தாவும்போது சமநிலையை ஏற்படுத்த உதவுகிறது. அதனால்தான் அணில்கள் எந்தப் பயமும் இன்றி கண்ணிமைக்கும் நேரத்துக்குள் மரத்தின் உச்சிக்கே சென்று, நம் கன்னில் இருந்து மறைந்துவிடுகின்றன. சில அணில்கள் காற்றில் சறுக்கிப் பறக்கும் தன்மை கொண்டவை.

**அணில்களின் கருணை**

அணில்களிடம் இன்னொரு சிறப்பியல்பும் இருக்கிறது. அணில் குட்டிகளின் அம்மா உணவு தேடச் செல்லும்போது மற்ற விலங்குகளால் இறக்க நேரிட்டால், அணில் குட்டிகள் என்ன செய்யும்? அவற்றுக்கு இரை தேடி சாப்பிடத் தெரியாதுதானே. அதனால் மற்ற அணில்கள், அந்த அணில் குட்டிகளைத் தத்தெடுத்து வளர்க்கும்.

அதேபோல பெண் அணில்கள், குட்டிப்போடும் காலத்தில் எதையுமே சாப்பிடாது. பிரசவ காலத்தில் ஏற்படும் வலிக்கும், அணில்கள் உணவைத் தவிர்ப்பதற்கும் சம்பந்தம் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

அடுத்தமுறை அணிலைப் பார்க்கும்போது அதன் பல், வால், நகம் அனைத்தின் செயல்பாடுகளையும் கவனித்துப் பாருங்கள். உண்மையை நீங்களே உணர்வீர்கள்.

## கரும்பு கொள்முதல் விலையை ரூ.3,500 ஆக உயர்த்துக: ராமதாஸ்

விட குறைத்து, தமிழக அரசு அறிவித்துள்ளதாக குற்றம்சாட்டியுள்ள பாமக நிறுவனர் ராமதாஸ், கரும்புக்கு டன் ஒன்றுக்கு 3,500 ரூபாய் விலையை நிர்ணயிக்க வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்ட அறிக்கையில், "தமிழ்நாட்டில் 2013-14 ஆண்டு பருவத்தில் கரும்பு கொள்முதல் விலையாக டன்னுக்கு ரூ.2,650 வழங்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்திருக்கிறார். இதனால், கரும்பு விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

கரும்புக்கு நியாயமான விலை வழங்கப்பட வேண்டும் என்று விவசாயிகள் கோரி வந்த நிலையில், யானைப் பசிக்கு சோளப்பொறியைப் போல தமிழக அரசு அறிவித்திருக்கும் கரும்புக் கொள்முதல் விலை மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது.

பல மாநிலங்களில், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு மாநில அரசின் பரிந்துரை விலை அதிகமாக இருக்கிறது.

கரும்புக்கான உற்பத்திச் செலவுடன், லாபமாக 50 சதவிகிதத்தை சேர்த்து கொள்முதல் விலை நிர்ணயிக்க வேண்டும் என மத்திய அரசின் வல்லுநர் குழு பரிந்துரைத்தபடி வழங்க வேண்டும். அதன்படி, 50 சதவிகித லாபத்தை சேர்த்து, கொள்முதல் விலையாக 3,765 ரூபாய் நிர்ணயித்திருக்க வேண்டும்

எனவே, கரும்பு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு கரும்புக்கான கொள்முதல் விலையை டன்னுக்கு குறைந்தது ரூ.3,500 ஆக நிர்ணயிக்க தமிழக அரசு முன்வர வேண்டும்.

இனி வரும் காலங்களில் விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளுடன் சர்க்கரை ஆணையர் மூலம் பேச்சு நடத்தி கரும்புக்கான கொள்முதல் விலையை நிர்ணயிக்கும் நடைமுறையை அறிமுகப்படுத்த தமிழக அரசு முன்வர வேண்டும் என்று ராமதாஸ் கூறியுள்ளார்.

## நெல்லை மாவட்டத்தை ‘மிரட்டும்’ வறட்சி: மழை குறைவு, நெல் சாகுபடி சரிவு

திருநெல்வேலி மாவட்டத்தில், வழக்கமான மழை அளவைவிட இவ்வாண்டு, 12.6 சதவிகிதம் குறைந்துள்ளதால், மீண்டும் வறட்சியை சந்திக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. பருவத்துக்கும், காலத்துக்கும் ஏற்ப மழை கிடைக்காததால், சாகுபடி பரப்பு சரிவடைந்துள்ளன.

திருநெல்வேலி மாவட்டத்தில், வழக்கமாக நெல் முதல்போகமான கார் பருவத்தில் ஜூன் முதல் செப்டம்பர் வரை, 20 ஆயிரம் ஹெக்டேரிலும், 2-ம் போகத்தில், அக்டோபர் முதல் பிப்ரவரி வரையில், 62 ஆயிரம் ஹெக்டேரிலும் நெல் சாகுபடி நடக்கிறது. கடந்த ஆண்டு நிலவிய கடும் வறட்சியால், சாகுபடி பரப்பு குறைந்து, 41,967 ஹெக்டேர் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டது.

### நெல் சாகுபடி சரிவு

நெல் மட்டுமின்றி, பிசான பருவத்தில் பயிரிடப்படும் மற்ற பயிர்களின் பரப்பும் பெருமளவில் குறைந்திருந்தன. கடந்த 2011-12-ம் ஆண்டில், 70,407 ஹெக்டேரில் நெல் சாகுபடி நடைபெற்றது. ஆனால், 2012-13-ம் ஆண்டில், 38,246 ஹெக்டேரில் மட்டுமே நெல் சாகுபடி நடைபெற்றது.

நீண்ட இடைவெளிக்குப்பின் 2012-13-ம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டம் வறட்சியின் கோரப்பிடியில் சிக்கியது. இவ்வாண்டிலும், மாவட்டம் வறட்சியை எதிர்நோக்கியிருப்பது குறித்து, திருநெல்வேலியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் சராசரி மழையளவு, 814.8 மி.மீ. 2012-ம் ஆண்டில் பெறப்பட்ட மழையளவு 754.39 மி.மீ. இது இயல்பான மழை அளவைவிட, 7 சதவீகிதம் குறைவு. இவ்வாண்டு இதுவரை, 711.83 மி.மீ. மழை பெய்துள்ளது. இது இயல்பான மழையை விட 12.6 சதவிகிதம் குறைவு.

## 1,731 குளங்கள் வறட்சி

பருவத்துக்கும், காலத்துக்கும் ஏற்ப மழை கிடைக்காமல், நீர் ஆதாரங்கள், குளங்கள வறண்டு போகும் நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது, அணைகளில், 41 சதவீதம் நீர் இருப்பு உள்ளது. கடந்த ஆண்டு இதே காலத்தில், 25 சதவீதம் நீர் இருப்பு இருந்தது.

மாவட்டத்தில் மொத்தம், 921 கால்வரத்து குளங்களும், 1,528 மானாவாரி குளங்களும் உள்ளன. இவற்றில், 406 கால்வரத்து குளங்களும், 1,325 மானாவாரி குளங்களும் தற்போது வறண்டிருக்கின்றன. நிலத்தடி நீர் ஆதாரத்தை பொறுத்த வரை கிணறுகளில் சராசரியாக, 3 முதல் 6 மணிநேரம் பாசனம் மேற்கொள்ளும் அளவுக்கு மட்டுமே நீர் உள்ளது. மாவட்டத்தில் போதிய மழையில்லாததால், பிசான சாகுபடியில் திட்டமிட்ட இலக்கை எட்ட முடியாத நிலையுள்ளது.

**கலக்கத்தில் விவசாயிகள்**

மாவட்டத்தில், 60 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் நெல் விவசாயத்துக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. கடந்த 30.11.13-ம் தேதி வரை 24,928 ஹெக்டேரில் மட்டுமே நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில், 25,849 ஹெக்டேரில் நெல் விவசாயம் செய்யப்பட்டிருந்தது. கடந்த 2011-ம் ஆண்டில் மாவட்டத்தில், 86,441 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்ட நெல் அடுத்த ஆண்டில், 41,691 ஹெக்டேராக குறைந்தது. கடந்த ஆண்டு மாவட்டத்தில் ஏற்பட்ட வறட்சியால், 38,246 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த நெற்பயிரில், 3,563.74 ஹெக்டேர் பரப்புக்கு பாதிக்கப்பட்டது. இதுபோல், 35,432 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த இதர பயிர்கள் 13,401.76 ஹெக்டேர் பரப்பில் பாதிக்கப்பட்டது. தவறி வரும் பருவ மழை, நீர் ஆதாரங்கள் ஆக்கிரமிப்பு, இயற்கை வளங்கள் கொள்ளை உள்ளிட்ட காரணங்களால், திருநெல்வேலி மாவட்டத்தில் ஆண்டுக்கு, ஆண்டு நெல் மற்றும் பிற பயிர்கள் சாகுபடி பரப்பு சரிவடைந்து வருவது விவசாயிகளுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

## நெல்லுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்குமா? - டெல்டா விவசாயிகள் எதிர்பார்ப்பு

தமிழகத்தில் நெல்லுக்குக் கட்டுப்படியான விலை வழங்கப்படுமா என டெல்டா மாவட்ட விவசாயிகள் தமிழக அரசை எதிர்நோக்கியுள்ளனர்.

டீசல் விலை ஏற்றம் காரணமாக வயலை உழவு செய்யும் டிராக்டர், நடவு செய்யும் மற்றும் அறுவடை செய்யும் இயந்திரங்களுக்கான வாடகைகள் அவ்வப்போது உயர்த்தப்படுகின்றன. மேலும், இடுபொருள்களான விதை நெல், உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளின் விலையும் வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்து வருகிறது.

டெல்டா மாவட்டங்களில் விவசாயப் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் பலரும் செங்கல் சூளை, திருப்பூர் ஏற்றுமதி நிறுவனங்கள், கட்டிடக் கட்டுமானப் பணிகள் என மாற்றுத் தொழில்களுக்குச் சென்று விட்டனர். இதனால் இந்த மாவட்டங்களில் வேளாண் பணிகளை மேற்கொள்ள அதிகளவில் தொழிலாளர்கள் கிடைக்கவில்லை. இதனால் கூடுதல் கூலி கொடுத்து ஆள்களை தேடிப் பிடிக்க வேண்டிய நிலையும் ஏற்படுகிறது என்கின்றனர் விவசாயிகள்.

காவிரி டெல்டா மாவட்டங்களில் மாற்றுப் பயிர்கள் பெரிய அளவில் கை கொடுக்காத நிலையில் விவசாயிகள் முழுமையாக நெல் சாகுபடியை மட்டுமே மேற்கொள்ள வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், நிகழாண்டில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லுக்கு மத்திய அரசின் குறைந்தபட்ச ஆதரவு விலையோடு தமிழக அரசின் மானியம் முறையே ரூ.70, ரூ.50 சேர்த்து சன்ன ரக நெல்லுக்குக் குவிண்டாலுக்கு ரூ.1,415 மற்றும் பொது ரக நெல்லுக்கு ரூ.1,360 என விலை அளித்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்படுமென அறிவித்து, டெல்டா மாவட்டங்களில் கொள்முதல் நிலையங்களை தமிழக அரசு திறந்துள்ளது.

இதுகுறித்து தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்ட விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு பொதுச் செயலாளர் ஆறுபாதி கல்யாணம் கூறியது:

கடந்த ஆண்டில் கடும் வறட்சி ஏற்பட்டு சாகுபடி செய்யப்பட்டிருந்த பயிர்கள் அனைத்தும் காய்ந்து, கருகி விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியது. இந்த ஆண்டு மேட்டூர் அணையில் போதிய அளவு தண்ணீர் இல்லாததால் குறுவை சாகுபடிக்கு உரிய காலத்தில் தண்ணீர் திறக்கப்படவில்லை.

இதனால், சம்பா சாகுபடியை முழு நம்பிக்கையுடன் விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். ஆனால், நெல்லுக்கான விலை போதுமானதாக இல்லை என்பது விவசாயிகளுக்கு கவலையளிப்பதாக உள்ளது. தற்போதுள்ள நிலவரப்படி, ஒரு ஏக்கரில் நெல் சாகுபடி செய்ய ரூ.20,000 செலவாகிறது. இதிலிருந்து எவ்வித இயற்கை சீற்றங்களிலும் பயிர்கள் பாதிக்கப்படாத பட்சத்தில் சராசரியாக 1.5 டன் மகசூல் கிடைக்கும்.

பல நேரங்களில் பல்வேறு காரணங்களால் விவசாயிகள் செய்த செலவுக்குக்கூட மகசூல் கிடைப்பதில்லை. இதனால், சாகுபடிக்காக வாங்கிய கடனையும் கட்ட முடிவதில்லை.

தேசிய வேளாண் ஆணையம், அனைத்து வேளாண் உற்பத்திப் பொருள்களுக்கும் உற்பத்திச் செலவுடன் 50 சதவீத கூடுதல் தொகையைச் சேர்த்து கொள்முதல் விலையாக நிர்ணயிக்க வேண்டுமென 2006-ம் ஆண்டில் பரிந்துரை செய்தது. ஆனால், இந்தப் பரிந்துரையை இதுவரையில் மத்திய அரசு ஏற்று விலையை வழங்கவில்லை.

இந்த பிரச்சினைக்குக் காரணம் உற்பத்தியை மையமாக வைத்து வேளாண் கொள்கை உருவாக்கப்படுகிறது. விவசாயிகளை மையமாக வைத்து உருவாக்கப்படவில்லை என்பதுதான். கட்டுப்படியான விலையை வழங்க மத்திய அரசை, தமிழக அரசு வலியுறுத்த வேண்டும். அதுவரையில், மத்திய அரசு வழங்கும் விலையுடன் சேர்த்து தமிழக அரசு குவிண்டாலுக்கு ரூ.500 ஊக்கத் தொகை

வழங்க வேண்டும். குறைந்தபட்சம் குவிண்டாலுக்கு ரூ.2,000 கொள்முதல் விலையை அரசு வழங்க வேண்டும்" என்றார்.

**நெல் விலை உயர்ந்தால் அரிசி விலை உயருமா?**

நெல் விலையை கூடுதலாக அளித்தால் அரிசி விலை உயர்ந்துவிடும் என அரசியல்வாதிகள் தவறான பிரச்சாரம் செய்து வருகின்றனர். இது உண்மையில்லை. ஒன்றரை கிலோ நெல்லிலிருந்து ஒரு கிலோ அரிசி கிடைக்கும். தற்போது அரசு கொள்முதல் செய்யும் விலைப்படி பார்த்தால் ஒன்றரை கிலோ நெல் ரூ.21. இந்தவகையில் பார்த்தால் ஒரு கிலோ அரிசி அதிகபட்சமாக ரூ.28 வரைதான் விற்க வேண்டும். ஆனால், ரூ.40 முதல் ரூ.50 வரை விற்பனை செய்யப்படுகிறது.

நெல்லை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கும் உரிய விலை கிடைக்கவில்லை, அரிசியை வாங்கும் நுகர்வோரும் கூடுதல் விலை கொடுக்க வேண்டியுள்ளது. இருவரையும் ஏமாற்றி, இடைத்தரகர்கள் கொள்ளை லாபம் பெறுகின்றனர் என்பதுதான் உண்மை நிலவரம் என்கின்றனர் விவசாயிகள்.

Keywords: காவிரி டெல்டா, தமிழகம், நெல் விலை, டெல்டா விவசாயம்

**வேளாண் விளைபொருள்களின் விலை சரிவது ஏன்?**

அசோக் குலாத்தி பிரபலமான வேளாண் பொருளியல் நிபுணர். கல்வியாளரான அவர் இந்தியாவிலும் உலக அளவிலும் வேளாண் சந்தைகளில் என்ன நடக்கிறது என்பதை நன்கு அறிந்தவர். வேளாண் உற்பத்திச் செலவு - விலை நிர்ணய ஆணையத்தின் தலைவர். அவருடைய அமைப்புதான் பல்வேறு வேளாண் விளைபொருள்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயிக்கிறது. உலக அளவில் விவசாயப் பொருள்களுக்கான விலைகளில் சரிவு ஏற்பட்டுவரும் சூழலில், இந்திய விவசாயிகள் அதை எப்படிச் சமாளிப்பது என்பதுகுறித்து விரிவாகப் பேசுகிறார்.

### நாம் இப்போது எங்கே இருக்கிறோம்?

உலக அளவில் 2011-ல் உணவு தானியங்களின் விலை அதிகரித்ததால் எல்லா நாடுகளிலும் சாகுபடியாளர்கள் அதற்கேற்ப விளைச்சலைப் பெருக்கி சந்தைக்கு அனுப்பத் தொடங்கினார்கள். அதன் விளைவாக எல்லா வகை தானியங்களின் உற்பத்தியும் உச்சத்தை எட்டி அவற்றின் விலையைச் சரிக்கத் தொடங்கியது. இதன் விளைவாக பாமாயில் உங்களுக்கு இப்போது ஒரு டன் 800 டாலருக்குக் கிடைக்கிறது. 2011-ல் அதன் விலை டன்னுக்கு 1,100 டாலராக இருந்தது. கோதுமையின் விலை டன்னுக்கு 400 டாலரிலிருந்து குறைந்து இப்போது 285 - 290 டாலர் வரை விற்கிறது.

உலக அளவில் விலை உயர்ந்து உச்சத்தை எட்டியபோது காலந்தாழ்ந்து நம் நாட்டிலும் எப்படி விலை உயர்ந்ததோ, அதேபோல விலை இறங்கும்போதும் காலந்தாழ்ந்து இறங்கிக்கொண்டிருக்கிறது. நல்ல பருவமழையை அடுத்து விளைச்சல் அமோகமாக இருப்பதால் இந்தச் சரிவு மேலும் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

### எந்த வகைப் பயிர்களில் இது வெளிப்படையாகத் தெரிகிறது?

சர்க்கரை, சமையல் எண்ணெய், பருப்பு வகைகளின் விலை அதிகமாக இருக்கிறது என்று இப்போது யாராவது புகார் செய்கிறார்களா? மக்காச்சோளமும் நிலக்கடலையும் (வேர்க்கடலை - மணிலா) இப்போது குறைந்தபட்ச ஆதரவு விலைக்கும் கீழே சந்தையில் விற்கப்படுகின்றன. கடந்த கோடைப் பருவத்தில் கொண்டைக் கடலை அறுவடையின்போது இதேதான் நிகழ்ந்தது. பருப்பு வகைகள், புன்செய் தானியங்கள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் விலை இப்போது இறங்குமுகமாகவே இருக்கிறது. பருத்திகூட இந்த முறை அமோக விளைச்சல் கண்டுள்ளது.

உலக அளவில் விலை குறைந்துவிட்டதால் மக்காச்சோளத்தை ஏற்றுமதி செய்ய முடியாத நிலை நிலவுகிறது. சீனத்திலிருந்து பருத்திக்குக் கேட்பு இருப்பதால்

குறைந்தபட்ச ஆதரவு விலையைவிட அதிக விலைக்கு அது விற்பனையாகிறது. கடுகு, கொண்டைக் கடலை விளைச்சல் வரும் கோடைப் பருவத்திலும் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். காரணம், அவை சாகுபடியாகும் பிரதேசங்களில் மண்ணில் நல்ல ஈரப்பதம் காணப்படுகிறது.

**எந்தப் பயிர்களில் இந்தப் பணவீக்கம் தொடர் கவலையாக நீடிக்கும்?**

அரிசி, கோதுமை, காய்கறிகள், பழங்களில் இந்த நிலை நீடிக்கும். அரிசி, கோதுமை விலை உயர்வுக்குக் காரணம், அரசு தன் வசமிருந்த கையிருப்பை முறையாகச் செலவிடாததே ஆகும். அரிசி, கோதுமையில் அரசு உபரியாக 20 மில்லியன் டன்னைத் தன் கையிருப்பில் வைத்திருக்கிறது. இவற்றை ஏன் சந்தையில் நேரடியாக விற்கவில்லை என்று தெரியவில்லை. அப்படியே விற்றாலும் அவை மீண்டும் கொள்முதல் நிலையங்கள் வழியாக அரசுக் கிடங்குகளுக்கே வந்துவிடும் என்ற அச்சம் இருந்தால், குறைந்தபட்ச ஆதரவு விலையிலேயே மக்களுக்கு விற்றிருக்கலாம். இது செயற்கையாக ஏற்றப்பட்டுள்ள புன்செய் தானியங்களின் விலையைக் குறைப்பதுடன், இந்த அளவுக்கு உணவு தானியத்தைக் கிடங்கில் வைத்து, பராமரிக்கும் செலவைக் கணிசமாகக் குறைத்திருக்கும். உபரியாக இருக்கும் தானியங்களை அரசு ஏற்றுமதிகூடச் செய்யலாம்.

ஒரு டன் கோதுமை இப்போது சர்வதேசச் சந்தையில் 285 டாலர் முதல் 290 டாலர் வரையில் விற்கப்படுகிறது. இதன் குறைந்தபட்ச ஆதரவு விலை 225 டாலர். பாசுமதி அல்லாத அரிசி ஒரு டன் ரூ.24,000 என்ற விலையில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதே வேளையில், இதே ரக நெல்லின் விலை குவிண்டாலுக்கு ரூ.1,600தான். குறைந்தபட்ச ஆதரவு விலை ரூ.1,310. இவற்றைவிட்டால் மிஞ்சுவது பழங்களும் காய்கறிகளும்தான்.

### இதை எப்படித் தீர்ப்பது?

பிரச்சினை எதுவென்றால் அரசின் கொள்கைதான். விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்ய முடியாது. எல்லா மாநிலங்களிலும் சந்தையில், கட்டாயக் கொள்முதல் (லெவி) அளவு மிக அதிகமாக இருக்கிறது. குஜராத் மட்டும்தான் விதிவிலக்கு. அங்குதான் தரகு வியாபாரிகளின் கமிஷன் குறைவாக இருக்கிறது. வேர்க்கடலை அல்லது பருத்தியைக் கொள்முதல் செய்தால் குஜராத் தரகர் 100 ரூபாய்க்கு வெறும் 50 பைசாவைத்தான் தரகாகப் பெற்றுக்கொள்கிறார். இது சதவீதக் கணக்கில் வெறும் 0.5%. குஜராத்தைப் பொருத்தவரை இந்தத் தரகு, இதர கட்டணம் என்று எல்லாவற்றையும் கூட்டினாலும் அது 3%-க்கு மேல் போவதில்லை. பஞ்சாபில் தரகருக்குத் தர வேண்டியதே 2.5%. இதர கட்டணங்களெல்லாம் சேர்ந்து கோதுமைக்கும் நெல்லுக்கும் அவற்றின் விலையில் 14.5% வந்துவிடுகிறது.

பழங்கள், காய்கறிகள் விஷயத்தில் இது மேலும் மோசம். டெல்லி ஆசாத்பூர் மண்டியில் 6%-ம் மும்பையின் வாஷி மார்க்கெட்டில் 8%-மாக இருக்கிறது. அதிகாரபூர்வமற்ற முறையில் இதுவே சமயங்களில் 10% முதல் 14% வரையில் இருக்கிறது.

**வேளாண் விளைபொருள் விற்பனை கமிட்டியின் விதிமுறைகளை** அடிப்படையாகக் கொண்ட அடித்தளக் கட்டமைப்புகளில் மாற்றியமைக்காமல் பழங்கள், காய்கறிகள் விலையில் உங்களால் எந்த மாற்றங்களையும் செய்துவிட முடியாது. மத்திய அரசு இதற்கு மாநிலங்கள் மீதும் எதிர்க்கட்சிகள் மீதும் பழியைப் போடலாம். காலத்துக்கு ஒவ்வாத வேளாண் விளைபொருள் சந்தைக் குழுச் சட்டங்களையும் மண்டிகளின் அதிகபட்சத் தீர்வைகளையும் மத்திய அரசு தன்னுடைய நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களிலும் தங்களுடைய கட்சி ஆட்சி செய்யும் மாநிலங்களிலும் மாற்றியிருக்கலாமே?

தோட்டக்கலைப் பொருள்களை அப்படியே வயலிலிருந்து எடுத்து நேரடியாக நுகரும் இப்போதைய வழிமுறைகளில் நாமும் சில மாறுதல்களைச் செய்துகொள்ள

வேண்டும். வெங்காயம், தக்காளி இவற்றில் இதை முதலில் தொடங்க வேண்டும். சந்தைச் சீர்திருத்தங்களையும் மேற்கொள்வது அவசியம். வேளாண் விளைபொருள்களை வாங்கிப் பக்குவப்படுத்தவும் பதப்படுத்தவும் நேரடியாக விவசாயிகளிடமிருந்தே கொள்முதல் செய்வதற்கேற்ற வகையில் நடைமுறைகளை அரசு திருத்த வேண்டும்.